
கல்கி
KALKI 30.8.98 ரூ. 4.50
நாற்காலி மீது கண்?

1714 பக்கம்

ரூ.160

மட்டுமே

20ம் பதிப்பு

**Integrated Enterprises (India) Ltd.**

அவர்களின் உதவித்தொகையுடன்


வர்த்தமானன் வழங்கும்

**English-English-Tamil Dictionary.**

**ரூ.200 மதிப்புள்ள இந்நூல் ரூ.160 மட்டுமே.**


மேலும் இச்சலுகையுடன் இலவசமாக ரூ.60 மதிப்புள்ள

**Letter writing for All Occasions தரப்படும்.**




1714 பக்கம் கொண்ட மிகப் பெரிய அளவில் அமைந்தது. ஓர் இலட்சத்திற்கும் மேலான விளக்கச் சொற்களுடன் கூடியது. ஒவ்வொரு பிரதான சொல்லுக்கும் மிகத் துல்லியமாக-தெளிவாகப் புரியும் வண்ணம் தமிழில் உச்சரிப்புக் கொடுத்துள்ளோம். உச்சரிப்பில் இதுவரை யாரும் செய்யாத புதிய அணுகு முறையை இதில் காணலாம்.! ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கிலத்திலும் தமிழிலும் பொருள் உண்டு. Synonyms & Antonyms - ஒத்த கருத்துடைய & எதிர்மறைச் சொற்கள் Proverbs - பழமொழிகள் Prepositions-இடைச்சொற்கள், Pairs of words - குழப்பம் தராத வகையில் சில சொற்களின் விளக்கங்கள், Abbreviations-சுருக்கக்குறியீடுகள் Physics, Chemistry, Botany, Mathematics, Zoology ஆகியவற்றில் வழங்கும் சொற்களை அந்தந்தத் தலைப்புகளில் காணலாம். அன்றாடம் பயன்தரக்கூடிய சொற்களை தனிப் பட்டியலிட்டுள்ளோம். வீட்டுப் பொருள்கள், மரம், செடி, கொடிகள், காய்கறிகள், பூக்கள், வாசனைப் பொருள்கள், உடலின் உறுப்புகள், உடற்குறைகள், நோய்கள், உறவு முறைகள், பூச்சிகள், விலங்குகள், பறவைகள், நீர்வாழ்வன, நவமணிகள் ஆகிய அனைத்தும் உண்டு. நாள்தோறும் புதிய புதிய சொற்களுடன் வளரும் பொலிவு மிக்கது ஆங்கில மொழி! எனவே புதிய சொற்கள் கடைசியில் இடம் பெற்றுள்ளன.

**இலவசம்**




## Letter Writing For All Occasions (பக்கம் 452)

1. Invitations 2. Congratulations 3. Condolence 4. Enquiry 5. Complaints 6. Apology 7.Real Estate 8. Day-to-day affairs 9. Educational Instituions போன்ற 22 தலைப்புகளில் அமைந்த 180 கடிதங்கள்! **தமிழ் மொழிப்பெயர்ப்புடன்.** வாய்ப்பைத் தருவது கடிதம்; வாணிபம் பெருக்குவது கடிதம்; பிறர் உதவியை நாடுவது கடிதம்; பிறர் கண்ணீர் துடைப்பது கடிதம்; விருந்துக்கு அழைப்பது கடிதம்; வருவேன் என்பது கடிதம்; வாரேன் என்பது கடிதம்; புத்தகம் அனுப்புக என்பது கடிதம்; இதோ அனுப்பி விட்டோம் என்பது கடிதம்; இதுவரை யாரும் காட்டாக் கலையினை, இந்நூல் மூலம் உணர்க.

முக்கிய புத்தகக் கடைகளில் இச்சலுகையில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ், 141. உஸ்மான் ரோடு. தி.நகர், சென்னை - 17 என்னும் முகவரிக்கு எழுதுக. V.P.P.யில் அனுப்புகிறோம். V.P.P.செலவு (20/-) தனி

INTEGRATED ENTERPRISES (INDIA) LIMITED

5-A, 'Kences Towers', No. 1, Ramakrishna Street, North Usman Road, T. Nagar, Chennai - 600 017.

INTEGRATED E-SHARE Faster. Easier. Safer.

DELTAGRAM

**தமிழகத்தின் முக்கிய புத்தகக் கடைகளில் கிடைக்கிறது**

# கோவை குண்டுவெடிப்பை மையமாக்கி நிறைய கதைகள் வந்து விட்டன... - இது ஒரு சோகமான உண்மைக் கதை!



கடந்த பிப்ரவரி மாதம் 14-ம் தேதி. கோவை ஆர்.எஸ்.புரத்தில் கடைகளுக்குக் காளான் சப்ளை செய்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஸ்ரீதரும் அவரது நண்பர் சிவகுமாரும் குண்டு வெடிப்பில் சிக்கினார்கள். (அத்வானிக்காக வைக்கப்பட்ட குண்டுகளுள் ஒன்று.) சிவகுமார் ஸ்தலத்திலேயே இறந்து விட, ஸ்ரீதருக்கு வலது காலில் கடும் பாதிப்பு. நினைவு தப்பி விழுந்தவர் பிறகு பிழைத்தெழுந்தது தெய்வாதீனம்.

"ஆனா, நான் ஏன் பிழைச்சேன்? சிவனேன்னு செத்தே போயிருக்கலாம்" என்று குமுறுகிறார் ஸ்ரீதர்.

காளான் வளர்க்கும் தம் தொழிலை மேலும் விஸ்தரித்து, பெரிய தொழிலதிபராகும் கனவுடன் இருந்த சிவகுமாருக்கு இன்று கஷ்டத்துக்கு மேல் கஷ்டம். காரணம், குண்டு!

பண்ணையைத் தொடர்ந்து நடத்த முடியாமல் மாதக் கணக்கில் படுத்த படுக்கையாகக் கிடந்ததால் கடன்களை அடைக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார். மருத்துவச் செலவும் அலைச்சலும் வேறு கழுத்தை நெறிக்கின்றன...

"குண்டு வெடிப்புல அடிபட்டவங்களுக்கு இலவச சிகிச்சைன்னு சொன்னாங்க. ஆனா கோவை கே.ஜி. ஆஸ்பத்திரியில, எனக்குப் பட்ட அடிக்கு வெறும் மாவுக்கட்டுப் போட்டு அனுப்பிட்டாங்க. அப்புறம் ரெண்டு முறை போய்க் காட்டினேன். குணமாகலை. பதிலா, வலி கூடுதலா பிடிச்சு. எலும்பு கூடவே இல்லை! 'இதுக்கு மாவுக்கட்டு உதவாது. நீங்க நர்ஸிங் ஹோம்

கல்கி இன்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com ஈ மெயில்: kalki@md2.vsnl.net.in



''சம்பளம் உயர்த்திய பிறகும் பல்லக்குத் தூக்கிகள் எதற்காக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் மன்னா!''

''எல்லாம் உன்னால்தான் ராணி! சீக்கிரம் உன் எடையைக் குறைத்துத் தொலை!''

— ஞா. ஞானமுத்து

போயிடுங்க. சர்ஜரி செய்ய வேண்டி இருக்கும்'னு சொல்லிட்டாங்க.

''ஆபரேஷன்னா, எக்கச்சக்கமா செலவாகுமே? என்னை மாதிரி சாதாரணப் பட்டவங்க என்ன செய்ய முடியும்? 'கலெக்டர் எழுத்து மூலமா அனுமதி கொடுத்தால்தான் அரசு உதவி கிடைக்கும்'னு சொல்லிட்டாங்க. சர்ஜரிக்கான பரிந்துரையை அரசு மருத்துவமனை டீன்தான் அளிக்கணும். அவர்கிட்ட போனேன். எலும்பு சிகிச்சைத் துறை மேலிடத்துக்குப் போகச் சொல்லிட்டாரு. அங்க ஒரு பத்து நாள் அலைக்கழிச்சுட்டு ''சர்ஜரி தேவையில்லை''ன்னு சொல்லிட்டாங்க. மறுபடி கலெக்டரிடம் போனேன். ஜி.எச். டீன் ரெகமண்ட் பண்ணாம, நான் ஒண்ணும் செய்ய முடியாது'ன்னு சொல்லிட்டாரு. ஆனா, ரொம்பக் கேட்டுக்கிட்டப்புறம் ரோட்டரி கிளப் மூலமா மருத்துவச் செலவை ஏத்துக்க செய்யறேன்னு சொன்னார்.

''ஆனா, ஆபரேஷன் முடியற வரைக்கும் எந்த உதவியும் வரலை. கடன் வாங்கித்தான் செய்ய வேண்டியதாப் போச்சு. இப்ப தடி ஊன்றி மெதுவா நடக்க முடியுது. முழுக்க குணமாக ஒரு வருஷம் ஆகும்னு சொன்னாங்க.''

பழைய கடன், மருத்துவத்துக்கான கடன், பிற ஆஸ்பத்திரி செலவுகள் எல்லாம் சேர்ந்து இந்த இருபது வயது வாலிபரை ரூ. 75,000க்குக் கடனாளியாக ஆக்கி இருக்கின்றன.

காளான் வளர்ப்பு மூலம் பெரிய தொழிலதிபராக ஆக வேண்டும் என்கிற கனவுக்கு உரமாக, தனிப்பட்ட முறையில் எம்.பி.ஏ. படிப்புக்கு வேறு சேர்ந்திருந்தார் ஸ்ரீதர். இப்போது அதுவும் அந்தரத்தில்!

அரசு உதவியாக இதுவரை (குண்டு வெடித்ததும்) ரூ. 10,000 மட்டுமே கிடைத்திருப்பதாகச் சொன்ன ஸ்ரீதர், ''குண்டு வெடிப்புல நான் இறந்திருந்தாலாவது என் குடும்பத்துக்கு இரண்டு லட்சம் கிடைத்திருக்கும். அவங்களாவது கஷ்டமில்லாம இருந்திருப்பாங்க. இப்ப நானே எனக்கும் என் குடும்பத்துக்கும் பாரமாகி நிற்கிறேனே!'' என்று கலங்குகிறார்.

ஆங்காங்கே எத்தனை ஸ்ரீதர்கள் இருக்கிறார்களோ! கலைஞர் கவனிக்க வேண்டும்!

— கா. சு. வேலாயுதன்

**இசையை எதிலிருந்தும் வரவழைக்க முடியும் என்பதற்கு உதாரணமாக இத்தாலி நாட்டைச் சேர்ந்த இசைக்குழு ஒன்று, காற்றடிக்கப்பட்ட ரப்பர் டியூப்களில் கயிறு, கம்பி மூலம் இசையை மீட்டி நிரூபித்திருக்கின்றனர்! ஸ்கூட்டர், கார் மற்றும் லாரி டியூப்களின் மூலம், விதவிதமான இசையை வரவழைக்கும் இக்கலைஞர்களின் நிகழ்ச்சியைக் காண ஐரோப்பாவில் ஏகப்பட்ட கூட்டம்!**

**— பாரீஸ் பார்த்தசாரதி**





• நாலே வாத்தியம்: படு இனிமை!



• கிராமிய, இசைக்கேற்ற இனிய நடனம்...

# காஸா லாமேய் சிங்கேய்...

பட்டிக்காடா? பட்டணமா? என்று நம்மூரில் பரீட்சை வைத்துக் கொண்டிருக்கையில் பூட்டானிலிருந்து பத்துப் பேர் சத்தமில்லாமல் வந்து நாட்டுப்புற இசையால் சென்னையைக் குளிப்பாட்டி விட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்திய கலாசார உறவு மையம் நாரதகான சபாவில் இந் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டுப்புற இசை என்றதும் தவில், உறுமி, தாரை, தப்பட்டை என்று கற்பனை செய்து கொண்டு போனவர்களுக்கு நிச்சயம் ஏமாற்றம்தான். டிராம்யென் (கிதார்), லிம் (புல்லாங்குழல்), யாங்ச்சென், சேவாங் (தம்புரா) என நான்கு வகையான இசைக்கருவிகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. இதில் பெரிய ஆச்சரியம், காதை செவிடாக்குகிற தடார், புடார் இல்லாமல் மெல்லிய அசைவுகளுடன் நடனம், காதுக்கு இனிமையான மென்மையான இசை. அதிலும் யாங்ச்சன் என்கிற கருவியிலிருந்து எழும் ''டிங் டிங் டிங்'' ஓசை இனிமையோ இனிமை. ''காஸா லாமேய் சிங்கேய்'' என்கிற காதல் பாடலும் ''யாக்லெக்பேய் லாடர்'' என்கிற பாடலும் இன்னும் காதுக்குள் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இடையில் நான்குவித இசைக்கருவிகளையும் தனியே இசைத்துக் காண்பித்தார்கள்.

மண்ணின் பாடல்களுக்கு என்றுமே தனி மகத்துவம் இருக்கத்தான் செய்கிறது என்பதை இந்தப் பாடல்களைக் கேட்கும்போது புரிந்தது. பாடல்களில் பொதுவாய் பூடான் நாட்டைப் பற்றியும் காதலையும் தவிர வேறு அம்சம் எதுவும் இல்லை.

பொதுவாகவே, பூட்டான் என்றதுமே லாட்டரிச் சீட்டுதான் ஞாபகத்துக்கு வரும். இனி இந்த இசையும்!

— கே. பாலசுப்ரமணியன்

படம்: எஸ். சங்கரலிங்கம்

இந்தப் படத்தில் ஹீரோ. அடுத்தப் படத்தில் வில்லன். இன்னொரு படத்தில் கௌரவத் தோற்றம். வேறொரு படத்தில் இரு ஹீரோக்களுள் ஒருவர். அட, இங்கே அப்பா ரோல்! 'என்ன மனுஷன்யா இவன்! புரிஞ்சிக்கவே முடியலையே?' - ரசிகர்கள் மட்டுமல்ல; திரையுலகமும் திகைக்கும் ஒரு வினோதக் கலைஞர் பிரகாஷ் ராஜ்.

சினிமாவைப் பற்றி, நடிப்பு பற்றி, வெற்றி - தோல்விகள் பற்றி சில முற்றிலும் மாறுபட்ட அபிப்பிராயங்கள் வைத்திருக்கிறார் பிரகாஷ் ராஜ். சமீபத்தில் கிடைத்த தேசிய விருதோ, வருஷம் தவறாமல் கிடைத்து விடுகிற ஏதாவது ஒரு மாநில விருதோ இவரைக் கிறுகிறுக்க வைத்து விடவில்லை. மாறாக, இன்னும் பர்ஃபெக்ஷன், இன்னும் பர்ஃபெக்ஷன் என்று கிடந்து தவிக்கிறார். சென்ற வாரத்தின் ஒரு பிற்பகலில் விருகம் பாக்கத்திலுள்ள அவரது வீட்டில் சந்தித்துப் பேசியபோது, இவரால் எப்படி கோடம் பாக்கத்தில் ஒரு நடிகனாக நிலைத்திருக்க முடிகிறது என்கிற சந்தேகம்தான் எழுந்தது!

**"எப்படி இருக்கிறீர்கள் பிரகாஷ் ராஜ்?"**

"ஃபைன் என்று மொத்தமாகச் சொல்லிவிடுவதில் பொய் நிறைந்திருக்கும். ஓரளவு நன்றாகவே இருக்கிறேன். இடைவிடாத படப்பிடிப்புகளால் கொஞ்சம் களைத்திருக்கிறேன். மற்றபடி மனத்தில் உற்சாகத்துக்குக் குறைவில்லை."

**"களைப்புக்கு இடைவிடாத படப்பிடிப்புகள் மட்டும்தான் காரணமா? சமீபகாலத்தில் வெளியான உங்களது படங்களின் தொடர் தோல்விகள் காரணமில்லையா?"**


"நிச்சயமாக இல்லை! தோல்வி, வருத்தம் தரும்தான். ஆனால் அதற்குமேல் ஒன்றுமில்லை! அதை ஒரு பொருட்டாக நான் கருதுவதில்லை. வருத்தப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்க எனக்கு நேரமில்லையே! கிட்டத்தட்ட பதினெட்டுப் படங்களில் கமிட் ஆகியிருக்கிறேன். இரவு பகலாக ஷூட்டிங். இதோ, ஓர் அவுட்டோர் படப்பிடிப்புக்கு கிளம்பிக் கொண்டிருக்கிறேன். முந்தைய தோல்விகள் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் பிழைக்க முடியாது அல்லவா?"

**"சரிதான். ஆனால் ஒன்று கவனித்தீர்களா? உங்களது மிகச் சிறந்த படங்கள் என்று வர்ணிக்கப்படுகிறவைதாம் தோல்விப் படங்களாக இருக்கின்றன. உதாரணமாக டூயட், இருவர், விடுகதை, கல்கி..."**

"என் அளவில் ஓர் அதிர்ஷ்டம். நான் நடிக்கிற படங்கள் தோல்வியடைந்தாலும் என் நடிப்பு சிலாகிக்கப்படுவதில் குறையே இருப்பதில்லை. அடுத்தடுத்த வாய்ப்புகளிலும் குறை இருப்பதில்லை. ஆனால் இருவர், கல்கி மாதிரியான படங்கள் தோல்வி அடைகிறபோது, காரணம் பிடிபடமாட்டேனென்கிறது. அந்தப் படங்களுக்காக



எடுத்துக் கொண்ட சிரமமும் செய்த உழைப்பும் செலவிட்ட திறமையும் – நான் என்னைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. அந்தப் படங்களில் பணியாற்றிய அத்தனை கலைஞர்களையும் எண்ணிப் பாருங்கள்! மாறுபட்ட ஒரு விஷயத்துக்கு – அது எத்தனைதான் சிறப்பாகச் சொல்லப்பட்டிருந்தாலும் – அங்கீகாரம் பெறுவதென்பது இங்கே பெரிய விஷயமாக இருப்பது ஆச்சர்யமாக இருக்கிறது! அதே சமயம் இன்று 'சொல்லாமலே', 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' மாதிரி வேறு கோணங்களில் சிறப்பாகவே



# ஒரு நாவலில் இரண்டு திருட்டா?

வந்திருக்கும் படங்களும், வெற்றியடையத்தான் செய்கின்றன. இதிலிருந்து 'நல்ல படம் எடுத்தால் ஜெயிக்கும் அல்லது ஜெயிக்காது' என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாத நிலை! இந்தத் துறையில் வித்தைகள் புரிந்த பலருக்கே இது புரியாத விஷயமாகத்தான் இருக்கிறது. இந்தப் புதிர் நீங்கினால் ஒருவேளை சினிமா மேல் இருக்கும் மயக்கமே நீங்கி விடுமோ என்னவோ?''



**''உங்களைப் பற்றிச் சொல்லுங்கள். அடிப்படையில் நீங்கள் ஒரு ஜர்னலிஸ்ட் அல்லவா?''**

''அடிப்படையில் நான் யார் என்பது இன்றுவரை எனக்கே குழப்பம்தான்! பெங்களூர்க்காரனான நான், சிறு வயதிலேயே என்னவாக ஆவது என்கிற குழப்பத்தில் நிறையத் தடுமாறியிருக்கிறேன். பிள்ளைகளுக்கு என் தந்தையால் சரியான தொரு பாதை அமைத்துத் தர இயலாத சூழ்நிலையில் சிரமப்பட்டு படிப்பில் கவனம் செலுத்தினேன். என் அம்மா ஒரு நர்ஸாக இருந்தார். எனக்கோ, படிப்பு வெறி. இன்னதென்று ஒரு வரையறை இல்லாமல் கிடைத்த எல்லா புத்தகங்களையும் படித்தேன். உலக இலக்கியங்களில் ஆர்வம் ஏற்பட்டது. எழுத்து, கவிதை, நாவல் என்று மனம் ஒரு பாதையைத் தேர்ந்தெடுக்க, ஜர்னலிஸம் படித்தேன். டிப்ளோமா கோர்ஸ்! பத்திரிகையாளனாகப் பணியாற்றுவதா? அதுதான் நான் ஆக விரும்பியதா? ஒரு கட்டத்தில் சட்டென்று டெக்னிகல் லைனில் புகுந்தேன். எடிட்டிங் கற்றுக் கொண்டு ஃபிலிம் எடிட்டிங் கொஞ்ச நாள் முயன்று பார்த்தேன். பிறகு நடிக்கிற முயற்சி, ஆர்வம். சென்னைக்கு வந்த போது என்னிடம் இருந்தது வெறும் நூற்றைம்பது ரூபாய்தான்! ஒன்றை ஒப்புக் கொள்ள வேண்டும். இந்தத் துறை என்னைப் பல விதத்தில் செதுக்கியிருக்கிறது! எனக்கு வாய்த்த இயக்குநர்கள் என்னைச் செதுக்கி ஒரு உருவம்

கொடுத்திருக்கிறார்கள். பாலசந்தர், மணிரத்னம் மாதிரியானவர்களிடம் பணிபுரிந்தபோது என் ஆர்வத்துக்குச் சரியாகத் தீனி போட்டார்கள். இமேஜ் வளையங்களில் சிக்கி விடக் கூடாது என்கிற என் முடிவுக்கும் பக்கபலமாக இருந்தன, அவர்கள் தந்த கதாபாத்திரங்கள்.''

**''என்னதான் பெரிய இயக்குநர்கள் உங்களைச் செதுக்கியிருப்பதாகக் கூறினாலும் சமீபகாலமாக உங்களுடையது 'ஓவர் ஆக்டிங்' என்று விமர்சிக்கப்படுகிறதே? உங்கள் படங்களின் தொடர் தோல்விக்கு அதுவும் ஒரு முக்கியக் காரணம் என்று சொல்லலாம் அல்லவா?''**

''ஒரு விஷயம். ஓவர் ஆக்டிங் என்பது தவறல்ல! நன்கு நடிக்கத் தெரிந்த ஒருவனால்தான் மிகையாகவோ, குறைத்தோ நடிக்க முடியும். 'ஓவர் ஆக்டிங்' என்பதையும் ஒரு கலையாக அறிமுகப்படுத்தியவர் சிவாஜிகணேசன். சின்னச் சின்ன அசைவுகளில்கூட அவர் அதை வெளிப்படுத்துவார். ரசிக்கவில்லையா அவற்றை? விஷயம் என்னவென்றால், ஒரு நடிகனை அவனிஷ்டப்படி நடிக்கவிட்டால் இது போன்ற



**“ என் சிறப்பான படங்களைக் கவனியுங்கள். அவை எல்லாமே தேர்ந்த இயக்குநர்களின் கைப்பாவையாக இருந்து நான் நடித்தவையாக இருக்கும். ”**

பிரச்னைகள் வரத்தான் செய்யும். கன்ட்ரோலை இயக்குநர் வைத்திருக்க வேண்டும். பிரகாஷ் ராஜுக்கு ஒரு செல்வாக்கு வந்து விட்டதா? இனி அவரை நாம் ஒன்றும் 'ஷேப்' பண்ண முடியாது; இஷ்டப்படி நடிக்கட்டும் என்று இன்றைய இயக்குநர்கள் என்னை என் வழியில் விட்டு விடுகிறார்கள். என்னை, என் வழியில் விட்டால், படத்தில் பிரகாஷ் ராஜ்தான் இருப்பான். குறிப்பிட்ட அந்தக் கதாபாத்திரம் இருக்காது! சினிமா ஒரு டீம் ஒர்க். தனிப்பட்ட ஒவ்வொருவரும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டே இருந்தால் படத்தில் பாத்திரங்கள் அடி வாங்கும். இதைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். நான் டைரக்டர்களின் நடிகன். என் சிறப்பான படங்களைக் கவனியுங்கள். அவை எல்லாமே தேர்ந்த இயக்குநர்களின் கைப்பாவையாக இருந்து நான் நடித்தவையாக இருக்கும். எனது மோசமான படங்கள் – நடிப்பு சரியில்லை, ஓவர் ஆக்டிங் என்று எவற்றைச் சொல்கிறீர்கள்? அவை யாவும் நானாக, என் இஷ்டத்துக்குச் செய்ய வேண்டியதாக அமைந்த படங்கள்தாம்!''

**''இந்தத் தோல்விகளால் உங்கள் தனி வாழ்க்கை பாதிக்கப்படுகிறதா?''**

''அதற்கு நான் அனுமதிப்பதில்லை. என் வீடு, என் மனைவி, குழந்தை, பெற்றோர் – இந்த உலகம் என் தொழில் ஏற்ற இறக்கங்களால் பாதிக்கப்படுவதை நான் விரும்புவதில்லை. ஒரு கணவனாக, மகனாக, தகப்பனாக என் கடமைகளிலிருந்து தவறுவதில்லை.''

**''ஆனால் உங்கள் குடும்பத்தின் மீதுள்ள அதீத 'அட்டாச்மென்ட்' காரணமாக வீட்டிலேயே அதிக நேரத்தைக் கழித்து, படப்பிடிப்புகளுக்குத் தாமதமாக வருகிறீர்கள் என்று குற்றம் சாட்டுகிறார்களே? உங்கள் வீடு, தொழிலை பாதிப்பது மட்டும் சரியா?''**

''இன்றைய என் நிலைக்கு நான் கொடுத்திருக்கிற விலை மிக அதிகம். தொடக்கத்தில் மூன்று வருடங்கள் நாயாய், பேயாய் உழைத்தேன். ஷூட்டிங் தவிர வேறு சிந்தனையே எனக்குக் கிடையாது. நண்பர்களை இழந்தேன். உறவினர்களின் அதிருப்திக்கு ஆளானேன். என் தனிப்பட்ட விருப்பமான கவிதையை இழந்தேன். இன்னும் எத்தனையோ! சோறு, தண்ணீர் பற்றிக்கூடக் கவலைப்படாமல் நடித்துக் கொண்டிருந்தேன். ஆனால், ஒரு கட்டத்தில், 24 மணி நேர நடிப்பு என்பது மிகவும் சலிப்பு தரக் கூடியதாக மாறி விட்டது. மனம், காதலுக்காக ஏங்கியது. ஒரு காதலி கிடைத்தாள். திருமணத்துக்குப் பின் தனி வாழ்க்கைக்கென்று கொஞ்சம் நேரம் வேண்டி

யிருக்கிறது. என் குழந்தையை அரை மணி கொஞ்சாமல் இருக்கிற ஒரு காலை வேளையை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை! எல்லாம் முடித்துவிட்டு ஒன்பது, ஒன்பதரைக்கு படப்பிடிப்புத் தளத்துக்குப் போகிறேன். இது தவறு என்றால் என்னால் இந்தத் தவறைத் தவிர்க்க முடியாது; ஸாரி! அவுட்டோர் போனால் பிரச்னையே இல்லை. நடு ராத்திரி கூப்பிட்டாலும் நடிக்கத் தயார்!"

**"போகட்டும். சமீபத்தில் என்ன படித்தீர்கள்?"**

இருக்கிறது. மொழி இன்னும் முழுப் பரிச்சயமாகவில்லையே! அப்படியும் விடவில்லை. ஜானகிராமன், ஜெயகாந்தன் நாவல்களை என் நண்பர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்பேன். அப்படித்தான் சமீபத்தில் ஜெயகாந்தனின் 'கோகிலா என்ன செய்து விட்டாள்?' என்கிற நாவலைக் கேட்டுக் கொண்டிருந்தேன். தூக்கி வாரிப் போட்டது எனக்கு. சமீப காலத்தில் வெளியாகி, பேசப்பட்ட இரண்டு தமிழ்ப்படங்களுக்கான 'நாட்' இந்த நாவலிலிருந்தே திருடப்பட்டிருப்பதைக் கண்டு கொண்டேன்! அடப்பாவிகளா என்று மனதில் நினைத்துக் கொண்டேன். என்றாவது ஒருநாள் சம்பந்தப்பட்ட நபர்களைச் சந்திக்க நேர்ந்தால் கேட்கத்தான் போகிறேன்! ஒரு நாவல் படித்தபோதே அதிலிருந்து இரண்டு திருட்டு செய்யப்பட்டிருப்பதைக் கண்டு பிடிக்க முடிந்தது என்றால், நான் இன்னும் படிக்க வேண்டியவை எத்தனை! கண்டுபிடிக்க வேண்டியவை எத்தனை! (சிரிக்கிறார்) நேரம் போதவில்லை சார்! தினசரி பேப்பர் படிக்கக்கூட நேரம் இருப்பதில்லை. எனக்கோ, பொழுது விடிந்தால் உலகச் செய்தி முழுக்கத் தெரிந்தாக வேண்டும்!

**"இன்றைய என் நிலைக்கு நான் கொடுத்திருக்கிற விலை மிக அதிகம். நண்பர்களை இழந்தேன். உறவினர்களின் அதிருப்திக்கு ஆளானேன். என் தனிப்பட்ட விருப்பமான கவிதையை இழந்தேன். இன்னும் எத்தனையோ!"**



"God of small things. புக்கர் பரிசு வாங்கி விட்டது இந்த நாவல். இதைப் பாராட்டாதவர்களே கிடையாது. தமது முதல் நாவலிலேயே அருந்ததிராய் எங்கேயோ போய் விட்டார் என்றார்கள். மிக ஆர்வத்துடன் படித்தேன். ஆனால் அவ்வளவாக என்னைக் கவரவில்லை. அது ஒரு மோசமான நாவல் இல்லைதான். சிறந்தது என்றும் சொல்ல மாட்டேன்."

**"தமிழில் படிக்கக் கற்றுக் கொண்டு விட்டீர்களா?"**

"ஐயோ! நேரம் கிடைக்கவில்லையே சார்! தமிழ் இலக்கியங்களைப் படிக்க எக்கச்சக்கமாக ஆர்வம் மெனக்கெட்டு என் கம்ப்யூட்டரில் அதற்காகத்தான் இன்டர்நெட் வசதி இணைத்திருக்கிறேன். ஆனால் உட்கார்ந்து புரட்ட நேரம் தான் வசப்படவில்லை!"

**"உங்கள் குடும்பம் பற்றிச் சொல்லுங்கள். மண வாழ்க்கை நிறைவாக இருக்கிறதா?"**

"பரவாயில்லை. ஆரம்பத்தில் கொஞ்சம் friction இருந்தது. ஓரிரு வருடங்கள் தடுமாறினேன். நான் வளர்ந்த கலாசாரம் வேறு. என் மனைவியின் கலாசாரம் வேறு. என் வேகம், நோக்கம், முயற்சி இதையெல்லாம் அவளும் அவளுடைய அபிலாஷைகளை நானும் புரிந்து கொள்வதில் நிறைய பிரச்னைகள் வந்தன. ஆனால் என் மகள் பிறந்ததும் ஒரு அன்பான கமிட்மென்ட் எங்கள் இருவருக்குமே ஏற்பட்டு விட்டது. சின்ன விஷயங்கள் பெரிது படுத்தப்படாமல் பார்த்துக் கொள்கிறோம். இதோ இன்னொரு முறை அப்பாவாகப் போகிறேன்! உறவு மேலும் இறுகி விடுமல்லவா?"

— ஔரங்கசீப்
படங்கள்: ஸ்ரீஹரி

# டிகிரியா? வெறும்

கடற்கரைப் பக்கம், பூங்காக்கள் பக்கம்.. இல்லையா? ஜஸ்ட் மொட்டை மாடிகளில்.. இப்போதெல்லாம் பெரும்பாலும் காலை வேளைகளில் கல்லூரி வயசுப் பெண்கள் இவ்விடங்களில் புத்தகங்களுடன் உலவுவதை சென்னையில் அதிகம் பார்க்க முடிகிறது.

"என்னங்க, காலேஜ் போகலையா?" என்று கேட்டுப் பாருங்கள். "காலேஜா? நானா?" என்று கலங்காமல், "கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில் படிப்பதாகச் சொல்லுவார்கள்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழிப் பிரிவில் வருடத்துக்கு வருடம் நூற்றுக்கணக்கானோர் வழக்கத்தை விடக் கூடுதலாகவே சேர்வதாகப் புள்ளி விவரம் தருகிறார் அப் பல்கலை ஊழியர் ஒருவர்.

+2 வில் மார்க் குறைந்தோர் மட்டுமே அஞ்சல் வழி பட்டப் படிப்பில் சேருவது என்கிற நடைமுறை மாறி விட்டது. நல்ல மதிப்பெண் பெறும் பல இளைஞர்கள் – அதிகம் பெண்கள்– இன்று அஞ்சல் வழியையே நாடுகிறார்கள்.

காரணம்?

"வெறும் டிகிரிக்கு மதிப்பே இல்லை. காலேஜ் போய் நேரத்தை வீணாக்குவதை விட கரஸ்பாண்டன்ஸில் டிகிரி படித்துக் கொண்டு, side by side கம்ப்யூட்டர் கோர்ஸில் சேர்ந்து ஒரு டிப்ளமோ வாங்கிடணும்" என்கிற வெறி, பலருக்கு.

நிஜமாகவே டிகிரிக்கு மதிப்பு அம்போ தானா? எத்திராஜ் கல்லூரி மாணவிகள் சிலரைக் கேட்டோம்.

• வித்யா



வித்யா என்கிற மாணவி, "அதுதான் சார் உண்மை! வெறும் டிகிரியால் ஒரு பைசா பிரயோஜனமில்லை! நீங்க சொன்னீங்களே, பார்க்ல உலாவிட்டிருக்கற பெண்கள்.. அவங்க எல்லாம் சிஏ., ஐசிடபிள்யூஏ., இல்லாட்டா கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்கறவங்களா இருப்பாங்க. என்னையே எடுத்துக்கங்க. நல்ல கம்ப்யூட்டர் கோர்ஸ்ல இடம் கிடைக்கலை. அதனால்தான் இப்ப பி.காம்., பண்ணிட்டிருக்கேன். கிடைச்சதும், இதை விட்டுட்டு ஓடியே போயிடுவேன்" என்று போட்டார் ஒரு போடு!

"ஒண்ணு புரிஞ்சுக்கங்க. டிகிரி வாங்கறது மட்டும் படிக்கறதோட நோக்கம் இல்லை. வேலைக்குப் போகணும்; சம்பாதிக்கணும். நான் பகுதி நேரமா கம்ப்யூட்டர் படிச்சிட்டிருக்கேன். என் எதிர்கால உத்தியோகத் தேவையை அது பார்த்துக்கும். டிகிரியும் இருந்தா வசதின்னு தான் இங்க படிக்கறேன்" என்றார் ஷோபா.

பி.எஸ்ஸி., கணிதம் பயிலும் அருள்மொழி, "வெறும் பி.எஸ்ஸி., பிரயோஜமில்லை. மேல எம்.எஸ்ஸி., படிச்சி, ஒரு எம்.ஃபில் முடிச்சா டீச்சர் வேலைக்கு ட்ரை பண்ணலாம். ஆனா, என்ன பெரிசா சம்பாதிச்சிட முடியும்? வருமானம்தானே முக்கியம்? நான் இதை நம்பலை. பார்ட் டைமா கம்ப்யூட்டர் கோர்ஸ் பண்றேன்" என்றார்.

கம்ப்யூட்டர் வகுப்பு பயின்றால் வேலை



• அருள்மொழி

# வெஸ்ட்!



• ஷோபா

• ஐஸ்வர்யா

• ராதிகா

ஐடன்டிடி வேணாம்?"

ஆனால், தினசரி கல்லூரி அனுபவங்கள், வாழ்வின் இனிமையான தருணங்கள், கிண்டல், கேலி, ஜாலி எதுவும் இப்படி முழு நேரம் – பகுதி நேரம் என்று நாளைப் பிரித்துக் கொண்டு படிக்கும் போது அடிபட்டு விடுமே?

நாம் பேசிய வரையில் எந்த மாணவியுமே 'ஜாலி'க்கு அத்தனை முக்கியத்துவம் தர விரும்பவில்லை என்பது புரிந்தது. "ஜாலி இல்லாமல் என்ன? அப்பப்ப அனுபவிச்சுக்க வேண்டியதுதான். அது மட்டுமா வாழ்க்கை?" என்று படு பிராக்டிகலாகப் பேசினார் ஷோபா.

சம உரிமை, சொந்தக் கால், மேல் படிப்பு, தொழிற்கல்வி என்று பேசினாலும் திருமணத்துக்குப் பின் வேலைக்குப் போக வேண்டாம் என்று கணவன் சொல்லி விட்டால்?

"இந்தக் காலத்துப் பையன்கள் அப்படி இல்லைன்னு நினைக்கறேன். ஒருவேளை அப்படித்தான் இருப்போம்னு அடம்பிடிச்சாங்கன்னா..."

கடைசி வரி 'பஞ்ச்'சுக்காகக் காத்திருந்தோம். கோரஸான குரலில் சொன்னார்கள் :

"எதிர்த்துப் போராட வேண்டியது தான்!" ●

— நாஞ்சில் ரமேஷ்

படங்கள் : ஸ்நேகிதன்

வாய்ப்பு கலயம் என்று பரவலாக அனைத்துப் பெண்களுமே நினைப்பது புரிந்தது. ஆனால் ஆயிரக்கணக்கில் அல்லவா அதற்குச் செலவழிக்க வேண்டி வரும்?

"ஆமா சார்! செலவுதான். இருந்தாலும் படிச்சு முடிச்சதும் சம்பாதிச்சிடலாமே? இப்பல்லாம் வெறும் டிகிரி படிச்ச பொண்ணுன்னா கல்யாணம் பண்ணிக்க வர்ற பசங்க எக்கச்சக்கமா வரதட்சணை கேக்கறாங்களாம்! கம்ப்யூட்டர் படிச்சா கன்ஸஷன் கிடைக்குதாமே?" என்று ராதிகா தமாஷாகக் கேட்டாலும், "வெறும் டிகிரி வாங்கிட்டு, அதிகம் படிச்ச பையனைக் கல்யாணம் பண்ணிட்டு, அவனோட ஆளுமையின் கீழ் கஷ்டப்படறதா வாழ்க்கை?" என்று ஒரு பிரச்னையை எழுப்பினார் ஐஸ்வர்யா.

"என்னோட ஆசை எம்.பி.பி.எஸ். சேரணும்னு. சீட் கிடைக்கலை. ஸோ வாட்? பி.எஸ்ஸி., நியூட்ரிஷன் கோர்ஸ் பண்றேன். சைடுல கம்ப்யூட்டர் கோர்ஸ். நமக்கொரு

**கேப்டன் லக்ஷ்மி சேகல். வயது எண்பத்தி நாலு. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய ராணுவத்தின் மகளிர் பிரிவான ராணி ஜான்சி ரெஜிமென்ட்டில் தளபதியாய்ப் பணியாற்றியவர். இப்போது கான்பூரில் வசித்து வருகிறார். அண்மையில் தமிழ்ப்புத்தகாலயம் ஏற்பாடு செய்த ஒரு நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதற்காகச் சென்னை வந்திருந்தார். தமது சகோதரரும், பிரபல வழக்கறிஞருமான கோவிந்த் சுவாமிநாதன் இல்லத்தில் தங்கியிருந்த கேப்டன் லக்ஷ்மி சேகலைச் சந்தித்தபோது, உற்சாகமாகப் பேசினார். பேட்டியிலிருந்து...**

"நான் பிறந்து, வளர்ந்தது எல்லாம் சென்னையில்தான். மிக வசதியான குடும்பம். பிரபல வழக்கறிஞராக இருந்த அப்பாவுக்கு பிசியான பிராக்டிஸ். நான், என் சகோதர, சகோதரிகள் என்று நாலு பேருமே கான்வென்ட்டில் படித்துக் கொண்டிருந்தோம். திடீரென என் அம்மாவுக்கு (அம்மு சுவாமிநாதன்) காந்திஜிமீது அபிமானம் ஏற்பட, ஒரே நாளில், வீடு சுதேசி மயமானது. வீட்டில் இருந்த விதேசிப் பொருட்களுக்கு விடைகொடுக்கப்பட்டது. கான்வென்ட் படிப்பு நிறுத்தப்பட்டு, வேறு பள்ளிக்கு நாங்கள் மாற்றப்பட்டோம். குயின் மேரீஸ் கல்லூரியில் இன்டர் முடித்த பின், சென்னை மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். முடித்தேன். கோஷா ஆஸ்பத்திரியில் கொஞ்சகாலம் வேலைகூடப் பார்த்தேன்."

"நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தில் சேரும் ஆர்வம் எப்படி ஏற்பட்டது?"

"சென்னையில், ஆஸ்பத்திரியில் பணி புரிந்து கொண்டிருந்த சமயம். இரண்டாம் உலகப் போரின் காலகட்டம். மருத்துவம் படித்தவர்களை, ராணுவ சேவை புரிய கட்டாயப்படுத்தப் போகிறது பிரிட்டிஷ் அரசு என்று பேச்சு அடிபட்டது. பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்ந்து, பணிபுரிய எனக்குத் துளியும் விருப்பமில்லை.

"அந்தச் சமயம் சிங்கப்பூரில் இருந்த என் உறவுக்காரப் பெண்மணி ஒருவர், கருவுற்று இருந்தார். டாக்டரான நான் அவருடன் இருந்து பார்த்துக் கொண்டால் சௌகரியமாக இருக்கும் என்று கூறி அவர் அழைக்கவே, நான் சிங்கப்பூர் சென்றேன்.

"நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், இந்திய தேசிய ராணுவத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன், தேசப்பற்று கொண்ட இந்தியர்கள் பலரும் அவர் பின்னால் அணி திரண்டனர். சீக்கிரமே ஐ.என்.ஏ.வின் பலம் இரண்டு மடங்கானது. பெண்கள் பலரும் ஐ.என்.ஏ.வில் சேர ஆர்வம் காட்டியதால், நேதாஜி 'ராணி ஜான்ஸி ரெஜிமெண்ட்' என்ற பெயரில் பெண்கள்



படைப் பிரிவு ஒன்றையும் ஐ.என்.ஏ.வின் அங்கமாய்த் துவக்கினார். நானும் ஐ.என்.ஏ.வில் சேர்ந்தேன். நேதாஜியை சந்திக்க விருப்பம் தெரிவித்தபோது, ஐ.என்.ஏ.வின் அதிகாரி ஒருவர் அதற்கு ஏற்பாடு செய்தார். என்னுடன் நேதாஜி ஐந்து மணி நேரம் பேசினார். இந்திய சுதந்தரம் பற்றியும் அதற்கு ஐ.என்.ஏ. செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் அவர் பேசிய பேச்சு உணர்ச்சி பொங்க வைக்கும் ஒன்று! அது என் வாழ்க்கையின் ஒரு திருப்பு முனையான கட்டம் என்று சொல்லுவேன்!

"ஜான்சி ராணி ரெஜிமெண்ட்டில் பதினெட்டு முதல் இருபத்தி ஐந்து வயதுடைய

பெண்களை மட்டுமே சேர்த்துக் கொள் வோம். நேதாஜியின் பேச்சைக் கேட்க, நாற்பது வயதுப் பெண்மணிகள் சுமார் நாற்பது பேர், தொடர்ந்து வந்து கொண் டிருந்தார்கள். வயது வரம்பு விதியின் காரணமாக அவர்களை ஐ.என்.ஏ.வில் சேர்த்துக் கொள்ள வழி இல்லை என்று நேதாஜி சுட்டிக் காட்டினார். 'நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராட வழியில்லாமல் போனாலும் பாதகமில்லை. உங்கள் கேம்ப் களில் இருந்து கொண்டு சமையல் போன்ற பணிகளைச் செய்கிறோம்' என்றனர். இனி யும் அவர்கள் ஆர்வத்துக்குத் தடை போடு வது சரியில்லை என நினைத்த நேதாஜி, அப்பெண்கள் ராணி ஜான்சி ரெஜிமெண்ட் டின் சமையல் முதலிய பணிகளில் ஈடுபட அனுமதி வழங்கினார். அவர்களில் பெரும் பாலானவர்கள் தமிழ்நாட்டுப் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

"ஐ.என்.ஏ.வில் பெண்களுக்கும் கடுமை யான ராணுவப் பயிற்சிகள் அளிக்கப்பட் டன. உடற் பயிற்சி, ஆயுதப் பயிற்சி, உரையாட, உத்தரவிட பயன்படுத் தப்பட்ட இந்துஸ்தானி மொழிப் பயிற்சி, இந்திய, உலக வரலாறு, கணிதம் போன் றவை மட்டுமின்றி கொரில்லாப் போர்ப் பயிற்சி முறையும் கூடக் கற்றுத் தரப்பட் டது. பர்மா காட்டுப் பகுதியில், கொரில் லாப் போர் முறையில் பிரிட்டிஷ் துருப்புக் களைத் தாக்கியதும், வேறு ஒரு சமயம், எங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது, பதுங்கு குழிகளில் மறைந்து தப்பித் ததும் மெய்சிலிர்க்க வைக்கும் அனுபவங் கள்!

"பர்மாவிலிருந்து, இம்பாலைநோக்கி, ஐ.என்.ஏ. முன்னேறிக் கொண்டிருந்த நேரம், கடும் மழைக்காலம். எங்கள் வீரர்களுக்கு மலேரியாவும், வயிற்றுப் போக்கும் வந்து பெரும் அவதிப்பட்டனர். நான் போர்ப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டே, உடல் நலம் குன்றிய வீரர்களுக்கு மருத்துவ உதவிகளையும் கவனித்துக் கொண்டேன். இரவு, பகல் தூங்காமல் பணியாற்றிய நாட் கள் அவை.

"போரில் காயமடைந்த வீரர்கள் சுமார் முப்பதுபேருக்கு காட்டில் மறைவான இடம் ஒன்றில் முகாம் அமைத்து சிகிச்சை அளித் துக் கொண்டிருந்தபோது, திடீரென்று தாக்குதல் நடந்தது! நோயில் துவண்டிருந்த எங்கள் வீரர்களால் தப்பித்துப் போக முடிய வில்லை. மூன்றுபேர் ஸ்தலத்திலேயே மரண மடைந்தனர். மற்றவர்களைப் பாதுகாப்பாக மறைத்து வைத்து, தாக்குதல் ஓய்ந்தபின் மாட்டுவண்டியில் ஏற்றி, வேறு இடத்துக்கு அழைத்துக் கொண்டு போனோம். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் செயல் பட்டோம்!

"கடைசியில் பிரிட்டிஷ் ராணுவத்திடம் நானும், இன்னும் சிலரும் சிக்கிக் கொண்ட போது, கைது செய்யப்பட்டோம். ஒற்றைப் பெண்மணியான என்னை என்ன செய்வது என்று அவர் களுக்குப் புரியவில்லை. முதலில் ஜெயிலில் வைத்திருந்துவிட்டு, அடுத்து ரங்கூனில் விடுதி ஒன்றில் காவலில் வைத்தார்கள். ஐ.என்.ஏ.வில் தீவிரமாக ஈடு பட்டத் தொடங்கிய பின் இந்தியாவில் என் குடும்பத்தினருடனான எனது தொடர்பு விட்டுப் போய்விட்டது. அதன் பின் 1946ல்தான் நான் இந்தியாவுக்கு அனுப் பப்பட்டேன்.

"சில வருடங்களுக்கு முன்பு, தஞ்சை போயிருந்தபோது ஒரு சிறு கிராமத்தில், நான் வந்திருக்கும் செய்தி அறிந்து, ஒரு முதிய பெண்மணியை அழைத்து வந்தார் கள். அவர் என்னைக் கண்டதும் பாசம் பொங்க 'லட்சுமீ...' என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தார். நான் காமாட்சி என்று அழைத்து அவரை அணைத்துக் கொண் டேன்! என்னோடு, ராணி ஜான்சி படையில் பணியாற்றிய பெண்மணி அவர்!" ●

# கொரில்லா யுத்தம்!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படம்: **ஸ்ரீஹரி**

# குறையொன்றுமில்லை

'மழையுள் எழுந்த முக்குள்போல் வையம்' என்றார்கள்!

மழை பொழிந்துகொண்டே இருக்கும். சின்னதாக எழுந்து, பெரிதாக மாறி நீர்க் குமிழிகள் உடனே அப்படியே வெடித்துப் போய்விடும். அவ்வளவுதான் இந்த உலகமே! மின்னல் இருக்கிற காலம் கூட அதற்குக் கிடையாது. ஆகையினாலே, அகங்கார, மமகாரத்தை அறவே அறுத்தெறிந்து இறைவனடியை நாம் சேர வேண்டும்.

ஈர்க்கின்ற இந்த உலகத்தை நாம் ஏற்கவும் வேண்டும்; ஆனால் பற்றும் வைக்கக் கூடாது.

இந்த சரீரம் நமக்கு வேண்டுமா...?

வேண்டும்!

பெரிய கப்பல் ஒன்று சமுத்திரத்திலே இருக்கிறது... அது ஒரு இடத்திலேயிருந்து இன்னொரு இடத்துக்குப் போனால்தானே வாணிபம் பெருகும்...? உலகத்திலே பல காரியங்கள், அந்தக் கப்பல் போவதால்தானே நடக்கிறது? எதிலே போகிறது அந்தக் கப்பல்...? ஜலத்திலே போகிறது. ஆனால்.... அதே ஜலம் கப்பலுக்குள் வரலாமா...?!



அது போன்றுதான் நாம்... இந்த உலகில் இருக்கலாமா? என்றால் இருக்கலாம். ஆனால் இந்த உலகியல் வஸ்துக்கள் நம்முள் நுழையவிடலாமா...? நுழைந்தால், அந்தக் கப்பலுக்கு என்ன கஷ்டமோ அதே கஷ்டம்தான் நமக்கும்!

'சம்ஸார ஜலதி' என்றே பெயர்! இந்த சம்ஸாரத்தை அனுமதித்தால், கப்பல் எப்படி மூழ்குகிறதோ, அப்படியே நாமும் மூழ்குகிறோம். மறுபடியும் நமக்குக் கதி இல்லை.

இதிலே இருக்க வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை... இதிலே இருந்து கொண்டே, 'எல்லாம் அவனுடையது' என்று நினைக்க வேண்டும்.

கரகமாடக்கூடியவரை வாசலிலே பார்க்கலாம். கையிலே தட்டு வைத்துக் கொண்டிருப்பார். அதிலே விபூதி, குங்குமம் எல்லாம் வைத்துக் கொண்டு, காலிலே சதங்கை கட்டிக் கொண்டு, தலையிலே வரிசையாகப் பானைகள் அடுக்கிக் கொண்டு, பக்கத்திலே வாத்தியம் வாசிக்க.... அதற்கேற்ப நாட்டியம், பாட்டு எல்லாம் நடக்கும். சுற்றிலும் ஜனங்கள் வட்டமாக நின்றபடி அதைப் பார்ப்பார்கள்.

அப்போது ஒருவர் வந்து, தட்டிலே ஒரு ரூபாய் நோட்டைப் போட்டு, தாம் விரும்பும் சில்லறையைக் கேட்பார்.

ஆடிக் கொண்டிருப்பவர் சில்லறையை எண்ணி எண்ணிக் கொடுப்பார். ஆனால் அவர் எண்ணம், அவர் மனது எங்கே இருக்கிறது...?

தலையிலே இருக்கிற கரகங்கள் கீழே விழுந்து விடாமல் இருக்க வேண்டுமே என்பதிலே இருக்கிறது மனம்!

இதெல்லாம் நடந்து கொண்டிருக்கும்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

- விபூதி கொடுப்பது, குங்குமம் கொடுப்பது, சில்லறை கொடுப்பது– எல்லாமே தாளத்துக்கு ஏற்ப நடக்கிறது.

அந்த மாதிரிதான் நாம் இந்த உலகத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். மனைவி மக்களைப் போஷிக்கிறோம். குடும்பத்தை ரஷிக்கிறோம். பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணுகிறோம். எத்தனையோ தர்மங்களெல்லாம் பண்ணுகிறோம். இது மொத்தமும் விபூதி கொடுக்கிற மாதிரி, குங்குமம் கொடுக்கிற மாதிரி, சில்லறை கொடுக்கிற மாதிரிதான். ஆனால் நம் மனம் எங்கே இருக்க வேண்டும்...? பகவத் சரணாரவிந்தத்திலேயே இருந்து கொண்டிருக்க வேண்டும். அதிலேயிருந்து விடுபட்டு, 'நாம் பண்ணுகிறோம் இதையெல்லாம்...' என்கிற நினைவு வந்தால் போச்சு! அது நமக்கு நல்லதல்ல. மேலே இருக்கிற கரகங்களெல்லாம் கீழே விழுந்ததென்றால் ஆட்டத்துக்குப் பெருமை உண்டோ...? அதனால் நம் ஸ்ம்ருதியானது பகவத்சரணாரவிந்தத்தை விட்டு நழுவி விட்டதென்றால், நமக்கு வாழ்வு ஏது...!

பகவத் சரணாரவிந்தத்தை விட்டு விட்டு சாமான்ய விஷயங்களில் நாம் ஈடுபட்டோமானால், பிரயோஜனமில்லை. ஆகையினால் சாமானிய விஷயங்களில் பற்று வைக்கலாகாது. அதே போல் இதராளுடைய பொருளுக்கு நாம் ஆசைப்படக் கூடாது.



**சா**தாரணமாக மற்றவர் பொருளுக்கு ஆசைப்படுவதென்பது ரொம்பத் தப்பு - ஆததாயி என்று சில பேருக்குப் பெயர். ஆததாயியாக ஒருவன் இருந்து விட்டானா

னால் அவனை விசாரிக்காமலே சிக்ஷிக்கலாம் என்கிறார் மனு. எதற்காக அவன் அந்தத் தப்பைப் பண்ணினான் என்று கேள்வியே கிடையாது!

ஒரு வீட்டிலே ஒருத்தர் நெருப்பை வைக்கிறார் – ஏன் நெருப்பை வைத்தார் என்பதற்குக் காரணம் கிடையாது! ஒருத்தருக்கு இன்னொருத்தர் விஷம் கொடுத்தார் என்று வைத்துக் கொள்வோம்... ஏன் கொடுத்தார் என்று கேட்டுக் கொண்டா இருக்க முடியும்...? – இவரும் சிக்ஷைக்கு உரியவர்.

எப்போது பார்த்தாலும் கையிலே ஆயுதம் வைத்துக் கொண்டிருப்பவர். இவ்வாறு வைத்திருப்பது ரொம்பத் தப்பு – இத்தகையவரும் சிக்ஷைக்கு உரியவர்.

இதரர்களின் பொருளை அபகரிப்பவர். இதரர்களின் நிலத்தை அபகரித்தல், மற்றவர்களுடைய பத்னியை அபகரிப்பவர் – இவர்களுக்கெல்லாம் ஆததாயி என்று பெயர்.

ஆகையினாலே, பிறருடைய பொருளுக்கு ஆசைப்படாதே! உனக்கு என்ன உண்டோ அதை அனுபவி. மற்ற விஷயங்களுக்கு ஆசைப்படாதே.

– இதைத்தான் பரமாத்மா கிருஷ்ணனே சொல்கிறான். 'பல தடவை நான் வணங்குகிறேன். – இவர்களையெல்லாம் நான் வணங்குகிறேன்...' என்கிறான்.

யாரை...?

தனக்குக் கிடைத்ததைக் கொண்டு சந்துஷ்டி அடைபவர்களை 'நான் வணங்குகிறேன்' என்கிறான்.

பகவான் வணங்கக்கூடிய பெருந்தன்மையுடையவர்கள் யார் என்றால், இதரர்களுக்கு வரும்படியான பெருமையைப் பார்த்து அசூயைப்படாதவர்கள். அப்படிப்பட்ட தூய உள்ளங்களை அவன் நேசிப்பான். என்ன நமக்கு உண்டோ, அதுதான் கிடைக்கும். அதற்கு மேற்பட்டு எகிறிக் குதித்தாலும் கிடைக்காது!

சாஸ்திரம் என்ன சொல்கிறது...? ஒரு குழந்தை கர்ப்பத்திலே உற்பத்தியாகிறது. அது பிறக்கிறது. அதற்குப் புண்யாஜாதிகள் எல்லாம் பண்ணுகிறோம். அது என்ன குழந்தை என்று பார்த்து ஆனந்திக்கிறோம். குழந்தைதான் நமக்குத் தெரிகிறதேயொழிய, குழந்தையோடு பிறக்கிற வேறு ஐந்து விஷயங்கள் நமக்குத் தெரிவதில்லை.

ஆனால், குழந்தையோடு வேறு ஐந்து விஷயங்கள் பிறக்கின்றன என்கிறது சாஸ்திரம். என்ன உண்டாகின்றன...?

ஆயுள் : இவ்வளவு வயது வரை அந்தக் குழந்தை இருக்கும் என்பது ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் அந்தக் குழந்தையுடனேயே ஜனிக்கிறது!

என்ன செய்து அந்தக் குழந்தை இவ்வுலகிலே ஜீவிப்பான்...? அவனுக்கு என்ன விருத்தி இவ்வுலகிலே அமையும் என்பதும் நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது.

வித்யா – இவ்வளவு கல்வி அவனுக்கு வாய்க்கும். அதற்கு மேல் எகிறிக் குதித்தாலும் வராது!

வித்தம் – இவ்வளவு பொருள் அவனுக்கு இருக்கும் என்பதும் நிர்ணயிக்கப்பட்டதுதான்.

விதரம் – இன்றைய தினத்தில் சரீரம் விடுக்கிற வியோகம் ஏற்படும் – இதுவும் நிர்ணயிக்கப்பட்டதுதான்!

கர்ப்பத்தில் இருக்கிறபோதே ஒரு குழந்தையுடன் இந்த ஐந்தும் ஜனிக்கிற காரணத்தினாலே, அதற்கு மேல் எதுவுமே நமக்கு வராது... இதை நாம் உணர்ந்து விட்டோமானால், வீணான விஷயங்களில் நம் மனம் போகாது.

ஆகையினாலேதான் பரமாத்மா சொல்கிறார் : தனக்குக் கிடைத்ததைக் கொண்டு சந்துஷ்டி அடைகிறானே ஒருவன், அவனைப் பார்த்து பரமாத்மா கொண்டாடுகிறார். நான் விழுந்து அவனை சேவிக்கிறேன்...' என்கிறார்!

பகவானே நமஸ்கரிக்கிறேன் என்று

## அருள்வாக்கு

ஸாதாரணமாகவே ஒரு இயக்கத்துக்கு அது சொல்கிற எதிர்ப்புக் கார்யத்தை வைத்துத்தான் பொதுஜன ஆதரவு கிடைக்கிறது; இந்த அளவுக்கு அது விதிக்கிற விதிகளுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. 'வெள்ளைக்காரனை விரட்டு' என்று காந்தி சொன்னதால் எல்லாரும் அவர் கீழே எதிர்ப்புக் கார்யத்தில் ஒன்று சேர்ந்தார்கள். ஆனால் அவர் விதித்த அஹிம்ஸை, ஸத்யம், ஒழுக்கம், ஈச்வர பக்தி முதலானதை எத்தனை பேர் எடுத்துக் கொண்டார்களென்று பார்த்தால் வருத்தமாகத்தான் இருக்கும். வெள்ளைக்காரனிடம் ஏன் நாம் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதாக, அந்நிய ஆட்சியின் அதர்மத்துக்காக அவ்வளவு இல்லாமல், நம்முடைய ஸ்வேச்சா ஸ்வதந்த்ரங்களில் ஆசையால்தான் பெரிய போராட்டம் நடத்தியது. அந்த காந்தியே நம்மை சில தர்மங்களில் கட்டுப்படுத்துகிறார்



என்னும்போது அவற்றை ஏற்றுக் கொள்ள மனஸ் இல்லை. பொதுவாக நம்முடைய தப்பை உணர்ந்து நம்மைத் திருத்திக் கொள்வதைவிட, பிறன் தப்பைச் சொல்லி எதிர்ப்பதில்தான் நமக்கு ருசி. நானே உங்களிடம் நாஸ்திகத்தையோ, கன்வர்ஷனையோ எதிர்த்துக் கூட்டம் போடுங்கள் என்று ஒரு வார்த்தை சொன்னால் உடனே பெரிசாக மஹாநாடு நடத்திக் காரஸாரமாகப் பேசி, தீர்மானங்கள் நிறைவேற்றுவீர்கள்; அதுவே, சாஸ்த்ர ஆசாரப்படி இப்படி இப்படி இருங்கள் என்று ஓயாமல் சொன்னாலும், கேட்கத் தோன்றுகிறதா?

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.**

சொல்கிறானென்றால், அந்தப் பரமாத்மாவுக்கு எவ்வளவு சந்தோஷம் ஏற்படுகிறது என்று பார்த்துக் கொள்ளுங்கள்!

ஒரு வியாபாரி - ஒரே பிள்ளை அவனுக்கு. தனக்குப் பிறகு இந்த வியாபாரம் எப்படி நடக்கும்? பிள்ளை அதைச் சீராக நடத்துவானா...? கெடுத்து விடுவானா...? அதைப் பரீட்சை பண்ணிப் பார்க்க, கல்லா பெட்டியைத் திறந்து, அந்தப் பிள்ளையினிடத்திலே கொஞ்சம் பணத்தைக் கொடுத்தான். ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்... முழுசாக, பளபளவென்று ஒரு நோட்டு!

இந்தக் குழந்தை இதுவரை பணத்தைப் பயன்படுத்தி அறியாதவன். ரொம்பச் செல்லமாக வளர்த்திருந்தான். ஆனால் வியாபாரி அவன் கையிலே பணத்தைக் கொடுத்து, நீ என்ன பண்ணுகிறாயோ பண்ணு... என்று பொறுப்பை ஒப்படைத்து விட்டான்.

அந்தப் பையன் நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு நீள போய்க் கொண்டேயிருக்கிறான். வீதி வழியாக நடக்கிறான்.

எதிரே ஒருத்தர் வருகிறார். அவர் ஒரு கிழிந்த காகிதத்தைக் கையிலே வைத்துக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்.

இவன் பேசாமல் இருக்கலாம் அல்லவா..? அவரைப் பார்த்து, "சுவாமி! தேவரீர் கையிலே என்ன அது...?'' என்று கேட்கிறான்.

அதற்கு அவர் சொல்கிறார்:

"இது விலை மதிப்பில்லாதது!''

''அப்படியானால் நான் இதைக் கொடுக்கிறேன். நீர் அதைக் கொடுக்கிறீரா...?''

அவர் பார்த்தார்... 'இன்றைக்கு நரி முகத்திலேதான் விழித்திருக்கிறோம்!'' என்று நினைத்து அந்த நூறு ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்டார். அந்தக் கிழிந்த காகிதத்தைக் கொடுத்துவிட்டார்! அதைப் பார்த்தால் அதில் என்னவோ எழுதியிருக்கிறது.

''சுவாமி! இதிலே என்ன எழுதியிருக்கிறது? அதைப் படியுங்களேன்...'' என்றான் அவன்.

'ஒரு மனிதனுக்கு என்ன பிராப்தம் உண்டோ அதை அவன் கட்டாயம் அடைவான்' என்று எழுதப்பட்டிருந்தது. 'தேவதைகளேயானாலும் இதிலிருந்து விதிவிலக்கு இல்லை.'

'ஓஹோ! அப்படியா' என்று காகிதத்தை வாங்கிக் கொண்டவன் கிடுகிடுவென்று அப்பாவிடம் வந்து அதை வைத்தவுடனே-

'என்னது அதிலே...?' என்று அவர் கேட்கிறார்.

'நீங்கள் கொடுத்ததற்கு இதை வாங்கி வந்தேன்...' என்கிறான் அவன்!

'பளாரெ'ன்று ஒன்று கொடுத்தார் அந்தப் பிள்ளைக்கு!

இதுவரைக்கும் ரொம்ப செல்லமாக வளர்த்த குழந்தை. அடித்ததே கிடையாது. இப்போது ஓங்கி ஓர் அறை!

அடிக்காத அப்பா திடீரென்று அடித்தவுடனே திக்பிரமை ஏற்பட்டுவிட்டது அவனுக்கு. பிரமை பிடித்து ஊரை விட்டே ஓடிப்போய் விட்டான்.

பல ஊர்களைத் தாண்டி பெரிய ராஜதானி— அங்கே போய் ஒரு வீட்டு வாசலிலே திண்ணையிலே உட்கார்ந்து கொண்டான்.

அந்த வீட்டை உடையவர், 'நீ யாரப்பா? புதிதாக இருக்கிறாயே...?' என்று கேட்கிறார்.

இவன் என்ன பதில் சொன்னானாம்... 'ப்ராப்தவ்ய மர்த்தம்' (பிராப்தம் என்னவோ அதுவே நடக்கும்) என்று பதில் சொன்னானாம்! எதைக் கேட்டாலும் அவன் பிராப்தவ்ய மர்த்தம் என்றே பதில் சொன்னானாம்! அதனாலே ஊரில் இருப்பவர்கள் எல்லோரும் அவனை பிராப்தவ்ய மர்த்த பைத்தியம் என்றே அழைக்க ஆரம்பித்தார்கள்... அவனுக்கு வேண்டியதையெல்லாம் கொடுத்து வந்தார்கள்...

கதை இதோடு முடிந்துவிடவில்லை...

(தொடரும்)



# உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்









கதை நெடுக ஒரு மென்மை, கவிதைத் தனம். காமெடியில் கூட ஆபாசமில்லை என்பது போனஸ்.

திருடனாக இருந்த கார்த்திக் ரோஜாவால் மனம் மாறுகிறார். சந்தர்ப்ப சூழலால் அனாதையாக்கப்படும் ரோஜாவின் பாட்டுத் திறமையை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார். ('பயணங்கள் முடிவதில்லை' படத்தின் உல்டா என்பது பளிச்சென்று தோன்றாதபடி சாமர்த்தியமாகக் கதை நகர்த்தப்படுகிறது!) அஜீத்தை ரோஜா விரும்புகிறார் என்பது தெரிந்ததும் தன் காதலை மனத்தில் பூட்டிக் கொள்கிறார் கார்த்திக். பின் ரோஜா மனம் மாறிப் பின்னவரை மணக்கிறார்.

கார்த்திக், அஜீத் இருவர் நடிப்பிலும் குறையில்லைதான். என்றாலும் பெருந்தன்மையை ஓவர்டோஸாக இருவருமே வழியவிடுகிறார்களா, திகட்டுகிறது.

''இனி குணச்சித்திர வேஷங்களில்தான் நடிப்பேன்'' என்ற ரோஜாவின் அறிக்கையைப் பார்த்துச் சிரித்த நீங்கள் இந்தப் படத்தைப் பார்த்தால் கப்சிப்தான்! நிஜமாகவே மணம் வீசுகிறார்.


முதல் சில ரீல்களில் வீட்டுக்குள்ளேயே கதை நகரும்போது ஒரு லேசான சலிப்பு ஏற்படுவது உண்மை. ஆனால் நாயகியின் பின்னணி மெல்ல மெல்ல விரிவதும், வீட்டை விட்டு அவள் வெளியேற்றப்பட்ட நிலையில் அவரது எதிரே கார்த்திக் வர, "இனி?" என்ற கேள்வியுடன் இடைவேளை விடப்படுவதும் நிமிர்ந்து உட்கார வைக்கின்றன.

ரோஜாவின் கதையை கார்த்திக் அறிந்து கொள்ளவும், கார்த்திக் மனதை ரோஜா உணரவும் பயன்படுவது டயரிதான். ஒன்றிற்காவது வேறு ஓர் உத்திக்கு மெனக்கெட்டிருக்கலாமே?

ராஜ்குமாரின் இசை, படத்திற்கு பலம். பொருத்தமான விதத்தில் படமாக்கியதற்கும் பாராட்ட வேண்டும்.

படம் கொஞ்சம் பொசுக்கென்று முடிந்துவிட்டது போல் தோன்றினாலும், வில்லன், ஸ்டண்ட் என்றெல்லாம் வழக்கமான அராஜகங்கள் இல்லாமல் இருப்பது ரொம்ப நேர்த்தி. பக்கத்தில் படம் ஓடினால் மிஸ் பண்ண வேண்டாம்.

— ஜி.







1998 ஆகஸ்ட் 30
வெகுதான்ய ஆவணி 14
மலர் : 57
இதழ் : 5

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.





## போயஸ் தோட்டத்து அணுகுண்டு!

சுதந்தரப் பொன்விழா நிறைவு கொண்டாட்டங்களின்போது, போக்ரான் பரிசோதனைகள் பெரிய சாதனையாக விளம்பரப்படுத்தப்பட்டன. ஆனால், அங்கு வெடித்த குண்டுகளையெல்லாம் விட அதிபயங்கரமானதொரு குண்டைத் தூக்கிப் போட்டு, நாட்டையே ஸ்தம்பித்துப் போகச் செய்து விட்டார் ஜெயலலிதா!

பிரதமருக்கு மிக நெருக்கமான இருவர் லஞ்சம் வாங்கியிருப்பதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார், அ.தி.மு.க தலைவர். அமலாக்கப் பிரிவு இயக்குனர் பெஸ்பரூவாவைப் பணி மாற்றம் செய்ய வேண்டும் என்பதற்காகத் தரப்பட்டது இந்த லஞ்சம் என்பது ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு.

ஜெயலலிதா காவிரி ஒப்பந்தத்தை எதிர்ப்பதும், அதன் விளைவாக பி.ஜே.பிக்கு அ.தி.மு.க ஆதரவு தொடராது என அவர் மிரட்டியதும், உடனே ஜார்ஜ் ஃபெர்னான்டஸும் பிரமோத் மஹாஜனும் அவரைப் பார்த்துப் பேச வந்ததும், அவர்கள் போயஸ் தோட்டத்தில் பந்தாடப்பட்டதும் இறுதியில் ஆதரவு வாபஸ் மிரட்டல் தாற்காலிகமாக மூட்டை கட்டி வைக்கப்பட்டதும் கடந்த ஒரு வாரத்தில் தமிழகத்தையும் தலைநகரையும் கலக்கிய சம்பவங்கள்.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்தாற் போல், பெஸ்பரூவாவின் பணி மாற்றமும் அறிவிக்கப்பட, அந்த நிகழ்ச்சியுடன் ஜெயலலிதா பெயர் தொடர்பு படுத்தப்பட்டதில் ஆச்சர்யமில்லை. ஜெயலலிதாவை பல்வேறு வழக்குகளிலிருந்து காப்பாற்றுவதற்காக, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை இந்தப் பணிமாற்றம் என்று எழுந்த பேச்சுக்களைத் தமது தரப்பிலிருந்து மறுத்ததோடு நிறுத்திக்




கொள்ளாமல், பிரதமர் பேரில் நேரடியாகக் குற்றம் சாட்டியுள்ளார் ஜெ!

ஜெயலலிதாவுக்குக் குற்றம் சாட்ட தார்மிக உரிமை இல்லாதிருக்கலாம்; ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு சாரமில்லாததாகவே இருக்கலாம்... ஆனால் அதில் சாரமில்லை என்று நிரூபிக்கும் பொறுப்பு பிரதமரிடம்தான் இருக்கிறது.

அரசியல் உலகில் அரங்கேறும் நிழல் நாடகங்கள் ஆதாரங்களுடன் நடப்பதில்லை என்பது அனைவரும் அறிந்ததே. அதனால், ஜெயலலிதா தம் பேரில் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு வாஜ்பாய் ஆதாரங்கள் கேட்பது உலகமகா ஜோக் போல தொனிக்கிறது.


சமீபத்தில், தமிழகத்தில் வருமான வரித் துறை அதிகாரிகள் பலர் ஒட்டுமொத்தமாகப் பணிமாற்றம் செய்யப்பட்டபோதே, அதன் பின்னணியில் அரசியல் நிர்ப்பந்தங்கள் இருப்பதாக பத்திரிகைகளில் பரபரப்பாக சர்ச்சை எழுந்தது.

அந்த சர்ச்சையின் சூடே இன்னும் அடங்கியபாடில்லை. அதற்குள் மத்திய அரசின் முக்கியமான பொருளாதாரக் குற்றங்களை ஆராயும் பொறுப்பில் உள்ள உயர் அதிகாரியையும், நிதித் துறைச் செயலர் முதலான அதிகாரிகளையும் அடுத்தடுத்து பணி மாற்றம் செய்தால் என்ன ஆகும்...?!

இது பேச்சுக்கு இடமளிக்கும்; அரசியல் ரீதியான எதிர்ப்பு பலமாக இருக்கும் என்பது ஏன் பிரதமரின் யோசனைக்கு எட்டவில்லை என்பது புதிராகவே இருக்கிறது.

இந்த நோக்கில் ஆராயும்போது, ஏதோவொரு நிர்ப்பந்தத்துக்குப் பணிந்துதான் பிரதமர் அலுவலகம் செயல்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு வலுப் பெறுகிறது.

அது என்ன நிர்ப்பந்தம்? ஜெயலலிதாவை 'மகிழ்விக்க' வேண்டும் என்ற நிர்ப்பந்தமா, அல்லது ஜெ. சொல்வதுபோல் ஒரு வலுவான பத்திரிகை நிறுவனத்தின் உரிமையாளர்களைக் 'காப்பாற்றும்' நிர்ப்பந்தமா...? அல்லது எந்த நிர்ப்பந்தமுமே இல்லாத வெறும் கண்மூடித்தனமான, ராஜதந்திரமற்ற அசட்டு நடவடிக்கையா...? பிரதமரின் 'ஆசியுடன்' நடைபெற்ற தவறா...? அல்லது அவர் அயர்ந்திருந்த




நேரத்தில் நிகழ்ந்துவிட்ட சதியா? ஜெயலலிதாவின் இரட்டை வேடத்தால் விளைந்துள்ள தர்மசங்கடமான நிலைமையா...? பி.ஜே.பி கட்சியினுள்ளே இருக்கின்ற பொறாமை- புகைச்சல்களினால் தூண்டப்பட்டிருக்கும் வாஜ்பாய் கவிழ்ப்பு முயற்சியா...?

கேள்விகளின் பட்டியல் நீள்கிறது. உச்ச நீதிமன்றம் இந்தப் பணிமாற்றங்களைக் கடுமையாகக் கண்டனம் செய்து அரசிடம் விளக்கம் கோரியிருக்கிறது. பிரதமர் தம் கௌரவத்தை மீட்க வேண்டிய ஒரு பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்.

அதற்கு ஒரு வழிதான் இருக்கிறது. 'ஜெ'யின் சவாலை ஏற்று, அவர் கோரும் சி.பி.ஐ விசாரணைக்கு உடனே வாஜ்பாய் ஒப்புக் கொள்ள வேண்டும். அந்த விசாரணைக்கு ஒரு குறுகிய காலக் கெடுவை அவரே நிர்ணயித்து, அதற்குள் அது முடிவடைந்து அறிக்கை வெளிவர முழு மூச்சுடன் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

இந்த சி.பி.ஐ விசாரணையில் எந்தவிதமான அரசியல் தலையீடும் இல்லாமல் பிரதமரே முன் நின்று கவனித்துக் கொள்ள வேண்டும்.

தோழமைக் கட்சிக்காரரானாலும் சரி, சொந்தக் கட்சிக்காரரானாலும் சரி...

விசாரணையின் முடிவுகளால் யார் பாதிக்கப்படுவார்கள் என்பதைக் குறித்து பிரதமர் சிந்திக்கவோ, கவலைப்படவோ கூடாது.

உண்மை முழுமையாக வெளிப்பட்டால் அதற்குத் துணை நின்ற பெருமையாவது பிரதமரைச் சாரும். மாறாக, இந்த விஷயத்தில் ஏதாவது சால்ஜாப்பு கூறி தட்டிக் கழிப்பாரானால், ஏற்கெனவே சரிந்து கொண்டிருக்கும் அவரது சுயகௌரவம், கட்சியினுடைய கௌரவம் எல்லாம் அதலபாதாளத்துக்குப் போய் விடும்.

இந்த விஷயத்தில் நடுநிலை வகிப்பதன் மூலம் அரசியல் தூய்மைக்கு வழி வகுக்கும் ஒரு திருப்புமுனைக்கு வாஜ்பாய் வித்திடலாம். ●

# சர்ச்சை கிளம்பினால் நான் என்ன செய்ய முடியும்?

**'விஜில்' அமைப்பு சென்ற வாரம் சென்னையில் நடத்திய, 'அணுகுண்டு சோதனைக்குப் பின் இந்தியா' என்ற கருத்தரங்கில் பேச வந்திருந்தார் பிரபல பத்திரிகையாளர் அருண்ஷோரி (57). இவர் எழுதிய அம்பேத்கர் பற்றிய நூல் பெரும் சர்ச்சைக்குள்ளானதை மறந்திருக்க மாட்டீர்கள். அருண்ஷோரியை அவர் தங்கியிருந்த நண்பர் வீட்டில் சந்தித்தோம்.**



**''நீங்கள் பத்திரிகையாளரானது எப்படி?''**

''நான் பார்த்து வந்த உலக வங்கி உத்தியோகம் எனக்குத் திருப்தியளிக்கவில்லை. எனவே அதை விட்டு விட்டேன். அதனைத் தொடர்ந்து எமர்ஜென்ஸியைக் கடுமையாய்த் தாக்கி எழுதினேன். எனவே எனக்கு வேறு வேலை தருவதற்கு யாரும் தயாராக இல்லை. 76ம் வருடம் கோயங்காவுடன் தொடர்பு ஏற்பட்டது. என் பத்திரிகைக்குத் துடிப்பான இளைஞர் ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கிறேன் என்றார் அவர். 'நான் வேலை தேடிக் கொண்டிருக்கிறேன்' என்றேன் நான். என்னை இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியராக்கினார்!''

**''எக்ஸ்பிரஸில், பல சிறப்பான புலனாய்வுக் கட்டுரைகளை நீங்கள் எழுதியிருக்கிறீர்கள் அல்லவா?''**

''ஆம்! ராம்நாத் கோயங்காவில் தொடங்கி எக்ஸ் பிரஸின் அனைத்துத் தரப்பினரும் இதற்கு என்னோடு ஒத்துழைத்தார்கள். இன்னொரு முக்கியமான விஷயம், எந்த ஒரு செய்தி என்றாலும், அதனை கவனமுடன் படித்து, ஆழமாய் அலசிப் பார்ப்பது என்பது என் பிறவிக் குணம். அதேபோல, ஒரு விஷயம் குறித்து, என்னிடம் ஏகப்பட்ட தகவல்கள் இருந்தாலும் அவை எல்லாவற்றையுமே நான் எடுத்த எடுப்பிலேயே வெளியிட்டுவிட மாட்டேன். முப்பது அல்லது நாற்பது சதவீதம் மட்டுமே வெளியிட்டு விட்டு, அதனைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து மறுப்பு அல்லது பாராளுமன்றத்தில் அது சம்பந்தமான விவாதம் வரும்போது, கைவசம் உள்ள மீதியை வெளியிடுவது என் பழக்கம்.''

**''ரகசியமான டாகுமென்ட்களைக் கைப்பற்றி, அவற்றை வெளியிடுவது என்பது சுலபமான பணியில்லையே! அவற்றை**



**எப்படிக் கைப்பற்றுகிறீர்கள்?"**

"எல்லா விஷயங்களையும் ரகசியமான டாகுமெண்ட்களைக் கைப்பற்றி அதன் அடிப்படையில்தான் எழுத வேண்டும் என்ற கட்டாயமில்லை. அரசாங்கத்தினால் சட்ட சபைகளில், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிற டாகுமெண்ட்களை கவனமாய்ப் படித்தாலே போதும். ஏகப்பட்ட ரகசியங்களை, பத்திரிகைகள் அம்பலப்படுத்தலாம்! அரசாங்க இயந்திரத்திற்கு உள்ளேயும், தவறுகள் நிகழும் போது, அதை ஜீரணித்துக் கொள்ள முடியாத நேர்மையான மனிதர்கள் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் மூலம், அரசின் பல தவறுகளும், ஊழல்களும் பத்திரிகைகளின் கைக்குக் கிடைப்பது உண்டு. போபர்ஸ் விவகாரத்தில், சம்பந்தப்பட்ட ஆவணங்களின் பிரதிகள், பைல், பைலாக பத்திரிகைகளுக்குக் கிடைத்தன. ஆக, புலனாய்வு செய்து விஷயத்தைக் கண்டுபிடிப்பதைவிட, அதனை ஆழமாய்ப் படித்து, அனலைஸ் செய்து, மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதுதான் முக்கியமானது."

**"இன்றைய ஜர்னலிசம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"**

"இன்றைய பத்திரிகை முதலாளிகளுக்கு, பத்திரிகை பற்றி அக்கறை கிடையாது. தங்கள் பேப்பரைக்கூட அவர்கள் முழுமையாகப் படிப்பது கிடையாது. பத்திரிகை ஆசிரியர்களுக்கோ, நள்ளிரவு வரை காக்டெயில் பார்ட்டிகளில் கலந்து கொள்ளவே சரியாக இருக்கிறது! ஆனால் ராம்நாத் கோயங்கா அப்படி இல்லை. அதிகாலையிலேயே இந்தியன் எக்ஸ்பிரஸை ஆழமாய்ப் படித்து விடுவார். எட்டு மணிக்குக் காலையில் அவரை நான் சந்திக்கிறபோது, நாட்டின் அத்தனை முக்கியப் பத்திரிகைகளையும் படித்துவிட்டிருப்பார். இந்தியன் எக்ஸ்பிரஸை எந்தெந்தப் பத்திரிகைகள் அன்று எந்தெந்த விஷயங்களில் விஞ்சியுள்ளன என்று அலசுவார். இன்றைய இளைய தலைமுறைப் பத்திரிகையாளர்களுக்கு எந்த விஷயம் பற்றியும் ஆழமான ஞானம் இல்லை. உதாரணமாய், காவிரிப் பிரச்னை பற்றி எத்தனை பேருக்கு முழுமையாய்த் தெரியும்? சுப்ரீம் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்ட வரைவுத் திட்டத்தை எத்தனை பேர் படித்திருப்பார்கள்?

"வார, மாதமிருமுறை வெளி வரும் வழுவழுப்பான பத்திரிகைகள், நாளிதழ்கள் தினமும் தருவதைத் தொகுத்துத் தருவதைவிட, வேறு உருப்படியாக எதையும் செய்வதில்லை!"

**"பத்திரிகைத் துறை வாழ்க்கையில் உங்களுக்கு ஏற்பட்ட மிகவும் திரில்லிங்கான**

அனுபவம் எது?"

"இந்திரா காந்தி படுகொலைச் சதி பற்றி ஆராய அமைக்கப்பட்ட நீதிபதி தக்கர் கமிஷனின் அறிக்கையில் யாரை சந்தேகத்துக்குரியவர் என்று குறிப்பிடப்பட்டதோ, அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல், தமக்கு நெருக்கமாக வைத்துக் கொண்டார் ராஜீவ் காந்தி. அதை, பத்திரிகையில் வெளியிட்டது தான் என் வாழ்க்கையின் மிகவும் திரில்லிங்கான தருணம். பத்திரிகையில் வெளியிட வேண்டிய விஷயம் தயாராகிவிட்டது. ஆனால் அதை, எக்ஸ்பிரஸின் பல்வேறு பதிப்பு அலுவலகங்களுக்கும், டெலக்ஸ் மூலம் அனுப்பினால், ரகசியம் வெளிப்பட்டு விடும் என்ற சூழ்நிலை. செய்தியின் புரோமைடு நகலை, பேக் செய்து விமானம் மூலம் ரகசியமாக எல்லா பதிப்பு நகரங்களுக்கும் அனுப்பினோம். அதை, தலைமையக உத்தரவின்றிப் பிரிக்கக் கூடாது என்று கண்டிஷன். குறிப்பிட்ட நாளில், நள்ளிரவில் பேக்கைப் பிரித்து அதில் உள்ள செய்தியினை முதல் பக்கத்தில் வெளியிடச் சொல்லி உத்தரவிடப்பட்டது. கொச்சியில் இருந்த கோயங்காவுக்கே அன்று காலை எக்ஸ்பிரஸைப் பார்த்தவுடன் இனிய அதிர்ச்சி! தன்னுடன் இருந்த குருமூர்த்தியிடம் கோயங்கா, 'இன்றைக்கு நான்தான் நெம்பர் ஒன்' என்றாராம்!"

**"இந்தப் புலனாய்வில், இறங்கியிருக்கவே வேண்டாம் என்று எப்போதாவது உங்களுக்குத் தோன்றியதுண்டா?"**

"பாம்பே டையிங் - ரிலையன்ஸ் இடையிலான தொழில் ரீதியான போட்டியில், எக்ஸ்பிரஸ் தலையிட்டிருக்க வேண்டாம் என்று நான் நினைத்தது உண்டு. ஆனாலும் ராஜீவ்காந்தி அரசு தமக்கு வேண்டிய ரிலையன்சுக்கு எத்தனை தூரம் சாதகமாக நடந்து கொள்ளுகிறது என்பதை எக்ஸ்போஸ் செய்வதே அப்போதைய நோக்கமாக இருந்தது."

**"இந்தியாவைப் பொறுத்தவரை மிக உயரத்தில் வைத்து மதிக்கப்படுபவர் அம்பேத்கர். அப்படியிருக்க, அவரைப் பற்றி சர்ச்சைக்குரிய ஒரு புத்தகம் எழுத எப்படி உங்களுக்குத் துணிவு வந்தது?"**

"ஒருநாள், என் நண்பர் ஒருவருடன் 1942ல் நடந்த சுதந்தரப் போராட்டம், கம்யூனிஸ்டுகளின் பிரிட்டிஷ் ஆதரவுப் போக்கினால், எப்படி பாதிப்புக்குள்ளானது என்று பேசிக் கொண்டிருக்கும்போது, "கம்யூனிஸ்டுகளை விடு, அம்பேத்கர் அப்போது என்ன சொன்னார் தெரியுமா?" என்று கேட்டார். அதுவரை அம்பேத்கரின் பேச்சுகள், எழுத்துகளை நான் படித்தவனில்லை. 'காங்கிரஸ் அமைச்சர்களை முதலில் ஜெயிலில் போட வேண்டும்' என்று அவர் பேசியதாக அறிந்ததும் எனக்கு அதிர்ச்சி! அதன்பின் அம்பேத்கரின் பேச்சுத் தொகுப்புகள், எழுத்துகள், அரசியல் நிர்ணய சபையில், பாராளுமன்றத்தில் அவரது விவாதங்கள் எல்லாவற்றையும் ஆழமாய்ப் படித்தேன். மும்பை, டெல்லி, லண்டன் ஆவணக் காப்பகங்களிலிருந்து முக்கியமான பல டாகுமெண்ட்கள் கிடைத்தன. எல்லாவற்றையும் ஆராய்ந்து அதனடிப்படையில் அந்தப் புத்தகத்தை நான் எழுதினேன்.

**"இப்படி ஒரு புத்தகம் எழுதினால் எதிர்ப்பு வரும் என்று நினைக்கவில்லையா?"**

"அந்தப் புத்தகத்தில், என்னுடைய தனிப்பட்ட கருத்து எதையும் நான் திணிக்கவில்லை. இன்று சாதிய அரசியல் வேரூன்றி இருக்கிறது என்றால், அதற்கு முக்கியக் காரணம் அம்பேத்கர்தான் என்று நான் நினைக்கிறேன். 'அரசியல் சாசனம் என்பது பயனில்லாத ஒன்று. அதைக் கொளுத்த வேண்டும்' என்று கூடக் கூறியிருக்கிறார் அவர். அதுவும் தனிப்பட்ட முறையில் அல்ல; ராஜ்ய சபையில்!

"புத்தகத்துக்கு எதிர்ப்பு வந்தது. 'அம்பேத்கரை இழிவு படுத்திய அருண்ஷோரியின் விலாசம் இது. அங்கே போய், உங்கள் இஷ்டம் போல எதிர்ப்பை வெளிப்படுத்துங்கள்' என்று துண்டுப் பிரசுரம்கூட விநியோகித்தனர்!"

**"இப்போது நீங்கள் எழுதிக் கொண்டிருக்கும் புத்தகம் எதைப் பற்றியது?"**

"பாகிஸ்தான் பற்றியது. அதற்காக 1940 முதல் முகமது அலி ஜின்னாவின் பேச்சுகள், அரசியல் நிர்ணய சபையில் பாகிஸ்தான் பற்றிப் பேசப்பட்ட விஷயங்கள், பாகிஸ்தானிய சட்டங்கள், பாக். சுப்ரீம் கோர்ட் தீர்ப்புகள் என சுமார் ஐம்பதாயிரம் பக்கங்களுக்குப் படித்து விட்டேன். பாகிஸ்தானின் முக்கிய நியூஸ் பேப்பர்கள் மூன்றை தினமும் நான் படிக்கிறேன். இன்டர்நெட்டில் பாக் பற்றிய அனைத்து விஷயங்களையும் படிக்கிறேன். எதையும் நான் நுனிப்புல் மேய்ந்து விட்டு எழுதுவதில்லை."

**"இதுவும் சர்ச்சைக்குள்ளாகுமா?"**

"அதற்கு நான் என்ன செய்ய முடியும்?"

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**
அட்டை வண்ணப்படம், படங்கள்:
**பிரவீன்குமார்**



# சூப்பர் ஏ-ஒன் கிளீனிங் பவுடர் இதர கிளீனிங் பவுடர்களை விட இரண்டு வழிகளில் சிறந்தது.

புதிய ஃபார்முலா

சூப்பர் ஏ-ஒன் கிளீனிங் பவுடர்

* இதன் விசேஷ மினரல் இரண்டு மடங்கு பாத்திரங்களைத் துலக்குகிறது.
* மைக்ரோ:ஃபைன் முறையில் தயாரிக்கப் படுவதால் பாத்திரங்களில் கீறல் விழவே விழாது.




AradhanA/A-One

சூப்பர் ஏ-ஒன் கிளீனிங் பவுடரின் புதிய ஃபார்முலாவில் உள்ள விசேஷ மினரல் இரண்டு மடங்கு அதிக ஆற்றல் கொண்டது. ஆகையால் மற்ற கிளீனிங் பவுடர்களைவிட சூப்பர் ஏ-ஒன் இரண்டு மடங்கு பாத்திரங்களை துலக்குகிறது.

சாதாரண கிளீனிங் பவுடரால் பாத்திரங்களில் நிறைய கீறல்கள் விழும். சூப்பர் ஏ-ஒன் கிளீனிங் பவுடர் மைக்ரோஃபைன் முறையில் தயாரிக்கப் படுவதால், பாத்திரங்களில் சிறு கீறல் கூட விழவே விழாது.

*முதல் தரமான சூப்பர் ஏ-ஒன் கிளீனிங் பவுடர் இருக்கும்போது, வேறு இரண்டாம்தர கிளீனிங் பவுடர்கள் எதற்கு?*

## இலவசம்!

இந்த விளம்பரத்தைக் கடையில் கொடுத்து 500கிராம் சூப்பர் ஏ-ஒன் வாங்கினால், இன்னொரு 500கிராம் சூப்பர் ஏ-ஒன் பாக்கெட் இலவசம்.

For Trade Enquiries Contact:
Mfrs. SEKAR PRODUCTS PVT. LTD.
Admn. Office :
156, Purasai High Road, Kellys,
Chennai - 600 010.
Ph.: 642 3315, 642 3325.
Fax : 6428586

# கௌதமி பேட்டி

தமிழ் வாசகப் பெருமக்களுக்கு இது 'கௌதமி வாரம்!' பா.ஜ.க.வின் அகில இந்திய இளைஞர் அணிச் செயலாளராக கௌதமி நியமிக்கப்பட்டதையடுத்து, பத்திரிகையாளர்களின் படையெடுப்பு. அத்தனை பத்திரிகைகளுக்கும் தனித்தனியே பேட்டியளித்தது, அவருக்கேகூட போரடித்திருக்கும். 'இந்த இரண்டு நாட்களில் பேசிய அளவுக்கு, நான் என் வாழ்நாளிலேயே பேசியது இல்லை' என்று கூறுகிறார்.



**"நீங்கள் முன்பு சினிமாவுக்கு வந்தது; இப்போது அரசியலுக்கு வந்தது, இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?"**

"சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த, கல்லூரி மாணவியாக இருந்துவிட்டு, திரையுலகில் பிரவேசித்தபோது, ஒரு முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலைக்கு வந்த உணர்வை அது ஏற்படுத்தியது. என் பெற்றோர், என் கூடவே இருந்து, ஊக்கப்படுத்தினார்கள். ஆனால் எதிலும் அவர்கள் தலையீடு இல்லை! இதனால் அனுபவங்கள் என்னைப் பக்குவப்படுத்தின. அதன் அடிப்படையில் எடுத்த முடிவுதான் அரசியலுக்கு வந்தது. இரண்டுமே வெகு ஜன சம்பந்தமுடைய துறைகள். இரண்டுக்கும் வித்தியாசம் இருந்தாலும், வித்தியாசம் பெரிதில்லை என்று சொல்லலாம்."

**"தேர்தல் நேரத்தில் வேறு எந்தக் கட்சியாவது உங்களை அணுகியிருந்தால், அந்தக் கட்சியில் சேர ஒப்புக்கொண்டிருப்பீர்களா?"**

"ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன். காரணம், பி.ஜே.பி.யின் கொள்கைகள் என்னைக் கவர்ந்தன. கட்டுப்பாடான கட்சி; நேர்மையான கட்சி. தங்கள் கட்சியில் சேர வேண்டும் என்று நான் உட்பட பல்வேறு பிரபலங்களையும் அந்தத் தருணத்தில் பி.ஜே.பி அணுகியது. நான் பி.ஜே.பி.யில் சேர்ந்தேன்."

**"பி.ஜே.பி.யிலும் கட்சிப் பிளவு, கட்சித் தாவல், உட்கட்சிப் பூசல் போன்ற வழக்கமான சச்சரவுகள் இருக்கின்றனவே?"**

"அரசியல் என்று இல்லை; எதிலுமே, எதுவுமே நூறு சதவீத பர்ஃபெக்ட்டானது இல்லை. இன்றைய அரசியல் கட்சிகளுள் மற்ற எதையும் விட பி.ஜே.பி பெட்டர் என்பதை நீங்களே ஒப்புக் கொள்ளுவீர்கள்."

**"பொதுவாக நடிகைகள், நடிகர்கள், தங்கள் சினிமா மார்க்கெட் ஏறத்தாழ முடிந்த பின், அரசியலுக்கு வருவதுதான் வழக்கம். நீங்கள் இளம் வயதிலேயே வந்ததற்கு என்ன காரணம்?"**

# நாற்காலி மீது கண்?

"நான் சினிமா மார்க்கெட் இல்லாததால், அரசியலுக்கு வந்து விட்டதாக நீங்கள் நினைத்தால் அது தவறு. நான் தொடர்ந்து நடிக்கவே திட்டமிட்டிருக்கிறேன். தொடர்ந்து சினிமாவில் நடித்துக் கொண்டு, திருமணத்துக்குப் பின் குடும்பப் பொறுப்புகள் அதிகரித்த பிறகும் நான் அரசியலில் இருக்கிறேன் என்றால், எனக்கு சமுதாயப் பொறுப்பு இருப்பதாக நான் நினைப்பதுதான் காரணம்."

**"தொழிலதிபரான உங்கள் கணவரை அன்னியச் செலவாணி குற்றச்சாட்டுகளிலிருந்து காப்பாற்றவே, பி.ஜே.பி.யில் சேர்ந்ததாகக் கூட கூறப்படுகிறதே!"**

"என் கணவரைப் பற்றிய ஆதாரமில்லாத விஷயங்களை எழுதுவதற்குப் பத்திரிகைகளுக்குச் சலிக்கவில்லை என்றாலும், விளக்கம் கொடுத்து எனக்குச் சலித்துப் போய் விட்டது! என் கணவர், ஆறு வருடங்கள் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றவர். கடந்த ஒரு வருடமாகத்தான் இந்தியாவில் இருக்கிறார். தான் உண்டு; தன் பிசினஸ் உண்டு என்று இருக்கிற அவரது மண்டையைப் போட்டு ஏன்தான் இப்படி உருட்டுகிறார்களோ தெரியவில்லை."

**"கட்சியில் உங்களைவிட எத்தனையோ சீனியர்கள் இருக்கும்போது, உங்களுக்கு எந்த அடிப்படையில் பதவி கொடுத்திருக்கிறார்கள்?"**

"தேர்தலின்போது, பல இடங்களுக்கும் போய், கடுமையாகப் பிரசாரம் செய்தேன். பி.ஜே.பி வென்று ஆட்சி அமைத்த பின், தலைவர்களைச் சந்தித்து, வாழ்த்துத் தெரிவித்தபோது, தொடர்ந்து கட்சிப் பணியில் ஈடுபட நான் தயாராக இருப்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருந்தேன். அதன் அடிப்படையில்தான், எனக்கு இந்தப் பொறுப்பை கட்சி அளித்திருக்க வேண்டும். நான், எந்தத் தலைவரையும் அணுகி எனக்குக் கட்சிப் பதவி கொடுங்கள் என்று கேட்கவில்லை. இந்தப் பதவி நானே எதிர்பாராமல் என்னைத் தேடி வந்த ஒன்று."

**"அரசியல்வாதி என்றாலே, மக்களை மூளைச் சலவை செய்கிறாற்போலப் பேசத் தெரிய வேண்டும். எழுதித் தரப்பட்ட வசனங்களை சினிமாவில் பேசிப் பழக்கப்பட்ட நீங்கள், மேடைப் பேச்சில் எப்படி?"**

"அது என்னுடைய மைனஸ் பாயின்ட் என்று எனக்குத் தெரிந்திருக்கிறது. நான் நல்லது என்று நினைப்பதை, என் மனச்சாட்சிக்குச் சரியென்று படுவதை வெளிப்படையாய்ப் பேசி விடுவது என்னுடைய பழக்கம். அதை, கூட்டங்களின்போது, என்னால் கடைபிடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது."

**"மனச்சாட்சிப்படி என்ற வார்த்தையைச் சொன்னதால், இந்தக் கேள்வி – அயோத்திப் பிரச்னை பற்றி உங்கள் கருத்து என்ன?"**

"ராமஜென்ம பூமியில், கோவில் இருந்ததும் முஸ்லிம் ஆட்சியின் போது, அது இடிக்கப்பட்டதும் வரலாறு. அங்கே மறுபடி கோவில் எழுவதில் நியாயம் உள்ளது. அதே நேரம், கட்சி வட்டத்துக்கு அப்பாற்பட்டு, ஓர் இந்திய குடிமகள் என்ற முறையில், அந்தப் பிரச்னையால், வன்முறைகள் கூடவே கூடாது என்று நினைக்கிறேன். தவிர, அயோத்தி பிரச்னை என்று இல்லை; நம் ஊர் காவேரிப் பிரச்னை உட்படப் பல விஷயங்கள் பற்றியும் எனக்கு ஆழமான விஷய ஞானம் இல்லை என்பது உண்மை. நிறைய தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் நோ கமென்ட் மாதிரியான பதில்கள் சொல்லி, நழுவ முடியாது பாருங்கள்!"

**"தேர்தலில் போட்டியிடும் எண்ணமுண்டா? அரசியல் என்று வந்து விட்டாலே நாற்காலி மீது கண் இருக்குமே?"**

"இல்லை. தேர்தலில் போட்டியிடும் ஐடியா இப்போது இல்லை. கட்சி உத்தர விட்டால், பார்க்கலாம்!"

**"மறுபடியும், தேர்தல் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியம் எப்போது வரும் என்று நினைக்கிறீர்கள்?"**

"பி.ஜே.பி.யின் ஐந்தாண்டு ஆட்சிக் காலம் முடிந்து, தேர்தல் வரும்போது! இதிலென்ன சந்தேகம்?"

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**
அட்டை வண்ணப்படம்: **பிரவீன்குமார்**

# பதவி தரும் அங்கீகாரம்!

**தா**ய்நாடு திரும்பத் தீர்மானித்தேன். ஏன் தீர்மானித்தேன்? இந்தக் கேள்வியைப் பல இடங்களிலும் கேட்கிறார்கள்.

தீர்மானம் என்பது ஒரு முடிவை மனத்தில் வைத்து நாம் செய்து கொள்ளும் சங்கல்பம்; எண்ணம். இது ஏதோ 1987ல் திடீரென்று ஏற்பட்ட முடிவல்ல. கொஞ்சம் கொஞ்சமாக மனத்தில் கனிந்தது. திரும்ப வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது 1963லேயே. அதாவது நான் அங்கு சென்ற மறு ஆண்டிலேயே.

எனவே நான் அமெரிக்கா வந்த புதிதில் நண்பர்கள் அனைவரும் மிக ஆர்வத்துடன் இந்தியா பற்றிப் பேசுவோம். வருடம் 1962. அப்போது அறிஞர் அண்ணாதான் திமுக தலைவர். அவர் தலைமையில் திமுக கட்சி சட்டமன்றத்தில் 50 இடங்களைப் பிடித்திருந்தது. எல்லோருக்குமே அண்ணா நம்பிக்கை நட்சத்திரமாகத் தென்பட்டார்.

அன்றைய நாட்டு நடப்பைப் பற்றி என்னைக் கேட்டார்கள். அண்ணா பாராளுமன்றத்திற்குச் சென்றபோது ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி என் மனத்தில் மாறாத இடத்தைப் பெற்றிருந்தது! அப்போது நேருதான் பெருமை மிக்க பிரதமர். ஜனாதிபதி உரைக்குப் பின் பாராளுமன்றத்தில் அதைப் பற்றிய விமர்சனத்தில் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கு பெறுகிறார்கள்.

அப்போது அண்ணா பேசுகிறார், 'எதற்காக திராவிட நாடு கேட்கிறோம்' என்பதை விளக்கி. மிக அருமையான, ஆணித்தரமான நியாயம் நிறைந்த பேச்சு. நேருவே அசந்து போய் ஆர்வத்துடன் கவனிக்கிறார். இதில் மிகப் பெரிய விசித்திரம் என்னவென்றால், இதன்பின் பேசிய யாரும் ஜனாதிபதியின் உரையை விட்டு விட்டார்கள்; எல்லோருமே அண்ணாவின் உரையைப் பற்றியே பேசத் துவங்கினார்கள். பாராளுமன்றம், ஜனாதிபதி எல்லாம் எங்கோ போக, அண்ணா முக்கியத்துவம் பெற்றார். அண்ணாவின் பேச்சு அவர்களைக் கலக்கியது என்று சொல்வதற்கு பதில் ஆழமாகத் தொட்டது என்ற உணர்வுதான் இருந்தது. இதைத்தான் நான் அங்கே சொல்லிக் கொண்டிருந்தேன். சில ஆண்டுகளில் 1967ல் அண்ணா முதல்வராகப் பதவி ஏற்றார். ஒரு மிகப் பெரிய, புதிய சகாப்தம் தோன்றப் போகிறது என்று எல்லோரும் எதிர்பார்த்தோம். உலகில் விஷயமறிந்த எல்லோருமே எதிர்பார்த்தார்கள் என்று சொல்வது மிகையாகாது. அதனால்தான் யேல் பல்கலைக் கழகம் 'சப் பெல்லோ ஷிப்' என்ற உயர் விருதினை அளித்து அவரை அங்கே ஒரு வாரம் தங்க அழைத்திருந்தது.

இன்னொரு முக்கிய விஷயம். விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் தென் ஆசிய கல்வி என்ற துறை ஒன்றிருந்தது. அதில் முழுக்க முழுக்க இந்தியாவைப் பற்றிய படிப்புதான். அங்கே ஹென்ரி ஹார்ட் என்ற அரசியல் பேராசிரியர், ஜோ எல்டர் என்ற சமுதாய இயல் பேராசிரியர், பிரைக்கன் பர்க் என்ற சரித்திரப் பேராசிரியர், மூவருமே இந்தியாவின் அரசியல், சமுதாய இயல், சரித்திரம் என்ற பிரிவில் ஆழமாக






ஆராய்ச்சி செய்தவர்கள்; தமிழ்நாட்டை அறிந்தவர்கள்.

எனக்கு எப்போதுமே இப்படி மிகப் படித்தவர்களைப் பார்க்கும்போது, பேசும் போது, அதிக மரியாதை கலந்த பிரேமை ஏற்படும். எனவே இவர்களைச் சந்திப்பேன். பலமுறை எங்கள் வீட்டிற்கு விருந்திற்கு அழைப்பதுண்டு. ஹென்ரி ஹார்ட் அவர்களின் அரசியல் வகுப்பில், எனக்கு நேரம் கிடைக்கும்போது அவரது அனுமதி பெற்று அமர்வதுண்டு. 'இப்போது மெட்ராஸ் மூர்த்தியின் அபிப்பிராயத்தைக் கேட்போம்" என்பார் ஹென்ரி ஹார்ட்.







இந்தச் சூழ்நிலையால் என்னுள் தோன்றிய எண்ணங்கள்: இந்தியர்களாகிய – தமிழர்களாகிய நாம் – இங்கே வந்து இவர்களுக்குச் சமமாகவும், சில சமயங்களில் இவர்களே வியக்கும்படியும் செயல்பட முடிகிறதே – அவ்வளவு புத்திசாலித்தனம் இருக்கிறதே, இருந்தும் ஏன் இப்படி ஏழை நாடாக நாம் இருக்கிறோம்? இதை எல்லாம் மாற்ற வேண்டும். இங்கிருக்கிற ஒவ்வொருவரும் அவரவர் துறையில் சென்று பாடுபட்டால், முன்னேற்றக் கருத்துக்களைத் தெரிவித்தால் நாடு மாறிவிடும். நாம் ஏதாவது செய்தாக வேண்டும்' என்ற எண்ணம் ஆழமாக விழுந்தது.

எங்கும் எதிலும் சர்வேஸ்வரனைப் பார்ப்பார்களாமே பக்தர்கள், அதுபோல எங்கும் எதிலும் – ஒரு ஹைபிரிட் கோழி இனத்தை உண்டு பண்ணி இருக்கிறார்கள் என்று படித்தால் கூட "அட! நம் ஊரிலும் இப்படி ஏற்பட்டால் எப்படி இருக்கும்?" "இப்படிப்பட்ட சுயமாக சிந்திக்கின்ற கல்வி முறையைக் கொடுத்தால் எப்படி இருக்கும்?" என்றே எண்ணங் கொண்டிருப்பேன். இன்னும் தாகம் தணிந்தபாடில்லை.

இன்னொருபுறம் எனது வேதியல்பாட ஆர்வம். ஒருமுறை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது நான் எடுத்துக் கொண்ட ஒரு செடியிலிருந்து, அதனுள் இருக்கும் முக்கிய மூலப் பொருளைத் தனியே பிரித்தெடுக்க முடியவில்லை. ஆராய்ச்சி துவங்கி ஓராண்டு ஓடி விட்டது.

பேராசிரியர் கூப்பிட்டார். "இது கஷ்டமாக இருக்கும் போலிருக்கிறது. நான் உனக்கு வேறு ஒரு பொருளை ஆராய்ச்சி செய்யத் தருகிறேன். அதைத் துவங்கு" என்றார்.

இந்த ஆளால் முடியவில்லை என்று நம்மைப் பற்றித் தீர்மானம் செய்து விட்டாரோ என்ற தாழ்வு மனப்பான்மை என்னை உலுக்க, "இன்னொரு மூன்று மாதம் முயன்று பார்க்கிறேனே?" என்று கூறினேன்.

பேராசிரியர் சொன்னார். "உலகில் எத்தனையோ விஷயங்கள் எவ்வளவு போராடினாலும் விடுவிக்க முடியாதவை இருக்கின்றன. அதில் காலத்தைச் செலவிடுவதில் பயனில்லை. நீ டாக்டர் பட்டம் எடுக்க வேண்டும். ஏதாவது புதிய முடிவுகளுக்கு வர வேண்டும். எனவே இதைச்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி



''என்னய்யா? பட்டாசு செலவு பத்தாயிரம்னு போட்டிருக்கு? நம்ம ஆபீஸ்ல எப்பய்யா பட்டாசு வாங்கினோம்?''

''பழைய மானேஜருக்கு நீங்க 'வேட்டு' வச்சப்போ சார்!''

– தாரை ஆ. அருண்ராஜ்

---

செய்!'' என்றார்.

அடுத்த ஆண்டிலேயே எனக்கு நான் எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றிய, புது தகவல்கள் – நல்ல முடிவுகள் – கிடைத்தன.

இந்த சமயத்தில்தான் ஆராய்ச்சியிலேற்பட்ட கஷ்டங்களும் இங்கு என்னைப் போல் ஆராய்பவர்கள் செய்வதன் விளைவுகளும் பற்றி மனம் யோசிக்க ஆரம்பித்தது. டாக்டர் பட்டத்திற்கு மிக முக்கியமாக, சுயமாக சிந்திக்க வேண்டும். எடுத்துக் கொண்ட ஆய்வில், அறிஞர்களுக்கோ, பொது மக்களுக்கோ இன்றோ நாளையோ பயன்படக்கூடிய தகவல்கள் கிடைக்க வேண்டும்.

இப்படி நான் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோதுதான் எப்படி மனித மனம் – விஞ்ஞானியின் மனம் – புதிய பொருளைக் கண்டுபிடிக்கிறது என்ற கேள்விக்கு பதிலைத் தேடும் ஆர்வம் என்னுள் எழுந்தது. எல்லா விஞ்ஞானிகளுடைய வாழ்க்கை வரலாறுகளையும், சுய சரித்திரங்களையும் படித்தால் அங்கே அதில் இதற்கான பதில் புதை பொருளாக, மறைந்து கிடக்கும் ஞானமாக இருக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

இப்படி சிந்தித்ததற்கு மூல காரணம் நான் இண்டி பொறியியற் கல்லூரியில் வேலை பார்த்தபோதே படித்த ஜேம்ஸ் ஆலனின் நூல்தான். அந்த எண்ணங்களின் சக்தி என்னுள் வேலை செய்து கொண்டிருந்தது. இதுவரை விடுவிக்கப்படாத பெரும் புதிர் இது. ஆனால் பின்னால் நம் நாட்டு சித்தர்கள், யோகிகள் எண்ணங்களின் மூலம் எப்படிப் பல சித்திகளை சாதிக்கிறார்கள் என்று மனத்தின் அபார சக்தியை அறிந்தபோது நாம் இறங்கிய இடம், சரியான, முக்கியமான துறைதான் என்ற மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டது.

எனவே எனது மேற்படிப்பின் ஆராய்ச்சி வேதியல் துறையுடனே, ''புதியன காணும் சிந்தனா முறை'' என்பதைப் பற்றி, மனவியலில் இறங்கி விட்டது. சிந்தனா முறை பற்றி நான் மேற்கொண்ட ஆராய்ச்சிகளும், படித்த நூல்களும் நான் தெரிந்து கொண்ட விஷயங்களும், என் அனுபவமும் சிந்தனைகளும்தான் மனவியலில் பல நூல்களாக வெளி வந்தன.

இதில் எனக்கு ஆச்சரியம் தந்த சம்பவம் இந்திய மன மருத்துவச் சங்கமும், சென்னை மனவியல் சங்கமும் சேர்ந்து எனக்கு 'மாமனிதர்'என்ற பட்டத்தை அளித்ததுதான். நான் இதை எதிர்பார்க்கவில்லை. நான் முறையாக மனவியல் படித்தவனல்ல, அதில் பட்டம் பெற்றவனல்ல! அப்படி இருக்கும்போது எப்படி இவர்கள் அதைக் கடந்து நம்மை அங்கீகரிப்பார்கள்

---

**''என்னங்க... கல்யாணம் பண்ணிக்காம இன்னும் எவ்வளவு நாளைக்குதான் இப்படியே லவ் பண்ணிக்கிட்டு இருக்கறது?''**

**''தெரியுது இல்ல? வீட்ல சொல்லி மாப்பிள்ளை பார்க்க சொல்றதுதானே?''**

**– எஸ்.எஸ். பூங்கதிர்**



# கல்கி தீபாவளி மலர்
# கலர் ஃபுல் தீபாவளி மலர்!

**சிறுகதைகள், பயணக் கட்டுரைகள், பக்திக் கட்டுரைகள், நகைச்சுவை, கவிதைகள், வண்ண மடல்கள், புகைப்படப் புதுமைகள் எல்லாவற்றிலும் எப்போதும்போல் ஏ ஒன் ஆகத் தயாராகிக்கொண்டிருக்கிறது! உங்கள் பிரதிக்கு உள்ளூர் ஏஜெண்டை உடனே அணுகுங்கள்.**

**விலை ரூ. 50/-**

**கல்கி தீபாவளி மலர் '98**


என்கிற யோசனைகள் என்னிடம் இருந்தன.

காஞ்சிப் பெரியவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க P.S உயர் நிலைப் பள்ளி மாணவர்கள், மயிலாப்பூர் திருக்குளத்தைத் தூர் எடுத்தார்கள். அந்த மாணவர்களைப் பாராட்டி அவர்களுக்குச் சான்றிதழ் வழங்க என்னை அழைத்திருந்தார்கள். அங்கே என்னுடன் மேடையில் சென்னைப் பல்கலைக் கழக மனவியல் பேராசிரியர் டாக்டர் கே.வி. காளியப்பனும் அமர்ந்திருந்தார். நான் மாணவர்களிடம் பேசி முடித்தவுடன் பேராசிரியர் காளியப்பன் எழுந்தார். "இன்று இந்த மாணவர்களுக்குப் பதிலாக எனது சக ஆசிரியர்கள் இங்கே பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தால் மிகுந்த பயன் பெற்றிருப்பார்கள். மனவியலை நடைமுறைக்குக் கொண்டு வந்து விட்டார்'' என்று பேசினார்.

நானும் அதை இன்னொரு பாராட்டு என்றுதான் எடுத்துக் கொண்டேன்.

அதே போலத் தமிழ்ப் பேராசிரியர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும்– குறிப்பாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து மூன்றாண்டுகள் எண்ணங்கள் என்ற என் நூலைப் பாடப் புத்தகமாக வைத்ததும் என்னளவில் பெரிய கௌரவம்.

சென்ற ஆண்டு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை சார்பில் எனக்கு அண்ணாமலைச் செட்டியார் விருது வழங்கினார்கள். பின்னர் திருக்கோயிலூரில் கபிலர் விருது.

எப்படி நான் இவர்களுக்கு நன்றி சொல்ல முடியும்?

நேற்று வரை தம்பிரானாக இருந்த மடத்துறவி மறுநாள் குருமகா சன்னிதானமாகப் பதவி ஏற்கும்போது அன்றிலிருந்து அவருக்குத் தனி மரியாதை ஏற்படுகிறது. நேற்றுத் தம்பிரானாக இருந்த அதே மனிதர் தான் இவர். எந்தவிதமான புனிதமும் ஏறிவிடவில்லை, குருவான மறுநாளில்! ஆனால் அந்தப் பெருமை தம்பிரானாக இருந்தபோது கொடுக்கப்படுவதில்லை. பதவி தரும் அங்கீகாரம் இது!

அறிஞர் அண்ணா திராவிட நாடு பற்றிய கருத்தை மேடைகளிலே பேசுவதற்கும், அதே கருத்தை எல்லோரது கவனத்தையும் ஈர்க்கும் பாராளுமன்றத்தில் பேசுவதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. பதவி தரும் முக்கியத்துவம் இது. எனவே, கருத்துகள் பரவுவதற்கு இது போன்ற அங்கீகாரங்கள் தேவைப்படுகின்றன. பொது மக்களது மனோபாவத்தில் இவை ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. இது உண்மை.

(தொடரும்)

## கடை
### சூப்பர் மார்க்கெட்

உலகம் முழுக்கத் தீ வெச்சா மாதிரி ஓடிட்டிருக்கு காட்ஸில்லா. மவுண்ட் ரோடு தியேட்டரிலெல்லாம் டிக்கெட் கிடைக்காம, பல்லாவரம் ஜனதாவுக்கு போய்ப் பார்த்துட்டு வந்த என் தம்பி, கவுண்டர்ல அடிதடி; பிளாக்ல எண்பது ரூபா ரேட்டுன்னான். யோசிச்சுப் பாருங்க. ஹீரோ யாரு சூப்பர் ஸ்டாரா? கமலா? டைரக்டர் மணிரத்னமா? யாரோ ஊர் பேர் தெரியாத ஆசாமிங்க. காட்ஸில்லாங்கற மிருகம் கூட ஒரு கற்பனையான படைப்புன்னு எல்லாருக்கும் தெரியும். அது அடிக்கற ரகளையைப் பார்க்க இங்க அப்படி ஒரு கூட்டம்!

இந்த சைக்காலஜியை நுணுக்கமா கவனிக்கற பிரிட்டிஷ் விமர்சகர் ஸ்டீவர்ட் ஆண்டர்ஸன் சொல்றார்:

"ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் கொஞ்சம் சதவிதமாவது வன்முறை வேர் விட்டிருக்கும். நம்மால் ஆகாத ரகளையை வேறு யாராவது அல்லது ஏதாவது ஜீவராசி சாத்தியமாக்கிக் காட்டும்போது, அந்த ஜீவராசியின் உடலில் நம் உயிரை மானசீகமாகத் திணித்து அழிவுகளைக் கண்டு ரசிக்கிறோம். இது சாடிஸத்தின் வேறொரு பரிணாமம்." – பயங்கரமா இல்லை..!



மிருகங்களைக் கதாநாயகனா வெச்சுப் படம் எடுக்கறது இன்னிக்கு உலகம் முழுக்க ஒரு ஃபேஷன். இந்த கல்சரோட தாத்தா நம்ம ஊர்க்காரரான தேவர்தான்! பசுமாடு, குதிரை, நாய்னு அவர் ட்ரை பண்ணாதது இல்லை. அவருக்கப்புறம் ராமநாராயணன், குரங்கு, பாம்புகளோட சில நடிகைகளையும் சேர்ந்து நடிக்க வெச்சி பக்தி கோட்டிங் குடுத்து வரிசையா திரைப் படங்கள் கொடுத்தார். சிலது க்ளிக் ஆச்சு. பெரும்பாலும் அவுட்! தெலுங்கு இன்டஸ்ட்ரில இந்த ஜுரம் இன்னிக்கும் இருக்கு. ஆனா, பிஸினஸ் ஆங்கிள்ல எல்லா நாட்டுக்காரங்களை விடவும் ஹாலிவுட்காரர்கள்தான் இதை சக்ஸஸ்ஃபுல்லா பண்ணியிருக்கறதா சொல்லுது சரித்திரம்.

காட்ஸில்லா, முழுக்க முழுக்க கம்ப்யூட்டர் தயாரிப்புதான். அந்த ஜந்துவோட ஒவ்வொரு மூவ்மென்டையும் ஒரு கார்ட்டூன் படம் தயாரிக்கறது மாதிரி நிறைய ஸ்ட்ரோக்ஸ் வெச்சி நிக்கறது, நடக்கறது, ஓடறது, திரும்பிப் பார்க்கறது, மூச்சு விடறதுன்னு தனித் தனியா ஒர்க் பண்ணி மிக்ஸ் பண்ணியிருக்காங்க. கோடிக்கணக்கான செலவு, வருஷக் கணக்கான உழைப்பு. ஒருவேளை இது மாதிரி மெகா செலவுப்படம் ஃப்ளாப் ஆயிடுச்சின்னா, ப்ரொட்யூசர் கதி என்ன?

இந்தக் கவலையாலதான் நம்ம ஊர்ல இந்த மாதிரிப் படங்கள் எடுக்கத் தயங்கறாங்க. கம்ப்யூட்டரை வெறுமனே டூயட் பாட்டுக்கு நடுவில் பூச்சி பறக்கறதைக் காட்டறதுக்கு மட்டும் யூஸ் பண்றாங்க.

# சுஷ்மா சுவராஜ் சொல்லும் ‘சுதந்தர’ விளக்கம்!

ஸ்டார்களை வெச்சும் கோடிக்கணக்குல செலவு பண்ணி குஞ்சுமோன் மாதிரி பிரும்மாண்டத் தயாரிப்பாளர்கள் எடுக்கற படங்கள் தோல்வி அடையறதில்லையான்னு கேட்கலாம்! பழைய பழமொழிதான் பதில்: Known Devil!

“OOபெயினால சுஷ்மா ஸ்வராஜ் பெண் சுதந்தரம் பத்தி ஒரு பேட்டி குடுத்திருக்காங்க. பாத்தியா கமி?”ன்னு கேட்டார் என் ஃப்ரெண்ட் சுப்ரமணியம். இல்லைன்னதும் குடுத்தனுப்பிச்சார்.

இன்னிக்கு எல்லாரும் சொல்லிட்டிருக்கறது மாதிரி, படிப்பும் பொருளாதார சுதந்தரமும் மட்டும் பெண் விடுதலைக்கு வழி பண்ணா துங்கறார் சுஷ்மா. காரணம்? ஒரு உதாரணம் சொல்றார் பாருங்க:

“என் வீட்டு வேலைக்காரியை அவள் வீட்டிலோ, அவளது பக்கத்து வீட்டுக்காரர்களோ யாரும் அவமதிக்க மாட்டார்கள்! காரணம்? வேலைக்காரிதானென்றாலும் ஒரு மத்திய அமைச்சரிடம் நேரடித் தொடர்பு உள்ளவள் அவள்! ஒரு பெண் குமாஸ்தாவைவிட, ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியிடம் ப்யூனாக இருக்கக் கூடிய பெண்ணுக்கு அங்கீகாரமும் செயல் சுதந்தரமும் அதிகமாக இருக்கும். காரணம், reflected authority! எனவே பொருளாதாரச் சுதந்தரம் மட்டுமின்றி, அரசியல் சுதந்தரமும் கைகூடினால்தான் ஒரு பெண் நிஜ சுதந்தரம் பெற்றவள் ஆவாள்!”

இன்னொருத்தர் நிழல்ல இருக்கறதால கிடைக்கற மரியாதைக்குப் பெயர் சுதந்தரமில்லையே மேடம் சுவராஜ்! நாளைக்கு பி.ஜே.பி ஆட்சி கவிழ்ந்தா அந்தப் பணிப் பெண்ணின் கதி என்ன...?! பெண் சுதந்தரம் என்கிறது... அது இல்லைன்னு நினைக்கிறேன்.

‘பின்னே எது’ன்னு கேட்கறீங்களா? வெல், முதல்ல உங்க கருத்தை எழுதுங்க. எல்லாத்தையும் பார்த்துட்டு, அப்புறமா என் கருத்தைச் சொல்றேன். Ok?

ஒரு மூவி க்விஸ் மாஸ்டர் சொன்ன அனுபவம்:

சுலபமான கேள்விகளுக்குக் கூட நிறையப் பேர் சரியான பதில் சொல்றதில்லையேன்னு ரொம்ப வருத்தப்பட்டாராம் அவர். பதிலே சொல்லாவிட்டாலும் மார்க் விழறாப்பல கேள்விகள் தயாரிச்சிருக்கார். எத்தனை புத்திசாலித்தனம் பாருங்க:

“பகவத்கீதையைக் கிருஷ்ணன் எந்த மொழியில் அர்ஜுனனுக்கு உபதேசித்தார்?”

கேள்வி கேட்டதும் கடும் மௌனம்! யாருக்கும் பதில் தெரியலை!

உடனே குவிஸ் மாஸ்டர் சொன்னார்: “சரியான விடை. கீதையைக் கண்ணன் உபதேசித்தது மௌன மொழியில் தான்!”

அடுத்தக் கேள்வி: “Gone with the wind நாவலை எழுதிய மார்கரெட் மிட்ஷெலின் அடுத்த நாவலை அறிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?”

உடனே பதில்: “இல்லை”

“சரியான விடை. எழுதியிருந்தால்தானே இருக்க முடியும்?”

இந்த ரீதில வரிசையா ஏழெட்டுக் கேள்விகள் கேட்டிருக்கார். Great!

“சூமி சூப்பர் மார்க்கெட் என்கிற ஆங்கிலக் கட்டுரைப் பகுதியைப் படித்தேன்’னு ஆரம்பிச்சி உன்னுடைய மணிப் பிரவாள ஸ்டைலைக் கடுமையா தாக்கி இருக்கார் அறந்தை மணியன் என்கிற ரைட்டர்”ன்னு போன்ல சொன்னார், கல்கி சப் எடிட்டர் ஒருத்தர். என்னுடைய ரியாக்‌ஷன் என்னன்னு கேட்டார். “தாக்குதலுக்கு Thanks. ஆனா கார், ஸ்கூட்டர் நம்பர் ப்ளேட் வரைக்கும்தான் செந்தமிழ் வந்துடுச்சே. இந்த ரெண்டு பக்கம் இப்படியே இருந்துட்டுப் போகட்டும்”னு சொல்லிட்டேன். ●

— சுமி



நயவுரை நம்பி

# டாக்டர் ஜெகத்ரட்சகனின்

எளிய இனிய

# ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம் நயவுரை

2 ஆம் பதிப்பு (1600 பக்கம்) விலை ரூ.400/-

வைணவச் சுடரொளி **ஆ. எதிராஜன்** எழுதிய **108 வைண திவ்வியதேச ஸ்தல வரலாறு.** உயர்ந்த பதிப்பு விலை ரூ.160/-. இரு நூல்களையும் ரூ. 450/- செலுத்திப் பெறலாம் - பதிவஞ்சல் இலவசம். M/O அல்லது D/D அனுப்புக.

**ஆழ்வார்கள் ஆய்வு மையம்**

29, திலக் தெரு, தி. நகர்,

சென்னை - 600 017.

தொலைபேசி : 8251865

# அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு

நம்பகமான ஒரே கூந்தல் தைலம்

## குணு கூந்தல் தைலம்



**குணு கூந்தல் தைலம்**

**உபயோகிப்பதன் மூலம்**

- தலைமயிர் நீண்டு, கறுத்து, அடர்த்தியாய் வளரும்
- தலைமயிர் உதிர்தல், செம்பட்டை நிறம், இளம் பித்த நரை, தலை அரிப்பு, பொடுகு, சொரிந்தால் செதில் உதிர்தல் குணமாகும்.
- ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் ஏற்றது

இயற்கை தரும் அதி உன்னத மூலிகைகளால் சித்த மருத்துவ முறையில் தயாரிக்கப்பட்டது.

இப்பொழுது 100 ml, 200 ml Packing-களில் கிடைக்கின்றது.

வியாபார விசாரணைகளுக்கு கீழ்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்

விபரங்களுக்கு

*Agasthiar Pharmaceuticals*

P.B.No. 588, Salem - 636 005.

இப்போது எல்லா மளிகை, மருந்து மற்றும் ஜெனரல் ஸ்டோர்களிலும் கிடைக்கிறது

# ஆர்யபட்டா

சுஜாதா

5

ப்ரபாகர் ராவும் சங்கரும் சோமசுந்தரின் அறையில் நுழைந்தபோது அவர் போன் பேசிக் கொண்டிருந்தார். மேசை மேல் அவர் பெயர் ப்ளாஸ்டிக் நீள் சதுரத்தில் எழுதியிருந்தது. "டாக்டர் சோமசுந்தர்."

அதன் கீழ் ''என் நேரமும் உங்கள் நேரமும் பொன்னானது."

மேசையில் மலர்க்கொத்துகளும் ஏராளமான வாழ்த்து அட்டைகளும் நிரம்பியிருந்தன. வீட்டிலிருந்து வந்த டிபன்பாக்ஸ் காத்திருந்தது. அருகே பச்சைத்திரை அமைத்து, அதன் மறைவில் வாஷ்பேசினும் ஆசுவாச இருக்கையும் இருந்தன. சோமசுந்தருக்கு வயது ஐம்பது இருக்கலாம். சற்றே வழுக்கை. ஆனால் வசீகரமான முகம். ரிம் இல்லாத கண்ணாடி அணிந்து, சொந்தப் புகழுக்காக, பதவிக்காக எதையும் செய்யக் கூடியவர் என்பது தோற்றத்தில் எப்படியோ தெரிந்தது.

''அவருக்குக் கிடைத்த அவார்டு ஆனந்துக்குக் கிடைத்திருக்க வேண்டியது'' என்று ஜமதக்னி சொன்னது ப்ராபகர் ராவுக்கு ஞாபகம் வந்தது.

சோமசுந்தர் போனில் "தாங்ஸ்ப்பா தாங்ஸ்! எல்லாம் உங்க மாதிரி நண்பர்களுடைய நல்லாசிகளினால்தான். என் அப்பன் முருகன் கிருபையினாலயும்... சரி சரி திறமைன்னு ஒண்ணு இருக்கு. ஆனா திறமை மட்டும் போதாதே.''

ப்ரபாகர்ராவ் சுற்றும் முற்றும் பார்த்தார். பீரோ நிறைய கேடயங்கள், பலவித போட்டோக்கள், ஆர்யபட்டா அவார்டு



போட்டோ மேசைமேல் பெரிது படுத்திக் கிடந்தது.

சோமசுந்தர் போனை வைத்துவிட்டு "எஸ், வாட் கன் ஐ டு ஃபார் யு ஜெண்டில் மேன்?" என்றார். குரலில் அதட்டல் இருந்தது.

"ஐம் ப்ரபாகர்ராவ். ஸி.ஓ.டி.யில் எஸ்.பி. இவர் சங்கர். என் அசிஸ்டெண்ட்."

சோமசுந்தர், "இப்ப கொஞ்சம் பிஸியா இருக்கேன். இஃப் யு டோண்ட் மைண்ட். கொஞ்சம் சாவகாசமா வந்திங்கன்னா... கஸ்டம்ஸ் க்ளியரன்ஸ் ஆஃப் க்ரையோ ஜனிக் வெஸல்ஸ் கேஸ்தானே?"

மீண்டும் போன் ஒலிக்க, அதை எடுத்துக் கேட்டு புன்னகைத்து "அலோ தாங்ஸ் மாலினி, எனக்கே சர்ப்ரைஸ்தான். மாலு, வி மஸ்ட் மீட். எப்ப சொல்லு. கார் அனுப்பறேன்."

ப்ரபாகர்ராவ் தொடர்ந்து, "இல்லை

***"படப்பிடிப்புக்கு எனக்கு துணையா ஸ்டூடியோவுக்கு கூப் பிட்டா ஏன் பாட்டி வரமாட்டேங் கிறே?"***

***"வந்தா, உன்னை மறந்துட்டு என்னைப் பத்தி ஏதாவது கிசுகிசு போடுவானுக! இந்த வயசில் உனக்கெதுக்கு அந்த அவமானம்!"***

***– உ. ராஜாஜி***



ஸார் இது மர்டர்" என்றார் நிதானமாக. சோமசுந்தர் போனைப் பொத்தி, "மர்டரா... மாலு அப்புறம் பேசறேன்."

"உங்க கலீக் டாக்டர் ஆனந்த் நேற்று சாயங்காலம் சுட்டுக் கொல்லப்பட்டிருக் கிறார்."

"ஓமை காட்!"

ப்ரபாகர், "தெரியாது? உங்களுக்குத் தெரியாது? ஆச்சரியமா இருக்கே."

சோமசுந்தர், "தெரியவே தெரியாது. இப்பதான் நான் ஆபீஸ் வரேன். நேற்று அவார்ட் ஃபங்ஷன். பார்ட்டிக்கு ஆனந்த் ஏன் வரலையேன்னு பார்த்தேன். என்ன ஆச்சு ஸார், ஏதாவது திருட்டா?"

"இல்லை."

சோமசுந்தர், "கேளுங்க. என்ன வேணா கேளுங்க. எனக்குத் தெரிஞ்ச உண்மையை சொல்றேன்."

ப்ரபாகர், "எளிதான கேள்வி. நேற்று சாயங்காலம் சுமார் ஆறு மணிக்கு நீங்க எங்க இருந்திங்க?"

கைகளை கவனித்தார். முகத்தை கவனித்தார். எந்தவித சலனமும் இல்லை.

இவன் எத்தன்!

"ஆயிரம் பேர் முன்னால ஆர்யபட்டா அவார்டு ஃபங்ஷன்ல."

சங்கர், "லேட்டா வந்திங்களாம்?" என்றார்.

சோமசுந்தர் அவரைப் பார்க்காமல், "யார் சொன்னது?"

ப்ரபாகர், "ஜமதக்னி. உங்களை திரும்பத் திரும்ப ஸ்டேஜ்ல கூப்பிட்டாங்களாம். லேட்டாத்தான் வந்திங்களாம்."

சோமசுந்தர், "ஓ அதுவா? பாத்ரூம் போயிருந்தேன். நான் ஒரு டயபட்டிக். ப்ளெட் செக் ரிப்போர்ட் காட்டட்டுமா" என்று சிரித்தார்.

"டாக்டர் சோமசுந்தர், இது சிரிக்கிற மேட்டர் இல்லை. கொலை, மர்டர். உங்க கலீக் ஒருத்தர் சுட்டுக் கொல்லப்பட்டிருக் கிறார். அவருக்கும் உங்களுக்கும் அதிகம் நட்பு இல்லை, ரெண்டு பேருக்கும் பொறாமை மிகுதியா இருந்திருக்கு. ரெண்டு பேரும் அதிகம் பேசிக்கறது இல்லை. நீங்க அவரை பயமுறுத்தியது, எல்லாமே எங் களுக்குத் தெரியும்."

"யார் சொன்னது? ஜமதக்னியா."

"ஆமா."

சோமசுந்தர் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு, "அவனை நம்பாதீங்க. அவன் என் லாப் அசிஸ்டெண்டா இருந்தவன். என்னைக் கண்டால் ஆகாது. டிசிப்ளினரி ஆக்ஷன் எடுத்து அவன் இன்க்ரிமெண்ட் கட் பண்ணிருக்கேன். ப்ரமோஷன் கொடுக்கலைன்னு என்மேல் அவனுக்கு வெறுப்பு. அதனால் அவன் சொன்னது எதையும் நம்பாதீங்க. எனக்கும் ஆனந்துக்கும் ரைவல்ரி இருந்தது உண்மைதான். ஹெல்தி ரைவல்ரி. ஆனா இந்த அவார்டுக்கும் ஆனந்துக்கும் சம்பந்தமே இல்லை. அது அவனைக் கொல்ற அளவு இருந்ததுன்னு சொன்னா அதைப் போல அபத்தமானது இருக்க முடியாது. ஜமதக்னி சொல்றதை வெச்சு கிட்டு..."

ப்ரபாகர், "ஜமதக்னி மட்டும் இல்லை. இறந்துபோன டாக்டர் ஆனந்த் கூட 100 டயல் பண்ணி உங்க பேரைச் சொல்லியிருக்கிறார்."

சோமசுந்தர் திடுக்கிட்டு, "மைகாட்" என்றார். இப்போது அவர் சற்றே நிலை குலைந்தார்.

ப்ரபாகர், "அவர் இறப்பதற்கு முன்னால் திரும்பத் திரும்ப சொன்ன ஒரே ஒரு வார்த்தை உங்க பேரு."

"சோமசுந்தர்னா?"

"சோமுன்னு."

"சோமுவா, சோனுவா?"

"சோமு."

சோமசுந்தர் நெற்றியைத் துடைத்துக் கொண்டு ஆசுவாசப்படுத்திக் கொண்டார். "அப்பாடா! என்னை யாரும் 'சோமு'ன்னு சின்னப்பிள்ளையிலயிருந்துகூட கூப்பிட்டது கிடையாது. எல்லாரும் சுந்தர்னு தான் கூப்பிடுவாங்க. போன்ல சரியா கேட்டிருக்காது. ஆனந்த் 'சோனு'ன்னு சொல்லியிருக்கிறது சோமுன்னு காதில விழுந்திருக்கும்."

ப்ரபாகர், "சோனு. யாரு சோனு?"

"சோனுன்னு ஆனந்துடைய ஆராய்ச்சிக்கு உதவின பொண்ணு. முழுப்பெயர் சோனல்லோ சோனாலியா."

ப்ரபாகர் ராவும் சங்கரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"சோனு!"

சோமசுந்தர், "அழகான பொண்ணு. டாக்டர் ஆனந்துக்கும் அவளுக்கும் ஒரு...



**" 'சட்டையை மாற்றுவது போன்று நம்ம தலைவர் கொள்கையை மாற்றுபவர்' என்று எதிர்கட்சிக்காரங்க பேசிட்டாங்க..."**

**"அதுக்காக நம் தலைவர் ஆறுமாசமா சட்டையை மாற்றாமலே இருப்பது நல்லாவ்லீங்க!"**

**– நாஞ்சில் க. நாகராஜன்**

---

ஒரு அதை என்ன சொல்றது 'லவ் ஹேட்' ரிலேஷன்ஷிப். ஆனந்த் பாரதியை கல்யாணம் பண்ணிக்கிட்டப்ப ரொம்ப மனசு உடைஞ்சு அப்செட் ஆயி ரிசைன் பண்ணிட்டுப் போய்ட்டா."

ப்ரபாகர்ராவ், "பாரதி?"

சங்கர், "மனைவி ஸார்" என்றார்.

"ஆமா, ரெண்டு பேருக்கும் ஒருவிதமான போட்டி இருந்தது. எல்லாரும் ஆனந்த் சோனுவைத்தான் கல்யாணம் செய்துக்கப் போறான்னு எதிர்பார்த்தோம்."

"இப்ப எங்க இருக்காங்க?"

"தெரியலை. அட்மின்ல கேட்டுப் பாருங்க. அரியர்ஸல்லாம் வரலைன்னு ஒருமுறை போன் பண்ணியிருந்தா. அப்ப விசாரிச்சபோது இகபானோவோ, டான்ஸோ ஏதோ சொல்லித்தரதா சொன்னா. சரியா ஞாபகமில்லை."

"டாக்டர் சோமசுந்தர், உங்களுக்கு நிஜமாவே ஆனந்த் இறந்து போனது பற்றித் தெரியாதா?"

"தெரியாதுதான்" என்றார். இப்போது சற்றுத் தயக்கம்.

"உங்ககிட்ட யாரும் வந்து விவரத்தைச் சொல்லலை?"

"இல்லை."

"ஏன் சார் புளுகுறீங்க. நாங்க உங்க அறைக்கு வர்றப்ப மாடிப் படியருகில் நோட்டீஸ் போர்டில் ஆனந்த் போட்டோ கருப்பு பார்டர்ல பெரிசா வெச்சு மாலை போட்டு தோற்றம் மறைவெல்லாம் எழுதி இரங்கல் செய்தி போட்டிருந்ததே?"

"நான் சரியா கவனிக்கலை."

"பொய்! வேற ஏதாவது காரணம் சொல்லுங்க."

டாக்டர் சோமசுந்தர் யோசித்தார். அவர் கைகள் நடுங்கின.

"கன் ஐ ஸ்மோக்?"

"தாராளமா! இது உங்க ஆபீஸ்."

மூன்று முறை பற்றவில்லை. படபடப்பாக இருந்தார். நெற்றியில் வியர்வை தெரிந்தது.

"சொல்லுங்க."

"உண்மையை சொல்லிடறேன். ஆனந்த் இறந்து போனது காலைல தெரியும்."

"பின்ன ஏன் எங்ககிட்ட தெரியவே தெரியாதுன்னு சொன்னீங்க?"

"அப்படியா சொன்னேன்?"

"அப்படித்தான் சொன்னீங்க."

"ஒரு வேளை ஸ்பான்டேனியஸ் ரியாக்ஷனா இருக்கலாம். உங்களைப் பார்த்த நெர்வஸ்னஸ்ஸா இருக்கலாம்."

"இது சரியான பதில் இல்லை. கமான்! கம் க்ளீன். நீங்க சம்பவம் நடந்த மதியம் ஆனந்த் வீட்டுக்கு போனதா விட்னஸ் பாத்திருக்காங்க."

"யாரு ஜமதக்னியா? தட் ராஸ்கல்."

"நீங்க போனது உங்களுக்கே தெரியாதா?"

"எப்ப சொல்றீங்க, என்ன தேதி?"

"சம்பவதினம்!"

"ஓ அதுவா! அது வந்து அது வந்து ஆனந்த் என்மேல கோபமா இருந்ததால அவனைத் தனிப்பட்ட முறையில் சமாதானப்படுத்தி விழாவுக்கு அழைக்கறதுக்குத் தான் போயிருந்தேன். அது தப்பா? அதும் முதநாள் சாயங்காலம்."

"இல்லை. கொலை நடந்த நாள்தான் போயிருக்கீங்க!"

"அதனாலதான் லேட்டா விழாவுக்கு வந்தீங்களா?" என்றார் சங்கர் திடீர் என்று.

"இல்ல்லை சார். ஐயோ பாத்ரூம் போயிருந்தேன்னு சொன்னேனே."

"ஆனந்த் வீட்டுக்கும் உங்க லாபுக்கும் கார்ல போனா பத்து நிமிஷத்தில போயிரலாம். அப்படித்தானே?"

"அய்யோ என்ன சார்!"

பின்ன, உண்மையா நடந்தது என்னன்னு சொல்லுங்க. அவரை நீங்க பயமுறுத்தினீங்களா இல்லையா?"

"ஆனந்த் சிறுபிள்ளைத்தனமா விழாவில் வந்து சத்தம் போடப் போறேன்னு சொன்னதால் பயமுறுத்தினேன் ஸார். என்னடா இது வம்பா போச்சு. ஸார், நான் ஆனந்தை கொல்லலை. அண்டர்ஸ்டாண்டு?"

"அப்படின்னு நீங்க சொல்றீங்க. உங்ககிட்ட கன் இருக்கா? இருந்ததா? பாயிண்ட் திரி எய்ட் வால்த்தர்?"

"அய்யோ, நீங்க தப்பான இடத்துக்கு வந்திருக்கீங்க."

"இல்லை."

மடக்கென்று மினரல்வாட்டர் பாட்டிலிருந்து தண்ணீர் குடித்தார். உதட்டைத் துடைத்துக் கொண்டு, "சரி, இப்ப என்ன பண்ணப் போறீங்க. அரெஸ்ட் பண்ணப் போறீங்களா?"

"எங்க கூட வர வேண்டியிருக்கும்."

"எங்க?"

"கமிஷனர் ஆபீசுக்கு. அங்க உங்களை விவரமாக கேள்வி கேக்கணும்."

"நான் வரமாட்டேன்னு சொன்னா? என்ன செய்வீங்க?"

"சொல்ல முடியாது."

"எனக்கு லாயரை கன்சல்ட் பண்ணணும்."

"பண்ணுங்க, காத்திருக்கோம்."

அவர் போனை எடுத்து டயல் செய்த நம்பர் கிடைக்காது, அதைத் தூக்கி எறிந்தார்.

மற்றொரு சிகரெட் பற்ற வைத்தார். இழுத்தார். யோசித்தார். சட்டென்று அவர் முகம் பிரகாசமாகியது. "வெயிட் மினிட். துப்பாக்கினா சொன்னீங்க?"

"ஆமாம்."

"சோனாலி எங்கிட்ட ஒரு துப்பாக்கி வாங்கறதைப் பத்தி ஒரு முறை பேசிருக்கா."

(தொடரும்)




எய்ட்ஸ்க்கு மருந்தே கிடையாது. எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் காட்டும் அன்பும், பரிவும் அவர்களை நீண்ட நாள் வாழ வைக்கும்.

உங்களின் சிறிதளவு அன்பும், ஆதரவும் அவர்களின் வாழ்க்கையை பெருமளவு மகிழ்ச்சியாக்கும்.

**எய்ட்ஸுக்கு மருந்து என்றும் மாறா அன்பு!**

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்**
417, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008.
தொலைபேசி எண் : 044-8255467

TNSACS/2003/98/ELEGANT

# சென்டு மல்லி

**சீதா ரவி**

**பா**ரிஜாதம் போல் மயக்கவுமில்லை.. பன்னீர்ப் பூவைப் போல் வாசனையை ஒளித்து வைத்து ரகசியமாக வெளியேற்றவு மில்லை.. இரண்டுக்கும் இடைப்பட்ட இதம் அது-

"என்ன பேரும்மா-இந்தப் பூவுக்கு..?"

"தெரியலையே கண்ணு.."

"சாமிக்குப் போடலாமோ..?"

"ஏன் போடக்கூடாது.. அழகான எதையும் சாமிக்குப் போடலாம்.."

கௌரி சந்தேகத்துடன் அம்மாவைப் பார்த்தாள்.

"இல்லம்மா.. பாட்டி சொல்லியிருக்காங்க இல்லியா...? சில பூவெல்லாம் போடக் கூடாதுன்னு.."

அம்மா கௌரியின் சின்னக் கையைப் பிடித்து வருடி உள்ளங்கை நடுவில் அந்த வெள்ளை மலரை வைத்தாள்.

"இத்தனூண்டு பூவிலே எவ்வளவு கச்சிதம் பார்த்தியா.. அதுதான் கடவுளோட சிருஷ்டி அற்புதம்.."

சற்றே கனத்த காம்புடன் கௌரியின் கையில் பூ குறுகுறுவென்று சிரித்தது. இத ழோரங்கள் இலேசாகச் சுருண்டு வெட் கப்படுவதுபோலிருந்தது. மெதுவாக மூக் கருகில் கொண்டு வந்து வாசனையை முகர்ந் தாள். நட்போடு அது அவளை ஆட்கொண் டது.

எட்டாவது பரீட்சை முடியும்வரை கௌரி தினமும் 'சென்டுமல்லி' மரத்திடம் போய் நிற்பாள். நாலு பூ கொண்டு வந்து சாமிக்குப் போட்டு விட்டுத்தான் ஸ்கூல். மழை பெய் தால்கூட தலையில் மைகா பையை குல்லா வாக மாட்டிக் கொண்டோ, சில சமயம் குடை பிடித்துக் கொண்டோ போய்விடுவாள். 'சென்டு மல்லி' அவள் வைத்த பெயர்தான். அது மழைத்துளிகளில் நனைந்து குளிர்ந்து சிரித்துக் கொண்டிருக்கும். அம்மா சொன்ன சிருஷ்டி அற்புதம் ஞாபகம் வரும். பரீட்சை பயமோ, வெயிலில் முட்டி போட்ட துக்கமோ எதுவா னாலும் மறந்து போய்விடும்.

**இ**ப்போது பரீட்சை பயமெல்லாம் பழங் கதை. வெயில், மழை, புயல் எதுவானாலும் பின்னால் குடை பிடித்து வரத் தயாராயிருக் கிறான் தியாகராஜன். கௌரிக்குச் சிரிப்பாய் வருகிறது.

"நான் என்ன சர்க்கரைக் கட்டியா...? கரைஞ்சா போயிடுவேன்..?"

"இல்லையில்லை.. நீ சிருஷ்டி அற்புதம்!" என்பான்.

அதில் துளியூண்டு கிண்டல் கலந்தி ருப்பது புரியாதா என்ன! அன்பும் உரிமை யும் கலந்த கிண்டல்தான் என்றாலும் தன் வார்த்தைகளைக் கொண்டே தன்னைச் சற்று அன்னியப்படுத்தும் கிண்டல்.

அந்த சிருஷ்டி அற்புதம் அவனுக்குக் கள்ளிச் செடியில் ஏன் தெரியவில்லை...? பெரிய பெரிய தொட்டிகளாக நான்கு தொட் டிகள். உருண்டையான கிரீடமாக பம்மென்று அவற்றுக்கு நடுவில் கள்ளி. கல்யாணப் பெண் ணுக்கு நகை போட்டதுபோல்தான் அதன் முட்கள் கௌரிக்குத் தெரிந்தன.


"வீட்டிலே கள்ளி வளர்க்கக் கூடாது கௌரி.."

"ஏங்க..?"

"ஆகாது.."

அதற்கு மேல் என்ன சொல்ல முடியும்...? உணர்வு பயப்படும்போது அறிவார்த்தமான வாதங்கள் மேலும் மிரட்டும்.

கள்ளிச் செடிகள் போய்விட்டன. திண்டுக் கல்லில் அந்தப் பெரிய தோட்ட வீட்டில் வேறு மரங்களுக்கும் மலர்களுக்கும் குறைவில்லை தான். தியாகராஜன் தொழிற்சாலைக்குப் போனால் இரவு எட்டுக்குத்தான் திரும்புவான். அவன் வரும் நேரத்தில் கௌரி பெரும்பாலும் பின்புறத்துச் சோலையில் இருட்டில் உட்கார்ந்திருப்பாள். தோட்டக்காரர் வடிவேலுவிடம் கொடுத்தனுப்பிய கள்ளிச் செடிகள் இப்போது எங்கேயிருக்கும்..? மூன்று வருடங்கள் ஆகியும் அவற்றை மறக்க முடியவில்லை.



சென்னையிலிருந்து கான்வாஸூம் வண்ணங்களும் அவன் வரவழைத்துத் தந்தபோது கூட, முதலில் வரையத் தோன்றியது அந்தக் கள்ளித் தொட்டிகளைத்தான்.. அதைப் பார்த்து தியாகராஜன் முகம் களிக்காமல் சிரித்தது ஆறுதல்.

நான்காவது கள்ளிச் செடியை பாதி முடித்து விட்டிருந்தாள். அதை எப்படியும் இன்று பூர்த்தி செய்ய வேண்டும் என்று பெயின்டைக் குழைத்தபோதுதான் அந்த வாசனை...! வின்ஸ்டாயில் நெடியையும் ஏமாற்றிவிட்டு அது அவளை வந்தடைந்தது.

கௌரி தூரிகையை அப்படியே போட்டு விட்டுத் தோட்டத்துக்குள் ஓடினாள்.. கொல்லைப்புற மதில் சுவரருகே புதரான பகுதியில்.. செண்டுமல்லி மரம்! எட்டாங் கிளாஸுக்குப் பிறகு எங்குமே பார்க்காத மரம். சின்னதாய் ஒரு கொத்துப் பூவுடன் யௌவனமாய் நின்றது.

'இத்தனை நாளாய் ஒளிஞ்சிருந்து உன்னை அதிசயப்படுத்தினேன் பார்த்தியா..' என்பது போல் சிரித்தது.

கண்களில் நீர் முட்ட கௌரியும் சிரித்தாள்.

"என்னம்மா அப்படியே நின்னுட்டீங்க..?"- வடிவேலு.

"அதோ வெள்ளைப் பூ பூத்திருக்கே சின்ன மரம்.. அது எப்படி முளைச்சது வடிவேலு..!"

"அதுவாம்மா... வேண்டாம்னு சொல்லி கள்ளிச் செடி நாலு தொட்டி குடுத்த பாரு.. அதுங்களோட ஒரு ஓரத்திலே இருந்துச்சு... இன்னா செடின்னு தெரில.. இருந்துட்டுப் போவட்டும்னு தொட்டியிலேருந்து எடுத்து நான்தான் இங்க நட்டு வச்சேன்.."

'கள்ளிச் செடிகளும் பத்திரமாய்த்தான் இருக்கும்...' என்று தோன்றியது கௌரிக்கு. ⊙

# சபல கேஸ்களை சமாளிப்பது எப்படி?



சம ஊதியம், சம வேலைச் சூழல் என்று இரு பாலருக்கும் பொதுவாக சட்டங்கள் இருக்கின்றன. இருந்தாலும் பெண் ஊழியர்களுக்கு - முக்கியமாக சிறு தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு - சக சபலக்கார ஆண் ஊழியர்களிடமிருந்து (முக்கியமாக மேலதிகாரியிடமிருந்து) சங்கடங்கள் ஏற்படலாம். அவற்றைத் தவிர்க்க மற்றும் எதிர்கொள்ள இதோ சில ஆலோசனைகள்!

● ஒருவரைப் பற்றி ஓரளாவது நன்கு புரிந்து கொள்ளச் சில மாதங்கள் தேவைப்படும். எனவே வேலைக்குச் சேர்ந்த கொஞ்ச மாதங்களாவது மேலதிகாரியோடு எந்தவித அனாவசியப் பேச்சும் வேண்டாம்.

● வேலையை விட்டு விட்டால் உங்கள் குடும்பமே நடுத்தெருவுக்கு வரக்கூடும் என்கிற அளவுக்கு அந்தச் சம்பளம் உங்களுக்கு முக்கியமானதாக இருக்கலாம். ஆனால் இந்த உண்மையை ஒருபோதும் அலுவலக ஆண்களின் காதுகளை எட்ட விடாதீர்கள்.

● கண்ணியமான உடைகளையே அணிந்து செல்லுங்கள். வெகு நாகரிகமான உடைகளை அணியும் பெண், பண்பாடு, ஒழுக்கம் என்ற வட்டத்தைத் தாண்டத் தயங்க மாட்டாள் என்று நினைப்பவர்கள் பலர் உண்டு.

● சொந்த சோகங்களை அலுவலகத்தில் கொட்ட வேண்டாம். "பக்க வாதம் வந்த அம்மா, வேலை கிடைக்காத அண்ணன், குடிகாரக் கணவன்" என்று கதறுவானேன்? பிறகு "நானிருக்கிறேன் உனக்கு ஆதரவாக" என்ற போர்வையில் மேலதிகாரி எல்லை மீறும் போது பதறுவானேன்?

● நேரடியாகத்தான் என்றில்லை. தொலைபேசியில் உறவினரிடமோ நண்பர்களிடமோ பேசும்போது மெதுவாக, அந்தரங்க விஷயங்கள் அலுவலகத்துக்குத் தெரியாத வகையில் பேசுவது அவசியம்.

● எந்த நியாயமான காரணமும் இல்லாமல் மேலதிகாரி உங்களுக்குத் தனிச் சலுகை எதையாவது தர முன் வந்தால் மறுத்து விடுங்கள்.

● சக ஆண் ஊழியர்கள் ஏ ஜோக்குகளை அள்ளி வீசினால் புரிந்து கொண்டால்கூட அதில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டாம். "ஜோக் அடிப்பதில் என்ன தப்பு?" என நீங்கள் நினைக்கலாம். "இவ்வளவு தாராளமாக இருப்பவள் இன்னும் கொஞ்சம் 'தாராளமாக' இருக்கக் கூடாதா?" என்று அவர்கள் நினைக்கலாம்!

● கூடப் பணியாற்றும் பெண்களிடம் தோழமை உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள். ஏதாவது அசந்தர்ப்பம் நேரும்போது கூட்டாக எதிர்ப்புக் குரல் எழுப்ப சௌகரியமாக இருக்கும்.

● அலுவலகத்தில் எல்லை மீறல் தொடங்கும் கால கட்டத்திலேயே (வேறு வகையில் இதை சமாளிப்பது கஷ்டமாக இருக்கும் என்று தோன்றினால்) மாற்று வேலை தேடும் முயற்சியைத் தொடங்கி விடுங்கள்.

● வேலையில் முழு கவனம் செலுத்தி அலுவலகத்துக்கு உங்கள் சேவை மிகவும் தேவை என்ற நிலையை உருவாக்கிக் கொள்ளுங்கள். அது உங்களிடம் மரியாதையை ஏற்படுத்தும். மரியாதையைப் போல் வலுவான கவசம் வேறு கிடையாது. மேலும், தவறாக நடந்து கொண்டால் ஓர் அற்புதமான ஊழியரை இழந்து விடுவோம் என்ற பயத்தில்கூட சபலக்காரர்கள் மனம் மாற வாய்ப்பு உண்டு.

— ஜி.எஸ்.எஸ்






### பன்னிரண்டாம் அத்தியாயம்

## குருவும் சீடனும்

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை இக் கதையைப் படித்து வரும் நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

திருசிராப்பள்ளி ஜில்லா லால்குடி தாலுக்காவில் அன்பில் என்ற பெயர் கொண்ட கிராமம் ஒன்று இருக்கிறது. இதை வடமொழியாளர் 'பிரேமபுரி' என்று மொழிபெயர்த்துக் கையாண்டிருக்கிறார்கள். இன்றைக்குச் சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கிராமத்தில் ஒரு வேளாளர் தம்முடைய பழைய வீட்டை இடித்துப் புதுப்பித்துக் கட்டுவதற்காக அஸ்திவாரம் தோண்டினார். அப்போது ஓர் அதிசயமான வஸ்து பூமிக்கடியிலிருந்து அகப்பட்டது. பல செப்புத் தகடுகளை நுனியில் துவாரமிட்டு வளையத்தினால் கோத்திருந்தது. அந்தத் தகடுகளில் ஏதோ செதுக்கி எழுதப்பட்டிருந்தது. இரண்டு ஆள் தூக்க முடியாத கனமுள்ள அந்தத் தகடுகளை அவர் சில காலம் வைத்திருந்தார். பிறகு அந்தக் கிராமத்துக் கோயிலைப்



அமரர் கல்கி

கல்கி கலெக்ஷன்

புதுப்பித்துத் திருப்பணி செய்யலாம் என்று வந்த ஸ்ரீ ஆர். எஸ். எல். லக்ஷ்மண செட்டியார் என்பவரிடம் அத்தகடு களைக் கொடுத்தார். ஸ்ரீ லக்ஷ்மணச் செட்டியார் அத் தகடுகளில் சரித்திர சம்பந்தமான விவரங்கள் இருக்கலாம் என்று ஊகித்து அவற்றை எடுத்துக் கொண்டு போய் மகாமகோபாத்தியாய சுவாமிநாத அய்யர் அவர்களிடம் தந் தார். அய்யர் அவர்கள் அச்செப்பேடு களில் மிக முக்கியமான விவரங்கள் இருப்பதைக் கண்டு அந்த நாளில் சிலா சாஸன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீ டி.ஏ. கோபிநாதராவ் எம்.ஏ. என்பாரிடம் அத்தகடுகளைச் சேர்ப்பித்தார். ஸ்ரீ கோபிநாதராவ் அச்செப்புத் தகடுகளைக் கண்டதும் அருமையான புதையலை எடுத்தவர் போல் அகமகிழ்ந்தார். ஏனென்றால், சோழ மன்னர்களின் வம்சத்தைப் பற்றிய அவ்வளவு முக்கிய மான விவரங்கள் அச்செப்பேடுகளில் செதுக்கப்பட்டிருந்தன.

சுந்தர சோழச் சக்கரவர்த்தியின் 'மான்ய மந்திரி'யான அன்பில் அநிருத் தப் பிரமராயருக்குச் சக்கரவர்த்தி, பட் டத்துக்கு வந்த நாலாம் ஆண்டில் அளித்த பத்துவேலி நில சாஸனத்தைப் பற்றிய விவரங்கள் அந்தச் செப்பேடு களில் செதுக்கப்பட்டிருந்தன. இந்த நில சாஸனத்தை எழுதிய மாதவ பட்டர் என்பவர் சுந்தர சோழர் வரைக்கும் வந்த சோழ வம்சாவளியை அதில் குறிப்பிட்டி ருந்தார். அத்துடன் அநிருத்தப் பிரம்ம ராஜரின் வைஷ்ணவப் பரம்பரையைக் குறிப்பிட்டு, அவருடைய தந்தை, தாயார், பாட்டனார், கொள்ளுப் பாட்டனார் ஆகியவர்கள் ஸ்ரீ ரங்கநாதரின் ஆலயத் தில் செய்து வந்த சேவையைக் குறித்தும் எழுதியிருந்தார்.

இதற்கு முன்னால் அகப்பட்டிருந்த ஆனைமங்கலச் செப்பேடுகள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள் - ஆகியவற்றில் கொடுத்திருந்த சோழ வம்சாவளியுடன் அன்பில் செப்பேடு களில் கண்டது பெரும்பாலும் ஒத்திருந் தது. எனவே, அந்தச் செப்பேடுகளில் கண்டவை சரித்திர பூர்வமான உண்மை விவரங்கள் என்பது ஊர்ஜிதமாயிற்று. மற்ற இரண்டு செப்பேடுகளில் காணாத இன்னும் சில விவரங்களும் இருந்தபடி யால், "அன்பிற் செப்பேடுகள்" தமிழ் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சித் துறையில் மிகப் பிரசித்தி அடைந்தன.

எனவே, அநிருத்தப் பிரம்மராஜர் என்பார் சரித்திரச் செப்பேடுகளில் புகழ்பெற்ற சோழ சாம்ராஜ்ய மந்திரி என்பதை மனத்தில் வைத்துக் கொண்டு மேலே கதையைத் தொடர்ந்து படிக்கும் படி நேயர்களைக் கேட்டுக் கொள் கிறோம்.

மாளிய முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராஜர் வீற்றிருந்த மண் டபத்துக்குள் ஆழ்வார்க்கடி யான் பிரவேசித்தான். அவரை மூன்று தடவை சுற்றி வந்தான். சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து எழுந்தான்.

"ஓம் ஹ்ராம் ஹ்ரீம், வஷட்டு!" என்று நாலு தடவை உரத்த குரலில் உச்சரித்து விட்டு, "குருதேவரே! விடை கொடுங் கள்!" என்றான்.

அநிருத்தர் புன்னகையுடனே "திருமலை! என்ன இந்தப் போடு போடுகிறாய்? எதற்கு என்னிடத்தில் விடை கேட்கிறாய்?" என்றார்.

"தாஸன் அவலம்பித்த, ஸ்ரீ வைஷ் ணவ சம்பிரதாயத்தையும், 'ஆழ்வார்க் கடியான்' என்ற பெயரையும் தங்களுக் குக் கைங்கரியம் செய்யும் பாக்கியத் தையும் இந்த மாகடலில் அர்ப்பணம் செய்து விட்டு வீர சைவ காளாமுக சம்பிரதாயத்தைச் சேர்ந்து விடப் போகிறேன். கையில் மண்டை ஓட்டை எடுத்துக் கொண்டு 'ஓம் ஹ்ராம் ஹ்ரீம் வஷட்டு' என்ற மகத்தான மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு ஊர் ஊராகப் போவேன்! தலையில் ஜடாமகுடமும் முகத்தில் நீண்ட தாடியும் வளர்த்துக்

கொண்டு, எதிர்ப்படுகிற ஸ்ரீ வைஷ்ண வர்களுடைய மண்டைகளையெல்லாம் இந்தத் தடியினால் அடித்துப் பிளப் பேன்!...''

"அப்பனே! நில்! நில்! என்னுடைய மண்டைக்குக் கூட அந்தக் கதிதானோ?''

"குருவே! தாங்கள் ஸ்ரீ வைஷ்ணவ சம் பிரதாயத்தை இன்னமும் அவலம்பிக்கிற வர்தானோ?''

''திருமலை! அதைப் பற்றி உனக்கு என்ன சந்தேகம்? என்னை யார் என்று நினைத்தாய்?''

"தாங்கள் யார்? அது விஷயத்திலே தான் எனக்கும் சந்தேகம் ஏற்பட்டு விட் டது. இரண்டு நதிகளின் நடுவில் அறிது யில் புரிந்து சகல புவனங்களையும் காக் கும் ஸ்ரீ ரங்கநாதருக்குப் பணி செய் வதையே வாழ்க்கை எடுத்த பயனாகக் கொண்டிருந்த அன்பில் அனந்தாழ்வார் சுவாமிகளின் கொள்ளுப் பேரர் தாங் கள்தானே!...''

"ஆம், அப்பனே! நான்தான்!''

''ஸ்ரீமந் நாராயண நாமத்தின் மகி மையை நானிலத்துக்கெல்லாம் எடுத் துரைத்த அன்பில் அநிருத்தப் பட்டாச் சாரியின் திருப்பேரரும் தாங்கள்தானே?''

"ஆமாம்! நானேதான்! அந்த மகானு டைய திருநாமத்தைத்தான் எனக்கும் சூட்டினார்கள்!''

"ஆழ்வார்களுடைய அமுதொழுகும் மதுர கீதங்களைப் பாடிப் பக்த கோடி களைப் பரவசப்படுத்தி வந்த நாராயண பட்டாச்சாரியின் சாக்ஷாத் சிமந்த புத்திர ரும் தாங்களேயல்லவா?''

"ஆமாம், அப்பா ஆமாம்!''

''ஸ்ரீரங்கநாதர் பள்ளிகொண்ட பொன்னரங்கக் கோயிலில் தினம் தினம் நந்தா விளக்கு ஏற்றி வைத்தும், யாத்திரி கர்களுக்கு வெள்ளித் தட்டில் அன்ன மிட்டும் கைங்கரியம் புரிந்து வந்த மங் கையர் திலகத்தின் புதல்வரும் தாங்களே அல்லவா?''

"சந்தேகமே இல்லை!''

''அப்படியானால், என் கண்கள் என்னை மோசம் செய்கின்றனவா? என் கண் முன்னே நான் பார்ப்பது பொய்யா? என் இரு செவிகளில் நான் கேட்டதும் பொய்யா?''

"எதைச் சொல்கிறாய், அப்பனே? உன் கண்களின் மேலும் காதுகளின் பேரிலும் சந்தேகம் கொள்ளும்படி என்ன நேர்ந்து விட்டது?''

"தாங்கள் இந்த ஊர்ச் சிவன் கோயி லுக்குச் சென்று அபிஷேகம் - அர்ச் சனை எல்லாம் நடத்தி வைத்ததாக என் செவிகளால் கேட்டேன்.''

''அது உண்மையேதான்; உன் செவிகள் உன்னை மோசம் செய்து விட வில்லை.''

"தாங்கள் சிவன் கோவிலுக்குப் போய் வந்ததின் அடையாளங்கள் தங்கள் திருமேனியில் இருப்பதாக என் கண்கள் காண்பதும் உண்மைதான் போலும்!''

"அதுவும் உண்மையே!''

''இந்தக் கலியுகத்தில் ஸ்ரீமந்நாரா யணனே தெய்வம் என்றும், ஆழ்வார் களின் பாசுரங்களே வேதம் என்றும், ஹரிநாம சங்கீர்த்தனமே மோட்சத்தை அடையும் மார்க்கம் என்றும் எனக்குக் கற்பித்த குருதேவர் தாங்களே அல் லவா?''

"ஆம்; அதனால் என்ன?''

"குருதேவராகிய தாங்களே சொல்வது ஒன்றும், செய்வது ஒன்றுமாக இருந்தால், சீடனாகிய நான் என்ன செய்யக் கிடக் கின்றது?''

''திருமலை! நான் சிவன் கோயி லுக்குப் போய்த் தரிசனம் செய்தது பற்றித்தானே சொல்கிறாய்?''

"குருதேவரே! அங்கே எந்தக் கடவு ளைத் தரிசனம் செய்தீர்கள்?''

"சந்தேகம் என்ன? நாராயண மூர்த்தி யைத்தான்.''

''இராமேச்சுரக் கோயிலுக்குள் இலிங்க வடிவம் வைத்திருப்பதாகவல் லவோ கேள்விப்பட்டிருக்கிறேன்! அத னால்தானே இங்குள்ள வீரசைவ பட்




டர்மார்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு அவ்வளவு கொக்கரித்தார்கள்?''

''பிள்ளாய்! நீ திருநகரியில் திரு அவதாரம் செய்த நம் சடகோபரின் அடியார்க்கடியான் என்று நாமம் பூண்டிருப்பது சத்தியந்தானே?''

''அதில் என்ன சந்தேகம்?''

''நம்மாழ்வாரின் அருள்வாக்கைச் சற்று ஞாபகப்படுத்திக் கொள். நீ மறந்திருந்தால் நானே நினைவூட்டுகிறேன். கேள் :

**'இலிங்கத்திட்ட புராணத்தீரும்**
**சமணரும் சாக்கியரும்**
**வலிந்து வாது செய்வீர்களும்**
**மற்று நுந் தெய்வமுமாகி நின்**
**றானே!...'**

இவ்வாறு சடகோபரே சாதித்திருக்கும் போது சிவலிங்கத்தில் நான் நாராயணனைத் தரிசித்தது தவறா?''

''ஆகா! சடகோபரின் அருள்வாக்கே வாக்கு! இலிங்கத்தை வழிபடுவோரைச் சமணரோடும் சாக்கியரோடும் கொண்டு போய்த் தள்ளினார், பாருங்கள்!''

''அப்பனே! உன் குதர்க்க புத்தி உன்னை விட்டு எப்போது நீங்குமோ, தெரியவில்லை. நம் சடகோபர் மேலும் சொல்லியிருப்பதைக் கேள்.

**'நீராய் நிலனாய்த் தீயாய் காலாய்**
**நெடுவானாய்ச்**
**சீரார் சுடர்கள் இரண்டாய்ச்**
**சிவனாய் அயனாய்...'**

உள்ளவன் ஸ்ரீ நாராயண மூர்த்தியே என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இன்னும் கேள், திருமலை! கேட்டு உன் மனமாசைத் துடைத்துக் கொள்!

**'முனியே நான்முகனே**
**முக்கண்ணப்பா! என் பொல்லாக்**
**கனிவாய்த் தாமரைக்கண்**
**கருமாணிக்கமே என் கள்வா!**
**தனியேன் ஆருயிரே என்தலை**
**மிசையாய் வந்திட்டு....'**

கேட்டாயா, திருமலை! 'முக்கண்ணப்பா!' என்று நம் சடகோபர் கூவி அழைத்துத் தம் தலை மீது வரும்படி பிரார்த்திக்கிறார்! நீயோ சிவன் கோயிலுக்கு நான் போனது பற்றி ஆட்சேபிக்கிறாய்!...''

''குருதேவரே! மன்னிக்க வேண்டும்; அபசாரத்தை க்ஷமிக்க வேண்டும்! நம்மாழ்வாரின் பாசுரங்கள் அனைத்தையும் தெரிந்து கொள்ளாமையினால் வீண் சண்டைகளில் காலங் கழித்தேன். தங்களையும் சந்தேகித்தேன். இனி எனக்கு ஒரு வரம் கொடுத்து அருள வேண்டும்.''

''என்ன வரம் வேண்டும் என்று சொன்னாயானால், கொடுப்பதைப் பற்றி யோசிக்கலாம்.''

''திருக்குருகூர் சென்று அங்கேயே தங்கிவிட ஆசைப்படுகிறேன். நம் சடகோபரின் ஆயிரம் பாடல்களையும் சேகரித்துக் கொண்டு பிறகு ஊர் ஊராகச் சென்று அந்தப் பாடல்களைக் கானம் செய்ய விரும்புகிறேன்...''

"இந்த ஆசை உனக்கு ஏன் வந்தது?"

"வடவேங்கடத்திலிருந்து வரும் வழியில் வீரநாராயணப் பெருமாள் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்கள் சிலவற்றைப் பாடினேன். அந்தச் சந்நிதியில் கைங்கரியம் செய்யும் ஈசுவரபட்டர் என்னும் பெரியவர் கேட்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார்..."

"ஈசுவர பட்டர் மகா பக்திமான்; நல்ல சிஷ்டர்."

"அவருடைய இளம் புதல்வன் ஒருவனும் அவர் அருகில் நின்று கேட்டுக் கொண்டிருந்தான். அந்த இளம் பாலகனின் பால் வடியும் முகம் ஆழ்வார் பாசுரத்தைக் கேட்டுப் பூரண சந்திரனைப் போல் பிரகாசித்தது. 'மற்றப் பாடல்களும் தெரியுமா?' என்று அந்தச் சின்னஞ்சிறு பிள்ளை பால் மணம் மாறாத வாயினால் கேட்டான். 'தெரியாது' என்று சொல்ல எனக்கு வெட்கமாயிருந்தது. ஆழ்வார்களின் தொண்டுக்கே ஏன் இந்த நாயேனை அர்ப்பணம் செய்துவிடக் கூடாது என்று அப்போதே தோன்றியது. இன்றைக்கு அந்த எண்ணம் உறுதிப்பட்டு விட்டது...."

"திருமலை! அவரவர்களும் ஸ்வதர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கீதாச்சாரியார் அருள்புரிந்திருக்கிறார் அல்லவோ?"

"ஆம், குருவே!"


"ஆழ்வார்களின் பாசுரங்களைச் சேகரிப்பதற்கும் பரப்புவதற்கும் மகான்கள் அவதரிப்பார்கள். அதுபோலவே ஆழ்வார்களுடைய பாடல்களில் உள்ள வேத சாரமான தத்துவங்களை நிருபணம் செய்து வடமொழியின் மூலம் பரத கண்டமெங்கும் நிலைநாட்டக் கூடிய அவதார மூர்த்திகளும் இந்நாட்டில் ஜனிப்பார்கள். நீயும் நானும் இராஜ்ய சேவையை நமது ஸ்வதர்மமாகக் கொண்டவர்கள். சோழச் சக்கரவர்த்தியின் சேவையில் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்வதாக நாம் சபதம் செய்திருப்பதை மறந்தனையா?...."

"மறக்கவில்லை, குருவே! ஆனால் அது உசிதமா என்று சந்தேகம் தோன்றி என் உள்ளத்தை அரித்து வருகிறது. முக்கியமாக, தங்களைப் பற்றிச் சில இடங்களில் பேசிக் கொள்வதைக் கேட்டால்..."

"என்ன பேசிக் கொள்கிறார்கள்?"

"தங்களுக்குச் சக்கரவர்த்தி பத்து வேலி நிலம் மானியம் விட்டு அதைச் செப்பேட்டிலும் எழுதிக் கொடுத்திருப்பதால் தாங்கள் வைஷ்ணவ சம்பிரதாயத்தை விட்டுவிட்டதாகச் சிலர் சொல்கிறார்கள். ஜாதி தர்மத்தைப் புறக்கணித்துக் கப்பல் பிரயாணம் செய்ததாகவும் கூறுகிறார்கள்...."

"அந்தப் பொறாமைக்காரர்கள் சொல்வதை நீ பொருட்படுத்த வேண்டாம். நம்முடைய ஜாதி கிணற்றுத் தவளைகளாக இருக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். சக்கரவர்த்தி எனக்குப் பத்து வேலி நிலம் மானியம் கொடுத்திருப்பது உண்மை

தான். அதைச் செப்பேட்டிலும் எழுதிக் கொடுத்திருக்கிறார். ஆனால் அதற்கு நாலு வருஷங்களுக்கு முன்பே சக்கர வர்த்திக்கு நான் மந்திரியானேன் என்பது உனக்குத் தெரியும் அல்லவா?''

ஆழ்வார்க்கடியான் மௌனமாயிருந் தான்.

''சக்கரவர்த்திக்கும் எனக்கும் எப் போது நட்பு ஏற்பட்டது என்றாவது உனக்குத் தெரியுமா? நாங்கள் இருவரும் இளம்பிராயத்தில் ஒரே ஆசிரியரிடம் பாடங் கற்றோம். செந்தமிழும் வட மொழியும் பயின்றோம். கணிதம், வான சாஸ்திரம், தர்க்கம், வியாகரணம் எல் லாம் படித்தோம். அப்போதெல்லாம் சுந்தர சோழர் சிம்மாசனம் ஏறப் போகிறார் என்று யாரும் கனவிலும் எண்ணியதில்லை. அவராவது நானாவது அதைப் பற்றிச் சிந்தித்ததே கிடையாது. இராஜாதித்தரும் கண்டராதித்தரும் காலமாகி அரிஞ்சய சோழர் பட்டத் துக்கு வருவார் என்று யார் நினைத்தது? அரிஞ்சயருக்கு அவ்வளவு விரைவில் துர்மரணம் சம்பவித்துச் சுந்தர சோழர் பட்டத்துக்கு வரும்படியிருக்கும் என்று தான் யார் நினைத்தார்கள்? சுந்தர சோழர் சிம்மாசனம் ஏறியபோது அத னால் பல சிக்கல்கள் விளையும் என்று எதிர்பார்த்தார். உடனிருந்து நான் உதவு வதாயிருந்தால் பட்டத்தை ஒப்புக் கொள்வதாகவும் இல்லாவிட்டால் மறுத்து விடுவதாகவும் கூறினார். இராஜ்ய நிர்வாகத்தில் அவருக்கு உதவுவதாக அப்போது வாக்களித்தேன். அந்த வாக்குறுதியை இன்றளவும் நிறை வேற்றி வருகிறேன். இதெல்லாம் உனக் குத் தெரியாதா, திருமலை?''

''எனக்குத் தெரியும், குருதேவா! எனக்கு ஒருவனுக்கு மட்டும் தெரிந்து என்ன பயன்? ஜனங்களுக்குத் தெரி யாதுதானே? நாட்டிலும் நகரத்திலும் வம்பு பேசுகிறவர்களுக்குத் தெரியாது தானே?''

''வம்பு பேசுகிறவர்களைப் பற்றி நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம். பரம் பரையான ஆச்சாரியத் தொழிலை விட்டு விட்டு நான் இராஜ சேவையில் இறங்கியது பற்றி இதற்கு முன்னால் நானே சில சமயம் குழப்பமடைந்த துண்டு. ஆனால் சென்ற இரண்டு நாட் களாக அத்தகைய குழப்பம் எனக்குச் சிறிதும் இல்லை. திருமலை! நான் இரா மேசுவர ஆலயத்தில் சுவாமி தரிசனத்துக் காக இங்கு வரவில்லை என்பதும் மாதோட்டம் போவதற்காகவே இங்கு வந்தேன் என்பதும் உனக்குத் தெரியும் அல்லவா?''

''அப்படித்தான் ஊகித்தேன், குரு தேவரே!''

''நீ ஊகித்தது சரியே. அன்றைக்குச் சம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் பரவசமாக வர்ணித்தபடியேதான் இன்றைக்கும் பாலாவி நதிக்கரையில் மாதோட்டம் இருக்கிறது.

**'வண்டுபண்செயும் மாமலர்ப்**
**பொழில்**
**மஞ்ஞை நடமிடு மாதோட்டம்**
**தொண்டர் நாடொறுந்துதிசெய**
**அருள்செய் கேதீச்சுர மதுதானே!'**

என்று சம்பந்தர் பாடியிருக்கிறாரே, அந்த மாதோட்டத்தை நேரில் பார்க் காமல் எழுதியிருக்க முடியுமா? இந்த இராமேச்சுரத் தீவிலிருந்தபடியே மாதோட்டத்தை எட்டிப் பார்த்து விட்டு எழுதியதாகச் சொல்லுகிறார்கள் கிணற் றுத் தவளைப் பண்டிதர்கள் சிலர். அத் தகையோர் சொல்வதை நீ பொருட் படுத்த வேண்டாம்...''

''சுவாமி! மாதோட்டத்தின் இயற்கை வளங்களைக் கண்டு களிப்பதற்காகவா தாங்கள் அந்த க்ஷேத்திரத்துக்குச் சென்றி ருந்தீர்கள்?''

''இல்லை; உன்னை அங்கே அனுப்ப எண்ணியிருப்பதால் அதைப் பற்றியும் சொன்னேன். நான் சென்றது இளவரசர் அருள்மொழிவர்மரைப் பார்ப்பதற் காக....''

''இளவரசரைப் பார்த்தீர்களா, குருதேவரே?'' என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான். அவனுடைய பேச்சில் இப்போதுதான் சிறிது ஆர்வமும் பரபரப்பும் தொனித்தன.

''ஆகா! உனக்குக் கூட ஆவல் உண்டாகி விட்டதல்லவா, இளவரசரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு? ஆம், திருமலை! இளவரசரைப் பார்த்தேன்; பேசினேன். இலங்கையிலிருந்து வந்து கொண்டிருந்த அதிசயமான செய்திகள் எவ்வளவு தூரம் உண்மை என்பதை நேரில் தெரிந்து கொண்டேன். கேள், அப்பனே! இலங்கை அரசன் மகிந்தனிடம் ஒரு மாபெரும் சைன்யம் இருந்தது. அந்தச் சைன்யம் இப்போது இல்லவே இல்லை. அது என்ன ஆயிற்று தெரியுமா? சூரியனைக் கண்ட பனி போல் கரைந்து மறைந்து போய் விட்டது! மகிந்தனுடைய சைன்யத்திலே பாண்டிய நாட்டிலிருந்தும் சேர நாட்டிலிருந்தும் சென்ற வீரர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் நம் இளவரசர் படைத் தலைமைவகித்து வருகிறார் என்று அறிந்ததும் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டார்கள். ஒருவரைப் போல் அனைவரும் நம்முடைய கட்சிக்கே வந்து சேர்ந்து விட்டார்கள்! மகிந்தன் எப்படிப் போர் புரிவான்? போயே போய் விட்டான். மலைகள் சூழ்ந்த ரோஹண நாட்டிற்குச் சென்று ஒளிந்து கொண்டிருக்கிறான். ஆக, நமது சைன்யம் போர் செய்வதற்கு அங்கு இப்போது எதிரிகளே இல்லை!''

''அப்படியானால், குருதேவரே! இளவரசர் நம் சைனியத்துடன் திரும்பி விட வேண்டியதுதானே? மேலும் அங்கே இருப்பானேன்? நம் வீரர்களுக்குத் தானியம் அனுப்புவது பற்றிய ரகளையெல்லாம் எதற்காக?''

''எதிரிகள் இல்லையென்று சொல்லித் திரும்பி விடலாம். ஆனால் இளவரசருக்கு அதில் இஷ்டமில்லை. எனக்கும் அதில் சம்மதமில்லை. இளவரசரும் சைனியமும் இப்பால் வந்ததும் மகிந்தன் மலைநாட்டிலிருந்து வெளி வருவான். மறுபடியும் பழையபடி போர் தொடங்கும். அதில் என்ன பயன்? இலங்கை மன்னரும் மக்களும் ஒன்று நமக்குச் சிநேகிதர்களாக வேண்டும். அல்லது புலிக் கொடியின் ஆட்சியை அங்கே நிரந்தரமாக நிறுவுதல் வேண்டும். இந்த இரண்டு வகை முயற்சியிலும் இளவரசர் ஈடுபட்டிருக்கிறார். நமது போர் வீரர்கள் இப்போது இலங்கையில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? பழைய போர்களில் அநுராதபுர நகரமே நாசமாகி விட்டது. அங்கிருந்த பழைமையான புத்த விஹாரங்கள், கோயில்கள், தாது கர்ப்ப கோபுரங்கள் - எல்லாம் இடிந்து பாழாய்க் கிடக்கின்றன. இளவரசரின் கட்டளையின் பேரில் அக்கட்டடங்களையெல்லாம் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்!''

''அழகாய்த்தானிருக்கிறது. சைவம், வைஷ்ணவம் இரண்டையும் கைவிட்டு இளவரசர் சாக்கிய மதத்திலேயே ஒரு வேளை சேர்ந்து விடுவாரோ, என்னமோ? அதையும் தாங்கள் ஆமோதிப்பீர்களோ?''

''நானும் நீயும் ஆமோதித்தாலும் ஒன்றுதான்; ஆமோதிக்காவிட்டாலும் ஒன்றுதான். நம்மைப் போன்றவர்கள் நம்முடைய மதமே பெரிது என்று சண்டையிட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு நாட்டை ஆளும் அரசர் அவருடைய பிரஜைகள் அனுசரிக்கும் சமயங்கள் எல்லாவற்றையும் ஆதரித்துப் பராமரிக்க வேண்டும். இந்த உண்மையை யாருடைய தூண்டுதலுமில்லாமல் இளவரசர் தாமே உணர்ந்திருக்கிறார். சந்தர்ப்பம் கிடைத்ததும் காரியத்திலும் செய்து காட்டுகிறார்! திருமலை! இதைக் கேள்! நம் இளவரசர் அருள்மொழிவர்மருடைய கரங்களில் சங்கு சக்கர ரேகை இருப்பதாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன்; நீயும் கேட்டிருப்பாய். ஆனால் அவருடைய கரங்களை



நீட்டச் சொல்லி நான் பார்த்ததில்லை. சங்கு சக்கர ரேகை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒன்று நிச்சயமாகச் சொல்கிறேன். இந்தப் பூ மண்டலத்தை ஏக சக்ராதிபதியாக ஆளத் தகுந்தவர் ஒருவர் உண்டு என்றால் அவர் இளவரசர் அருள்மொழிவர்மர்தான். பிறவியிலேயே அத்தகைய தெய்வ கடாட்சத்துடன் சிலர் பிறக்கிறார்கள். சற்றுமுன் சில வர்த்தகத் தலைவர்களும் கைக்கோளப் படை சேநாதிபதிகளும் வந்து பேசிக் கொண்டிருந்தார்களே, அது உன் காதில் விழுந்ததா? இளவரசருக்கு என்றால் நம் வர்த்தகர்கள், - காசிலேயே கருத்துள்ளவர்கள், - எவ்வளவு தாராளமாகி விடுகிறார்கள், பார்த்தாயா? சில நாளைக்கு முன்னால் பொதிகை மலைச் சிகரத்தில் ஒரு தவயோகி

யைப் பார்த்தேன். அவர் ஞானக்கண் படைத்த மகான். அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும். இப்போது தென்னாடு மேம்பாடு அடையும் காலம் வந்திருக்கிறது. வெகு காலமாக இப் புண்ணிய பாரத பூமியில் பெரிய பெரிய சக்கரவர்த்திகளும் வீராதி வீரர்களும் ஞானப் பெருஞ் செல்வர்களும் மகா கவிஞர்களும் வடநாட்டிலேயே அவதரித்து வந்தார்கள். ஆனால் வடநாட்டைச் சீக்கிரம் கிரகணம் பிடிக்கப் போகிறது. இமய மலைக்கு அப்பாலிருந்து ஒரு மகா முரட்டுச் சாதியார் வந்து வடநாட்டைச் சின்னாபின்னம் செய்வார்கள். கோயில்களையும் விக்கிரகங்களையும் உடைத்துப் போடுவார்கள். ஸநாதன தர்மம் பேராபத்துக்கு உள்ளாகும். அப்போது நமது தர்மம், வேத



சாஸ்திரம், கோயில், வழிபாடு - ஆகிய வற்றையெல்லாம் தென்னாடுதான் காப்பாற்றித் தரப் போகிறது. வீராதி வீரர்களான சக்கரவர்த்திகள் இத்தென்னாட்டில் தோன்றி நாலு திசைகளிலும் ஆட்சி செலுத்துவார்கள். மகா ஞானிகளும், பண்டிதோத்தமர்களும், பக்தசிரோமணிகளும் இத்தென்னாட்டில் அவதரிப்பார்கள்!' என்று இவ்விதம் அந்தப் பொதிகை மலைச் சிவயோகி அருளினார். அந்த யோகியின் தீர்க்கதரிசனம் உண்மையாகும் என்ற நம்பிக்கை எனக்கு இப்போது பிறந்திருக்கிறது, திருமலை!"

"சுவாமி! தாங்கள் ஏதேதோ ஆகாசக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அங்கே இராஜ்யத்தின் அஸ்திவாரத்தையே தகர்த்தெறியப் பார்க்கிறார்கள். குரு தேவரே! நான் பார்த்ததையெல்லாம் தாங்கள் பார்த்து நான் கேட்டதையெல்லாம் தாங்களும் கேட்டிருந்தால் இவ்வளவு குதூகலமாயிருக்க மாட்டீர்கள். இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏற்படப் போகும் அபாயத்தை நினைத்துக் கதிகலங்குவீர்கள்..."

"திருமலை! ஆம், நான் மறந்தே விட்டேன். அதிக உற்சாகம் என் அறிவை மூடி விட்டது. நீ உன் பிரயாணத்தில் தெரிந்து வந்த செய்திகளை இன்னும் நான் கேட்கவே இல்லை. சொல், கேட்கிறேன். எவ்வளவு பயங்கரமான செய்திகளாயிருந்தாலும் தயங்காமல் சொல்!"

"சுவாமி! இங்கேயே சொல்லும்படி ஆக்ஞாபிக்கிறீர்களா? நான் கொண்டு வந்த செய்திகளை வாயு பகவான் கேட்டால் நடுங்குவார்; சமுத்திர ராஜன் கேட்டால் ஸ்தம்பித்து நிற்பார்; பட்சிகள் கேட்டால் பறக்கும் சக்தியை இழந்து சுருண்டு விடும்; ஆகாசவாணியும் பூமாதேவியும் கூட அலறி விடுவார்கள். அப்படிப்பட்ட செய்திகளை இங்கே பகிரங்கமாகச் சொல்லும்படியா பணிக்கிறீர்கள்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அப்படியானால் வா! காற்றும் கனலும் புகாத பாதாளக் குகை ஒன்று இந்தத் தீவிலே இருக்கிறது. அங்கே வந்து விவரமாகச் சொல்லு!" என்றார் அநிருத்தப் பிரம்மராயர்.

## பதிமூன்றாம் அத்தியாயம்

# "பொன்னியின் செல்வன்"

வந்தியத்தேவன் நாகத் தீவின் முனையில் இறங்கி மாதோட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்த அதே சமயத்தில், அநிருத்தப் பிரம்மராயரும் ஆழ்வார்க்கடியானும் சாம்ராஜ்ய நிலைமையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், குந்தவை தேவியும் கொடும்பாளூர் இளவரசி வானதியும், அம்பாரி வைத்த ஆனை மீது ஏறித் தஞ்சை நகரை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

இளையபிராட்டி சில காலமாகத் தஞ்சைக்குப் போவதில்லை என்று வைத்துக் கொண்டிருந்தாள். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. தஞ்சையில் அரண்மனைப் பெண்டிர் தனித் தனியாக வசிக்கும்படியாகப் போதிய அரண்மனைகள் இன்னும் உண்டாகவில்லை. சக்கரவர்த்தியின் பிரதான அரண்மனையிலேயே எல்லாப் பெண்டிரும் இருந்தாக வேண்டும். மற்ற அரண்மனைகளையெல்லாம் பழுவேட்டரையர்களும் மற்றும் பெருந்தரத்து அரசாங்க அதிகாரிகளும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். பழையாறையில் அரண்மனைப் பெண்டிர் சுயேச்சையாக இருக்க முடிந்தது. விருப்பம் போல் வெளியில் போகலாம்; வரலாம். ஆனால் தஞ்சையில் வசித்தால் பழுவேட்டரையர்களின்

கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத் தீர வேண்டும். கோட்டைக்குள்ளும் அரண் மனைக்குள்ளும் இஷ்டம் போல் வரு வதும் போவதும் இயலாத காரியம். அம் மாதிரி கட்டுப்பாடுகளும் நிர்ப்பந்தங் களும் இளையபிராட்டிக்குப் பிடிப் பதில்லை. அல்லாமலும் பழுவூர் இளையராணியின் செருக்கும் அவளு டைய அகம்பாவ நடத்தைகளும் குந்த வைப் பிராட்டிக்கு மிக்க வெறுப்பை அளித்தன. அரண்மனைப் பெண்டிர் பழையாறையில் இருப்பதையே சக்கர வர்த்தியும் விரும்பினார். இந்தக் கார ணங்களினால் குந்தவைப் பிராட்டி பழையாறையிலேயே வசித்து வந்தாள். உடம்பு குணமில்லாத தன் அருமைத் தந் தையைப் பார்க்க வேண்டும், அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தையும் கட்டுப்படுத்திக் கொண் டிருந்தாள்.

ஆனால் வந்தியத்தேவன் வந்து போனதிலிருந்து இளையபிராட் டியின் மனத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. இராஜரீகத்தில் பயங் கரமான சூழ்ச்சிகளும் சதிகளும் நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது நாம் பழையாறையில் உல்லாசமாக நதிகளில் ஓடம் விட்டுக் கொண்டும் பூங்காவனங் களில் ஆடிப் பாடிக் கொண்டும் காலங் கழிப்பது சரியா? தமையன் தொண்டை நாட்டில் இருக்கிறான்; தம்பியோ ஈழ நாட்டில் இருக்கிறான். அவர்கள் இரு வரும் இல்லாத சமயத்தில் இராஜ்யத்தில் நடக்கும் விவகாரங்களை நாம் கவனித் தாக வேண்டும் அல்லவா? தலைநகரில் அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகளை அந்தரங்கத் தூதர்கள் மூலம் அறிவிக்க வேண்டும் என்று தமையன் ஆதித்த கரி காலன் கேட்டுக் கொண்டிருக்கிறானே? பழையாறையில் வசித்தால் தஞ்சையில் நடக்கும் காரியங்கள் எப்படித் தெரிய வரும்?

வந்தியத்தேவன் அறிவித்த செய்தி களோ மிகப் பயங்கரமாயிருந்தன. பழு வேட்டரையர்கள் தங்கள் அந்தஸ்துக்கு மீறி அதிகாரம் செலுத்தி வந்தது மட்டுமே இதுவரையில் இளையபிராட் டிக்குப் பிடிக்காமலிருந்தது. இப்போதோ, சிம்மாசனத்தைப் பற்றியே சூழ்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்! பாவம், அந்தப் பரம சாது மதுராந்தகனையும் தங்கள் வலையில் போட்டுக் கொண் டார்கள். சோழ நாட்டுச் சிற்றரசர் களையும் பெருந்தரத்து அதிகாரிகள் பலரையும் தங்கள் வசப்படுத்திக் கொண் டார்கள். எந்த நேரத்தில் என்ன நடக் குமோ, தெரியாது. இவர்களுடைய சூழ்ச்சியும் வஞ்சனையும் துராசையும் எந்த வரையில் போகும் என்று யார் கண்டது? சுந்தர சோழரின் உயிருக்கு உலை வைத்தாலும் வைத்து விடுவார் கள்! மாட்டார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? சக்கரவர்த்தியின் புதல்வர்கள் இருவரும் இல்லாத சமயத் தில் அவருக்கு ஏதாவது நேர்ந்து விட் டால், மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து விடுவது எளிதாயிருக்கும் அல்லவா? இதற்காக என்ன செய்தாலும் செய்வார்கள்! அவர்களுக்கு யோசனை தெரியாவிட்டாலும் அந்த ராட்சஸி நந்தினி சொல்லிக் கொடுப்பாள். அவர் கள் தயங்கினாலும் இவள் துணிவூட்டு வாள். ஆகையால் தஞ்சாவூரில் நம் தந் தையின் அருகில் நாம் இனி இருப்பதே நல்லது. சூழ்ச்சியும் சதியும் எந்த வரைக் கும் போகின்றன என்று கவனித்துக் கொண்டு வரலாம். அத்தோடு நம் அரு மைத் தந்தைக்கும் ஆபத்து ஒன்றும் வராமல் பார்த்துக் கொள்ளலாம்.

சாதுவாகிய மதுராந்தகனை ஏன் இவர்கள் சிம்மாசனத்தில் ஏற்றப் பார்க் கிறார்கள்? தர்ம நியாய முறைக்காகவா? இல்லவே இல்லை! மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டினால் அவனைப் பொம் மையாக வைத்துக் கொண்டு தங்கள் இஷ்டம் போல் எல்லாக் காரியங்களை யும் நடத்திக் கொள்ளலாம் என்பதற் காகத்தான். அப்புறம் நந்தினி வைத்தது தான் சோழ சாம்ராஜ்யத்தில் சட்டமாகி விடும்! அவளுடைய அதிகாரத்துக்குப் பயந்துதான் மற்றவர்கள் வாழ வேண் டும். அவளிடம் மற்ற அரண்மனை மாதர் கைகட்டி நிற்க வேண்டும்! சிச்சி!




அத்தகைய நிலைமைக்கு இடங்கொடுக்க முடியுமா? நான் ஒருத்தி இருக்கும் வரையில் அது நடவாது. பார்க்கலாம் அவனுடைய சாமர்த்தியத்தை!

தஞ்சாவூரில் இருப்பது தனக்குப் பல வகையிலும் சிரமமாகவே இருக்கும். தாயும் தந்தையும், "இங்கு எதற்காக வந்தாய்? பழையாறையில் சுகமாக இருப்பதை விட்டு!" என்று கேட்பார்கள். சுயேச்சை என்பதே இல்லாமற்போய் விடும். தன்னுடைய திருமணத்தைப் பற்றிய பேச்சை யாரேனும் எடுப்பார்கள். அதைக் கேட்கவே எனக்குப் பிடிக்காது. நந்தினியைச் சில சமயம் பார்க்கும்படியாக இருக்கும். அவளுடைய அதிகாரச் செருக்கைத் தன்னால் சகிக்க முடியாது. ஆனால் இதையெல்லாம் இந்தச் சமயத்தில் பார்த்தால் சரிப்படுமா? இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது; தந்தையின் உயிருக்கு அபாயம் நேரலாம் என்ற பயமும் இருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நாம் இருக்க வேண்டிய இடம் தஞ்சையே அல்லவா?

இவ்வளவையும் தவிர, வேறொரு முக்கியக் காரணமும் இருந்தது. அது வந்தியத்தேவனைப் பற்றி ஏதேனும் செய்தி உண்டா என்று தெரிந்து கொள்ளும் ஆசைதான். வந்தியத்தேவன் கோடிக்கரைப் பக்கம் போயிருக்கிறான் என்று தெரிந்து அவனைப் பிடித்து வரப் பழுவேட்டரையர்கள் ஆட்கள் அனுப்பியிருப்பதைப் பற்றி இளையபிராட்டி கேள்விப்பட்டாள். புத்தி யுக்திகளில் தேர்ந்த அந்த இளைஞன் இவர்களிடம் அகப்பட்டுக் கொள்வானா? ஒருவேளை அகப்பட்டால் தஞ்சாவூருக்குத்தான் கொண்டு வருவார்கள். அச்சமயம் நாம் அங்கே இருப்பது மிகவும் அவசியமல்லவா? ஆதித்த கரிகாலன் அனுப்பிய தூதனை அவர்கள் அவ்வளவு எளிதில் ஒன்றும் செய்து விட முடியாது. ஏதாவது குற்றம் சாட்டித்தான் தண்டிக்க வேண்டும். அதற்காகவே சம்புவரையர் மகனை முதுகில் குத்திக் கொல்ல முயன்றதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அது பொய் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது பொய் என்பதை நிரூபிக்க வேண்டும். கந்தமாறனுடன் பேசி, அவனுடைய வாய்ப் பொறுப்பை அறிந்து கொள்வது அதற்கு உபயோகமாயிருக்கலாம்...

இவ்விதமெல்லாம் குந்தவையின் உள்ளம் பெரிய பெரிய சூழ்ச்சிகளிலும் சிக்கலான விவகாரங்களிலும் சஞ்சரித்துக் குழம்பிக் கொண்டிருக்கையில், அவளுடன் யானை மீது வந்த அவள் தோழி வானதியின் உள்ளம் பால் போன்ற தூய்மையுடனும் பளிங்கு போன்ற தெளிவுடனும் ஒரே விஷயத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. அந்த ஒரு விஷயம் இளவரசர் அருள்மொழிவர்மர் எப்போது இலங்கையிலிருந்து திரும்பி வருவார் என்பது பற்றித்தான்.

"அக்கா! அவரை உடனே புறப்பட்டு வரும்படி ஓலை அனுப்பியிருப்பதாகச் சொன்னீர்கள் அல்லவா? வந்தால் எவ்விடம் வருவார்? பழையாறைக்கா?

தஞ்சாவூருக்கா?'' என்று வானதி கேட்டாள்.

தஞ்சாவூருக்கு இவர்கள் போயிருக்கும்போது இளவரசர் பழையாறைக்கு வந்து விட்டால் என்ன செய்கிறது என்பது வானதியின் கவலை.

வேறு யோசனைகளில் ஆழ்ந்திருந்த குந்தவைப் பிராட்டி வானதியைத் திரும்பிப் பார்த்து, "யாரைப் பற்றியடி கேட்கிறாய்? பொன்னியின் செல்வனைப் பற்றியா?'' என்றாள்.

"ஆமாம், அக்கா! அவரைப் பற்றித்தான். இளவரசரைப் 'பொன்னியின் செல்வன்' என்று நாலைந்து தடவை தாங்கள் குறிப்பிட்டு விட்டீர்கள். அதற்குக் காரணம் சொல்லவில்லை. பிற்பாடு சொல்வதாகத் தட்டிக் கழித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இப்போதாவது சொல்லுங்களேன். தஞ்சாவூர்க் கோட்டை இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறது. இந்த யானையோ ஆமை நகர்வது போல் நகர்கிறது!'' என்றாள் வானதி.

"இதற்கு மேல் யானை வேகமாய்ப் போனால் நம்மால் இதன் முதுகில் இருக்க முடியாது! அம்பாரியோடு நாமும் கீழே விழ வேண்டியதுதான்! அடியே! தக்கோலப் போரில் என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமா?''


"அக்கா! 'பொன்னியின் செல்வன்' என்னும் பெயர் எப்படி வந்தது என்று சொல்லுங்கள்!''

"அடி கள்ளி! நீ அதை மறக்க மாட்டாய் போலிருக்கிறது. சொல்கிறேன், கேள்!'' என்று குந்தவைப் பிராட்டி சொல்லத் தொடங்கினாள்.

சுந்தர சோழ சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்த புதிதில் அவருடைய குடும்ப வாழ்க்கை ஆனந்தமயமாக இருந்தது. அரண்மனைப் படகில் குடும்பத்துடன் அமர்ந்து சக்கரவர்த்தி பொன்னி நதியில் உல்லாசமாக உலாவி வருவார். அத்தகைய சமயங்களில் படகில் ஒரே குதூகலமாயிருக்கும். வீணா கானமும் பாணர்களின் கீதமும் கலந்து காவேரி வெள்ளத்தோடு போட்டியிட்டுக் கொண்டு பெருகும். இடையிடையே யாரேனும் ஏதேனும் வேடிக்கை செய்வார்கள். உடனே கலகலவென்று சிரிப்பின் ஒலி கிளம்பிக் காவேரிப் பிரவாகத்தின் சலசலப்பு ஒலியுடன் ஒன்றாகும்.

சில சமயம் பெரியவர்கள் தங்களுக்குள் பேசி மகிழ்வார்கள். படகில் ஒரு பக்கத்தில் குழந்தைகள் கும்மாளம் அடித்துக் கொண்டிருப்பார்கள். சில சமயம் எல்லோருமாகச் சேர்ந்து வேடிக்கை வினோதங்களில் ஈடுபட்டுத் தங்களை மறந்து களிப்பார்கள்.

ஒருநாள் அரண்மனைப் படகில் சக்கரவர்த்தியும் ராணிகளும் குழந்தைகளும் உட்கார்ந்து காவேரியில் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, திடீரென்று, "குழந்தை எங்கே? குழந்தை அருள்மொழி எங்கே?'' என்று ஒரு குரல் எழுந்தது. இந்தக் குரல் குந்தவையின் குரல்தான். அருள்மொழிக்கு அப்போது வயது ஐந்து.

குந்தவைக்கு வயது ஏழு. அரண்மனையில் அனைவருக்கும் கண்ணினும் இனிய செல்லக் குழந்தை அருள்மொழி. ஆனால் எல்லாரிலும் அவனிடம் வாஞ்சை உடையவள் அவனுடைய தமக்கை குந்தவை. படகில் குழந்தையைக் காணோம் என்பதைக் குந்தவை தான் முதலில் கவனித்தாள். உடனே மேற்கண்டவாறு கூச்சலிட்டாள். எல்லோரும் கதிகலங்கிப் போனார்கள். படகில் அங்குமிங்கும் தேடினார்கள். ஆனால் அரண்மனைப் படகில் அதிகமாகத் தேடுவதற்கு இடம் எங்கே? சுற்றிச் சுற்றித் தேடியும் குழந்தையைக் காணவில்லை. குந்தவையும் ஆதித்தனும் அலறினார்கள். ராணிகள் புலம்பினார்கள். தோழிமார்கள் அரற்றினார்கள். படகோட்டிகளில் சிலர் காவேரி வெள்ளத்தில் குதித்துத் தேடினார்கள். சுந்தர சோழரும் அவ்வாறே குதித்துத் தேடலுற்றார். ஆனால் எங்கே என்று தேடுவது? ஆற்று வெள்ளம் குழந்தையை எவ்வளவு தூரம் அடித்துக் கொண்டு போயிருக்கும் என்று யார் கண்டது? குழந்தை எப்போது வெள்ளத்தில் விழுந்தது என்பதுதான் யாருக்குத் தெரியும்? நோக்கம், குறி என்பது ஒன்றுமில்லாமல் காவேரியில் குதித்தவர்கள் நாலாபுறமும் பாய்ந்து துளாவினார்கள். குழந்தை அகப்படவில்லை. இதற்குள் படகில் இருந்த இராணிகள் - தோழிமார்களில் சிலர் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டார்கள். அவர்களைக் கவனிப்பார் இல்லை. உணர்ச்சியோடு இருந்த மற்றவர்கள் 'ஐயோ!' என்று அழுது புலம்பிய சோகக் குரல் மேலெழுந்தது. நதிக்கரை மரங்களில் வசித்த பறவைகள் அதைக் கேட்டுத் திகைத்து மோனத்தில் ஆழ்ந்தன.

சட்டென்று ஓர் அற்புதக் காட்சி தென்பட்டது. படகுக்குச் சற்றுத் தூரத்தில் ஆற்று வெள்ளத்தின் மத்தியில் அது தெரிந்தது. பெண் உருவம் ஒன்று இரண்டு கைகளிலும் குழந்தையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நின்றது. அந்த மங்கையின் வடிவம் இடுப்பு வரையில் தண்ணீரில் மறைந்திருந்தது. அப்பெண்ணின் பொன் முகமும் மார்பகமும் தூக்கிய கரங்களும் மட்டுமே மேலே தெரிந்தன. அவற்றிலும் பெரும் பகுதியைக் குழந்தை மறைத்துக் கொண்டிருந்தது. எல்லாரையும் போல் சுந்தர சோழரும் அந்தக் காட்சியைப் பார்த்தார். உடனே பாய்ந்து நீந்தி அந்தத் திசையை நோக்கிச் சென்றார். கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கிக் கொண்டார். இதற்குள் படகும் அவர் அருகில் சென்று விட்டது. படகிலிருந்தவர்கள் குழந்தையைச் சுந்தர சோழரிடமிருந்து வாங்கிக் கொண்டார்கள். சக்கரவர்த்தியையும் கையைப் பிடித்து ஏற்றி விட்டார்கள். சக்கரவர்த்தி படகில் ஏறியதும் நினைவற்று விழுந்து விட்டார். அவரையும் குழந்தையையும் கவனிப்பதில் அனைவரும் ஈடுபட்டார்கள். குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்த மாதரசி என்னவானாள் என்று யாரும் கவனிக்கவில்லை. அவளுடைய உருவம் இப்படியிருந்தது என்று அடையாளம் சொல்லும்படி யாரும் கவனித்துப் பார்க்கவும் இல்லை. "குழந்தையைக் காப்பாற்றியவன் நான்!" என்று பரிசு கேட்பதற்கு அவள் வரவும் இல்லை. ஆகவே, காவேரி நதியாகிய தெய்வந்தான் இளவரசர் அருள்மொழிவர்மரைக் காப்பாற்றிக் கொடுத்திருக்க வேண்டும் என்று அனைவரும் ஒருமுகமாக முடிவு கட்டினார்கள். ஆண்டுதோறும் அந்த நாளில் பொன்னி நதிக்குப் பூஜை போடவும் ஏற்பாடாயிற்று. அதுவரையில் அரண்மனைச் செல்வனாயிருந்த அருள்மொழி வர்மன் அன்று முதல் 'பொன்னியின் செல்வன்' ஆனான். அச்சம்பவத்தை அறிந்த அரச குடும்பத்தார் அனைவரும் பெரும்பாலும் 'பொன்னியின் செல்வன்' என்றே அருள்மொழிவர்மனை அழைத்து வந்தார்கள்.

(தொடரும்)



சாரங்கபாணி

# "என் மனைவி"

**அமரர் கல்கி**

பல வருஷங்களுக்கு முன் "பக்த ராமதாஸ்" என்னும் உயர்தரமான தமிழ்ப் படத்தில் ஸ்ரீ கே. சாரங்கபாணியை முதன் முதலாக நான் பார்த்தேன். அதில் அவர் செவிட்டுச் சிற்பி வேஷத்தில் வந்தார். தாசில் தார் கோபண்ணா பத்ராசலம் கோவிலைப் புனருத்தாரணம் செய்வதற்காகச் சிற்பியை அழைத்து வரும்படி சொல்கிறார். கோவில் திருப்பணி செய்ய வேண்டுமென்பதை ரொம்ப ரொம்ப உரத்த குரலில் சொல்லியும் சிற்பியின் காதில் விழவில்லை. கடைசியில் அவருக்கு விஷயம் விளங்கியபோது "ஆலயத் திருப்பணி செய்ய வேணுமா? அதை முன்னாலேயே சொல்கிறது தானே?" என்று புகார் செய்ததை நினைத்துக் கொண்டால், இப்போது கூட எனக்குச் சிரிப்பு வருகிறது. அடுத்தாற்போல் அவர் தாசில்தாரின் குமாஸ்தாவிடம் இரகசியமாக, "ஐயாவுக்குக் கொஞ்சம் காது மந்தமோ?" என்று கேட்ட போது, இன்னும் ஒரு பாட்டம் குலுங்கச் சிரிக்க வேண்டியிருந்தது.

"பக்த ராமதாஸ்" படத்தினால் ஸ்ரீ கே.சாரங்கபாணியின் ஹாஸ்ய நடிப்புத் திறமையில் எனக்கு ஏற்பட்ட மதிப்பு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வந்தது. ரொம்பவும் மட்டமான பல தமிழ்ப் படங்களுக்கு இவர் உயிரும் களையும் கொடுத்திருக்கிறார். நல்ல படங்களில் நன்றாய்ப் பிரகாசித்திருக்கிறார்.

ஆனால், இப்போது பாரகனில் ஓடும் "என் மனைவி" படத்தில் இவருடைய ஹாஸ்ய நடிப்புப் பிரகாசிப்பது போல் இதற்கு முன் எப்போதும் பிரகாசித்ததில்லையென்று சொல்லலாம். குற்றமற்ற ஹாஸ்ய நடிப்பின் சிகரத்தை இவர் இப்படத்தில் அடைந்திருக்கிறார். இந்த மூன்று மணி நேர முழு ஹாஸ்யப் படத்திற்கு முழுக்க முழுக்க ஸ்ரீ சாரங்கபாணிதான் உயிர்கொடுத்து அலுப்பில்லாமல் படத்தைப் பார்ப்பதைச் சாத்தியமாகச் செய்திருக்கிறார்.

"என் மனைவி" மகாராஷ்டிரக் கதையொன்றைத் தழுவிய படம் என்று தெரிகிறது. வைத்தியர் வேம்புவய்யர் தன் மனைவியிடம் சந்தேகம் கொண்டவர்; அவர் மனைவியோ நவநாகரிகத்தில் மோகங் கொண்டவள்; தனபால குப்தா, ரேவதி என்னும் தாஸிப் பெண்ணைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவன்; ரேவதியோ தெய்வ ப்க்தியுடன் வேடிக்கை விளையாட்டுகளில் அதிகப் பிரியம் கொண்டவள். இந்த நாலு பேரும் ஒருவர் மேல் ஒருவர் சந்தேகங் கொண்டு திண்டாடுகிறார்கள். சந்தேகாஸ்பதமான சந்தர்ப்பங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. மனைவியின் பேரில் புருஷனும், புருஷன் பேரில் மனைவியும் வீண் சந்தேகங் கொள்வதின் முட்டாள்தனத்தை வெட்ட வெளிச்சமாக்குவதற்காகவே ஏற்பட்டவை போல் மேற்படி சந்தர்ப்பங்கள் நிகழ்கின்

றன. கடைசியில், கதா பாத்திரங்கள் எல்லாரும் அவரவர்களுடைய அசட்டுத்தனத்தை உணர்ந்து "ஆகா! எப்பேர்ப்பட்ட அசடுகள் நாம்!" என்று ஆனந்தப்படுகிறார்கள்.

**வை**த்தியர் வேம்புவய்யராக நடிக்கும் ஸ்ரீ கே. சாரங்கபாணி நெடுகிலுமே நன்றாய்த் தான் நடித்திருக்கிறார். ஆனாலும், நந்தவனத்தில் தனபால குப்தாவும் அவனுடைய சிநேகிதனும் உட்கார்ந்திருக்கும்போது, இவர் அங்கே போய், "மாதரை நினையாதே!" என்று பாடும் கட்டத்தைப் பிரமாதம் என்றுதான் சொல்ல வேண்டும். விரல் விட்டுத் தாளக் கணக்கு எண்ணிக் கொண்டு அவர் ஸ்வரம் பாடும் அழகு!.... ஆஹா! அந்த ஸ்வாரஸ்யத்தைப் பார்த்துத் தான் அநுபவிக்க வேண்டும்.

வைத்தியர் வேம்புவய்யருக்கு அடுத்தபடியாகப் படத்தில் நம்முடைய கவனத்தைக் கவர்கிறவன் அவர் வீட்டுச் சமையற்காரன். வீட்டில் நடக்கும் தாம்பத்யக் கலகங்களில் இந்தக் கெட்டிக்காரப் பரிசாரகன் அனுசரிக்கும் 'பாலிஸி' வெகு ஜோர். அவனுடைய சங்கீதம் அதைவிட ஜோர்.

**"சங்கடமான சமையலை விட்டுச்**
**சங்கீதம் பாடப் போறேன்"**

என்னும் பாட்டை மறக்கவே முடியாது. அவனுக்கு இதற்குள் ஒரு தம்பூரா கிடைத்திருக்குமென்றும், "சாதகம் செய்து பாகவதர் ஆகியிருப்பானென்றும் நம்புகிறேன்.

**"ஆல் இந்தியா ரேடியோவில்**
**அடியேனும் பாடப் போறேன்"**

என்று அந்தப் பரிசாரகன் வாக்குக் கொடுத்திருப்பதை எப்போது நிறைவேற்றப் போகிறானென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

பிறகு, அந்த வேலைக்காரப் பெண் ஸ்வாதியைக் குறிப்பிட வேண்டும். அடே அப்பா! அவளுடைய ஆட்டமும் பாட்டமும், அசக்கலும் குலுக்கலும், புனலை எடுத்து ஊதி ரேடியோ லவுட் ஸ்பீக்கராக் குவதும், காகிதத்தினால் ஏரோப்ளேன் பண்ணிவிடுவதும், கரியடைந்த லாந்தரை லைட்ஹவுஸ் ஆக்கிக் காட்டுவதும் எல்லாம் வெகு ரஸமாயிருக்கின்றன.

தனபால குப்தாவாக நடிக்கும் நாகர்கோவில் மகாதேவன் அசாத்தியமாக நடிப்பதற்கு அவசியம் ஒன்றும் ஏற்படவில்லையென்றாலும், பாத்திரத்துக்குப் பொருத்தமாக நடித்திருக்கிறார்.

செல்லமும், ரேவதியும் சில சில இடங்களில் நம்மைக் கொன்றே போகிறார்கள். சில சில இடங்களில் ரொம்ப சாதாரணமாய் நடித்திருக்கிறார்கள். தனபால குப்தாவை ஸினிமா கதா நாயகனாகப் பாவித்து ரேவதி படம் டைரக்ட் செய்யும் இடம் 'ஆஹா! மெத்த அபூர்வ ஆக்ட்டு!' அதைவிட அபூர்வம் ரோஹிணி நெல்லுக் குத்தும் பாட்டு.

பெண்சாதியைப் புருஷசாதியும், புருஷசாதியைப் பெண்சாதியும் சந்தேகிக்கும் கதையாதலால், படத்தை அசந்தர்ப்பமாகவும் ஆபாஸமாகவும் வெகு சுலபமாக ஆக்கியிருக்கலாம். சிரிப்புக்குப் பதில் அருவருப்பை உண்டு பண்ணியிருக்கலாம். அப்படியெல்லாம் செய்யாமல் வெகு சாமர்த்தியமாக எல்லைக் கோட்டுக்குள் நின்று இப்படத்தை டைரக்ட் செய்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. ஒரே ஒரு இடத்தில் மட்டும் எல்லையைத் தாண்டியிருக்கிறது. செல்லம் தனபால குப்தாவின் படத்தின் அழகை அவ்வளவு மிதமிஞ்சிப் பாராட்டியிருக்க வேண்டியதில்லை. இது விரஸமாயிருப்பதுடன், கதையின் போக்குக்கு முற்றும் மாறானது.


**பொ**துப்படையாகப் பார்க்கும்போது, "என் மனைவி" ஓர் உயர்தரமான படம்; தமிழ்நாட்டில் வெளியாகியிருக்கும் முழு நேர நகைச்சுவைப் படங்களில் "சபாபதி"க்கு அடுத்தபடியாக இதைத்தான் சொல்ல வேண்டும். இந்தப் படத்தின் டைரக்டர் ஸ்ரீ சுந்தர ராவ் நட்கர்னியையும், படத்தை வெளிக் கொணர்ந்த பிரகதி பிக்சர்ஸ் சொந்தக்காரர்களையும் பெரிதும் பாராட்டுகிறேன். ●

**(கல்கி, நவம்பர் 20, 1942)**

■ SPORTS SPECIAL

■ FRIENDS

■ FISH THAT TRAVEL



Plenty to read and enjoy

SEPTEMBER '98
Rs. 6/- ONLY

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097

# மும்பை மசாலா :

## ஓடி ஓடிப் படிக்கணும்...

முகமது மலையிடம் செல்லவில்லை என்றால், மலையே மகமதைத் தேடி வந்த கதையாகி விட்டதே! மும்பையில், கட்டட வேலை செய்வோர் குழந்தைகள், தொலைதூரக் குடிசைக் குடியிருப்புகளில் வசிப்போர் பிள்ளைகள், வேலைக்குப் போகும் ஏழைப் பெற்றோரின் பிள்ளைகள் முதலானோரும் கல்வி அறிவு பெறவேண்டுமென்று, நல்ல எண்ணத்தில், புதிதாக ஒரு "School-on-wheels"ஐ, மேயர் நந்து சதம், துவக்கி வைத்திருக்கிறார். நடத்துபவர்கள், "Door Step School" சமூகச் சேவை இயக்கத்தினர். பள்ளிக்குத் தேவையான 'பஸ்'ஸையும் புத்தகங்களையும் ஜப்பானியரான யாமாகிஷி வழங்கியுள்ளார். பிச்சை புகினும் கற்கை நன்றே என்பதை, பிச்சை இட்டேனும் கற்பித்தல் நன்றே என மாற்றும் காலம் வந்து விட்டது!



## ஏற்றுமதி இறக்குமதி

மும்பையிலிருந்து, "illegal immigrants" என்று முத்திரை குத்தப்பட்ட ஒரு லட்சம் பங்களாதேஷிகளை, கொஞ்சம் கொஞ்சமாகக் காவல் துறை உதவியுடன், திரும்ப அனுப்பும் வேலை ஒருபுறம் மும்முரமாக நடந்து கொண்டிருக்க, மறுபுறம் போக்ரன் சம்பவத்தால், அமெரிக்காவிலிருந்து இந்திய விஞ்ஞானிகள், மும்பையின் BARCக்கு (பாபா அடாமிக் ரிஸர்ச் சென்டர்) திருப்பி அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அகதிகளைப் பொருத்தவரையில், தலா பத்து நூறு ரூபாய் நோட்டுக்கள் போலீசுடன் கைமாறினால், இந்த 'திருப்பி அனுப்புதல்' தடைப்படுகிறதாம்! இதுபோன்ற வசதி, விஞ்ஞானிகளுக்கு ஒன்றும் இல்லையோ? என்ன இருந்தாலும், "மேரா பாரத் மஹான்"தான்!

# மேரா பாரத்

## நீ வெஜ்ஜா? நான் வெஜ்ஜா?

வரவர மும்பையில் 'வெஜ்'ஆகக் காலம் தள்ளுவது பிரம்ம பிரயத்தனமாகிக் கொண்டிருக்கிறது. காய்கறிகள் விலை, எவரெஸ்டைத் தொட்டிருக்க, ஏழை சைவர்களெல்லாம் அசைவத்துக்குத் தாவிக் கொண்டிருக்கிறார்கள். ஹோட்டல்களில் அன்பளிப்பாக வைக்கப்படும் வெங்காயமும், எலுமிச்சையும், ஊறுகாயும் காணாமலே போய் விட்டன; கொட்டிச் சட்னியைக் கனவில்தான் பார்க்க முடிகிறது! பல

ஹோட்டல்காரர்கள், வெறும் டிஃபனுடன் நிறுத்திக் கொண்டு, சைவ சாப்பாடு போடுவதையே, 'கட்டுப்படியாகவில்லை' என்று விட்டு விட்டார்கள். இதே நிலை நீடித்தால், உடுப்பிக்காரர்களெல்லாம், கடை அடைப்பு செய்வதுதான் வழி என்று திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடுத்து, திருமணங்களில் காய்கறிகளை சீதனமாக 'டிமாண்ட்' செய்ய வேண்டியது தான் பாக்கி!

## ரத்த பாசம்

ஜீனத் அமன் வீட்டு காலிங்பெல் கிர்ரிடுகிறது; ஏதோ நினைவில் கதவைத் திறக்கிறார் ஜீனத்... அங்கே... "என்னால் உன்னைப் பிரிந்திருக்க முடியவில்லை மம்மி..." என்று, கண்களில் நீர் மல்க, தொண்டை கரகரக்க... அவரது 12 வயது மகன் ஆஜான்! சில நாட்களுக்கு முன் தன் தந்தை வழிப் பாட்டி, அத்தை, அத்தையின் கணவர் ஆகியோருடன் ஜீனத்தின் பாந்தரா வீட்டிற்குள் நுழைந்து, ஜன்னல் கதவுகள், ஃபர்னிச்சர்கள் எல்லாவற்றையும் உடைத்து, ஜீனத்தை ஏசி, ரவுடித்தனம் செய்த அதே ஆஜான்தான்! தன் மகனையே தனக்கெதிராக ஏவி விட்டிருக்கும் கணவன் வீட்டாரின் ஈனத்தனம்தான், ஜீனத்தைப் பெரிதும் பாதித்தது. பத்திரிகையாளர்களைக் கூட்டிக் கதறி, போலீசில் புகார் கொடுத்தும் பயனில்லாதிருந்தது. திடீரென்று, இது ஜீனத்துக்கு வசந்தமயத் திருப்பம். ஆஜான் இங்கிருப்பதையே நான்கு நாட்கள் கழித்துத்தான் அவன் வீட்டார் உணர்ந்தனர். பிள்ளையின் கெஞ்சலுக்கு முன், தகப்பனின் பிடிவாதம் உடைந்து, 'சரி ஒரு நாலு நாள் இருந்து விட்டு வந்து தொலை' என்ற ரீதியில், அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 'இதுதான் முதற்படி; இனி படிப்படியாக வெற்றிதான்' என்று பாசமயமான சிரிப்பை உதிர்க்கிறார் ஜீனத்!

## இன்றே கொல்லல்....

வயசான தாய் தந்தையரை தற்கொலை முடிவுக்கு விரட்டிய பிள்ளையையும் மருமகளையும், அவர்கள் பிள்ளையும் மருமகளும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும் வரை வழக்கம் போலக் காத்திருந்து, நின்று கொல்லாமல், ஏதோ மூன்று மாத காலத்திற்குள்ளாவது 'சுறுசுறுப்பாக' காவல் துறை அரெஸ்ட் செய்திருப்பது... அதிசயம், ஆனால் உண்மை! கெம்ப்ஸ் கார்னரின், விஸ்தாரமான, விலையுயர்ந்த, ஃப்ளாட்டுக்கு ஆசைப்பட்டார்கள்! - கிடைத்திருப்பதோ, ஆர்தர்ரோட் ஜெயிலில் காற்றுப் புக முடியாத, சிறிய அறை வாசம்! பெற்றோரை வெம்பி வெதும்ப வைத்தால், கம்பி எண்ணுவதே முடிவு என்பதை இளைய தலைமுறை மனத்தில் ஆழமாகப் பதித்தமைக்கு, காவல் துறையைப் பாராட்டத் தான் வேண்டும்!

— ஜெயஸ்ரீ ராஜ்

"நம்ம மீட்டிங் கேட்க நிறையக் கூட்டம் வரும்னு மனக்கோட்டை கட்டினீங்களா... தலைவரே?"

"உனக்கெப்படித் தெரியும்?"

"உங்க பக்கத்துல அமரும்போது மனக்கோட்டை "டமட"ன்னு இடியற சத்தம் கேட்டுச்சு!"

– அம்பை தேவா





# தொலைந்து போன அண்ணன்

**வி. பிரசன்னகிருஷ்ணன்**

ஆனந்தமான நிமிடங்கள் அவை! என் கையிலிருந்த ராஜண்ணாவின் கடிதத்தை மீண்டுமொரு முறை படித்தேன்.

"உன்னையும் அப்பாவையும் இந்த ஐந்து வருடங்களில் பலமுறை நினைத்துக் கொண்டேன்... வெள்ளை வேட்டியும், டிஸ்கோ தலைமுடியும் உடைய ஒரு தோற்றத்தை உனக்குப் பொருத்திப் பார்க்கிறேன்...! அப்பாவுக்கு இன்னும் என்மேல் கோபம் இருக்கிறதா? தளர்ந்து போன அப்பாவைக் கற்பனை செய்யவே சங்கடமாகத்தான் இருக்கிறது. முடிந்தால், நேரங்கிடைக்கும்போது சென்னைக்கு வாயேன்! நீண்ட நாட்களுக்குப் பின் தமிழ் பேசுவதும், எழுதுவதும் மன நிறைவு தருகிறது... வரும் சனிக்கிழமை என்னை என் அலுவலகத்தில் வந்து பார்..."

ராஜண்ணாவின் கையெழுத்துத்தான் கொஞ்சம் கிறுக்கலாக மாறி விட்டிருந்தது. சின்ன வயதில் அவனது அழகான கையெழுத்தில் தங்களின் புதுப் புத்தகத்தில் பெயர் எழுதிக் கொள்ள முண்டியடித்த சக மாணவர்கள் நிறையப் பேர்.

அது சரி... "சென்னைக்கு வாயேன்" என்று முதலில் எழுதிவிட்டு, பிறகெதற்கு இடைச் செருகலாக 'முடிந்தால், நேரங்கிடைக்கும்போது...' என்று எழுதினான்? நான் அங்கு வருவதில் முழு விருப்பம் உள்ளதா அவனுக்கு? இல்லாமலா "சனிக்கிழமை என்னுடைய அலுவலகத்தில் வந்து பார்" என்று எழுதியுள்ளான்? குதர்க்கமாக யோசிப்பானேன்?

இந்த மனம் இருக்கிறதே... மகா அயோக்யன்! தனக்குச் சாதகமான விஷயங்கள் மற்றும் மனிதர்கள் பற்றி எதிர்மறையான எண்ணம் தோன்றினால், ஒருவித வெறியுடன் பதிலுக்குப் பதில் சமாதானங்கள் சொல்லி விடுகிறது...

உன்ளூர் வேலைகளை முடித்து வைத்துவிட்டு, சனிக்கிழமை சென்னை புறப்பட முடிவு செய்தேன்... அப்பா ஒப்புக் கொள்வாரா?

"கூடாதுன்னு சொன்னா கேளு... அந்த நன்றி கெட்ட நாசக்காரனை நீ பார்க்கக் கூடாது! எந்த தைரியத்துலடா நமக்குக் கடுதாசி எழுதறான்? சூடு சொரணையத்த பய...! கோபத்துடன் அப்பா கூடத்து நாற்காலியில் போய் அமர்ந்தார்.

"வெறுமனே பார்த்து நாலு வார்த்தை பேசறது கூடவா பெரிய தப்பு?"



**ரூ.1,500**
**ஆறுதல் பரிசு பெறும் கதை**

என்றேன் அவரெதிரில் போய் நின்று!

"இதை உங்கண்ணங் கிட்ட கேக்கணும்டா... 'அடக் கெழப்பாவி, என் ஆபீஸ்ல வேலை செய்யற பெங்காலிப் பொண்ணை நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்டா... இஷ்டமிருந்தா ரிஜிஸ்டர் ஆபீஸுக்கு வந்து, நாங்க மாலை மாத்திக்கறப்ப ஓரமா நின்னு கை தட்டிட்டுப் போடா'ன்னு சொல்லியிருந்தா– நாலே நாலு வார்த்தை சொல்லியிருந்தா போதுமேடா? என்னவோ, பூடகமா நாலு வார்த்தை பேசினான் – 'கல்யாணம் பண்ணிக்கிட்டேன்'னு ரெண்டு ரூபா தபால்ல அஞ்சு வரியில எழுதிப் போட்டுட்டான்.

"ஏன்டா... பெத்த அப்பனுக்கு மூத்தப் புள்ளையோட கல்யாணங்கறது ரெண்டு ரூபா தபாலுக்குப் பெறுமானமான விஷயம் தானாடா? அவங்கம்மா செத்தப்பறம், பத்து வயசுலேர்ந்து அவனுக்கு அம்மாவா இருந்தவன் யாராம்? பாத்திரம் கழுவின தண்ணியைக் கொட்டினதுக்கு கைம்மாறா நம்ம வீட்டுப் பப்பாளி மரம் நாலு பப்பாளிப் பழமாவது தருது! என் உசிரையும், வாழ்க்கையையும் குடுத்து வளர்த்த புள்ள... சே, புள்ளையாடா அவன்? நீ வேற அவனுக்கு வக்காலத்தா?"

தோள் துண்டைத் தரையில் போட்டு விட்டு, வாயிற்படியருகில் போய் நின்றார் அப்பா. கோபத்தில் அவர் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

"உன்னோட கோபம் எனக்குப் புரியுதுப்பா... அந்தக் கோபத்துல பாதி எனக்கும் இருக்குது... ஆனாலும் அவனை நேர்ல பார்த்துப் பேசணும்னு தோணுது! ஏன்னா, சமயத்துல அவன் நல்ல கூட்டாளியா, நல்ல வாத்தியாரா, நல்ல அம்மாவாகூட இருந்தான்! என் கோபத்தையோ, இல்ல உன் கோபத்தையோ கொட்டவாவது அங்க போறேனே..." – நிதானமாகச் சொன்னேன்.

"போவணும்னு முடிவு பண்ணிட்டே! போய் வா! ஆனா, நீயாவது என்னை ஏமாத்தாம இரு! செய்யறதை சொல்லிட்டுச் செய் – தப்பா இருந்தாலும்!"

நான் பெருமூச்சு விட்டேன்!

**பே**ருந்து சென்னையை நெருங்கிக் கொண்டிருந்தது. என் எண்ணங்களில் ராஜண்ணா அரைக்கால் சட்டை நாளிலிருந்து கல்கத்தாவுக்கு வேலை கிடைத்து ரயில் ஏறிய நாள்வரை விதவிதமாக வந்து போனான்!

எப்படிப்பட்ட துணை அவன்?

சாயங்காலம் வீட்டுப் பாடம் எழுதும்போது என் பலகையில் கோவைக் காயைத் தேய்த்துப் 'பளிச்' ஆக்குவான். 'டவுனுக்கு' அப்பாவுடன் போனால் வட்டப் பால்

கோவாவும், 'பாலாய்ச்சி' பல்பழும் வாங்கி வருவான். பம்பரம் விளையாடினால், வட்டத்துள் சிக்கின என் பம்பரத்தை ஒற்றைக் குத்துகூட இல்லாமல் வெளியே கொண்டு வந்து விடுவான்!

ப்ச், அதெல்லாம் சின்ன வயதுக் காலத்தவை! விவரம் தெரிந்த வயதிலும் அவன் எனக்கு அருமையான துணையாக இருந்தான்...

பத்தாம் வகுப்புத் தேர்வுக்கு நான் தயாரானபோது, அவன் பி.காம் மூன்றாம் வருடத் தேர்வுகள் முடிந்து ஊருக்கு வந்திருந்தான்; ராப்பகலாக என்னுடன் உக்கார்ந்து என் புத்தகங்களைப் புரட்டி, குறிப்புகள் தயாரித்து, சந்தேகங்களை விளக்கி... அசாத்தியமான பொறுமை அவனுக்கு!

பன்னிரண்டாம் வகுப்புக்கு வந்தபோது, அந்த வயதுக்கே உரிய ஒரு 'இது'வுக்காக, ராஜண்ணாவிடமிருந்த கைக்கடிகாரத்தைக் கேட்டு வைத்து விட்டேன். அவனும் சட்டெனக் கழற்றிக் கொடுத்து விட்டான். (அப்பாவுக்குத் தெரியாது!)

ஒரு வருடம் கழித்து, கல்கத்தாவில் வேலை கிடைத்திருப்பதாகச் சொல்லிவிட்டுப் போக வந்தான். முதல் வேலையாக அவனுக்குக் கைக்கடிகாரம் வாங்கித் தந்தார், ஊருக்குப் போகுமுன் புங்க மரத்தடியில் அண்ணா சொன்னான்.

"உங்கிட்ட வாட்சைக் குடுத்துட்டனா? எங்கூடப் படிச்ச பொம்பளைப் பசங்க, "மணி என்ன சார்?"ன்னு தமாஷ் பண்றதும், பழைய ஞாபகத்துல மணிக்கட்டைப் பாக்கறதும் ரெண்டு மூணு தடவை நடந்துடுச்சு! திருட்டுக் கழுதைங்க... எனக்கு அதெல்லாம் பிரச்னையில்ல... வாட்ச் இல்லாம பல இடத்துல கஷ்டமாயிடுச்சு!"

"அடாடா... எங்கிட்டயிருந்து வாங்கிக்கிட்டிருக்கலாமே?" என்றேன் வருத்தத்துடன்.

"சே, சே... எதுக்கு சொன்னேன்னா, வாட்ச்சுன்றது உனக்கும் ரொம்ப அவசியம் – பத்திரம்ன்னேன்!"

பகிர்தல் உன்னதமானது! அதிலும் ராஜண்ணாவின் பகிரும் மனது விசாலமானது! கல்கத்தாவுக்கு ரயிலேற்ற அவனுடைய நண்பர்களுடன் நானும் ரயில் நிலையம் போனேன்! குறும்புக்காரர்களின் அந்தக் கூட்டத்தில் அப்பாவித்தனமாகக் கேட்டு வைத்தேன்–

"அண்ணா, இங்க வண்டியில போறவங்க கிட்ட ஏன் 'இப்படி'க் காட்டறாங்க?"

('இப்படி' என நான் காட்டியபோது கட்டை விரல் தரையை நோக்கியிருந்தது!)

'கொல்'லென்ற சிரிப்பு! எனக்குச் சங்கடமாகிவிட்டது!

ராஜண்ணாதான் உரத்த குரலில் சொன்னான்.

"சும்மாயிருங்கடா! ஏதோ தவறி சொல்லிட்டான் – கிராமத்துல வளர்ந்த பையன்! 'சைக்காலஜி'யைப் படிக்கறப்ப 'ப்சைக்காலஜி'ன்னு படிச்ச புத்திசாலிங்க உங்கள்ல எத்தனை பேரு?"

(பின்னாளில் நான் காட்டிய சைகைக்கு என்ன அர்த்தம் என்பதை ராஜண்ணா கடிதத்தில் ஞாபமாக எழுதினான்...!)

ரயில் புறப்படும் நேரத்தில் ஜன்னல் வழியே இரண்டு புத்தகங்களைக் கொடுத்து விட்டு அண்ணா சொன்னான்.

"நேரு எழுதினது – டிஸ்கவரி ஆஃப் இண்டியா! இது தாஸ் கேப்பிடல் – கார்ல் மார்க்ஸோடது... மீதப் பகுதியை அப்புறம் வாங்கித் தர்றேன்! புரியாத வார்த்தைக்கு டிக்ஷனரியில அர்த்தம் பாரு... நல்லா படி! வரட்டுமா?"

அந்தப் புத்தகங்களை ஒரே மாதத்துக்குள்ளேயே படித்து முடித்து விட்டேன்! நேருவுக்காகவோ, மார்க்ஸ்க்காகவோ படிக்க

**"பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்னு உன்னால் எப்படிப்பா இருக்க முடியுது?"**

**"எதைச் சொல்றீங்க தலைவரே?"**

**"எனக்குப் பினாமியா இருக்கிறது போதாதுன்னு எதிர்க்கட்சித் தலைவருக்கும் பினாமியா இருக்கிறதைத்தான்!"**

**– உ. ராஜாஜி**



வில்லை... ராஜண்ணாவுக்காகப் படித்தேன்! மைக்கேல் ஜாக்ஸன், ஃப்ரண்ட் லைன், பாரதியார் கவிதைகள், பாலகுமாரன், சுஜாதா... இப்படி எத்தனை விஷயங்களை அவன் எனக்குப் பழக்கப்படுத்தினான்?

கல்கத்தாவுக்குப் போனபின், ஒரு வருடம் கழித்து ராஜண்ணா வந்தான். ஏனோ கலகலப்பாகப் பேசவில்லை! ஐ.ஸி. டபுள்யூ. படிக்க ஆரம்பித்திருப்பதாகச் சொன்னான். சாப்பிட அப்பா வரும்வரைக் காத்திருந்தோம்; கடைத்தெரு முழுக்க, தன் மளிகைக் கடைக்கு வரும் அனைவரிடமும்கூட அண்ணா பற்றிப் பேசிவிட்டு வந்திருப்பார்!

சாப்பிடும்போது அண்ணா கேட்டான்–

"ஏம்ப்பா, கலப்புக் கல்யாணம் பத்தி என்ன நினைக்கறே?"

"அதெல்லாம் வசதியானவங்க பண்ணிக்கறது... அப்பன் ஆத்தாளைப் பகைச்சுக்கிட்டு வாழறதுல என்ன கிடக்கு?" என்றார் அப்பா அசுவாரஸ்யமாக.

"ஒருவேளை நான் கலப்புக் கல்யாணம் பண்ணிக்கிட்டா... ஒரு பேச்சுக்கு சொல்றேன்!" ராஜண்ணாவின் குரலில் விநோதமான சில்மிஷம் தொனித்தது!

'வெடுக்'கென நிமிர்ந்த அப்பா, அண்ணாவின் தோள்களைப் பற்றிச் சொன்னார் –

"என்னடா, பேச்செல்லாம் ஒரு மாதிரி இருக்குது? உன்னைப் பத்தி நல்ல ஆசையெல்லாம் மனசுல வச்சிக்கிட்டு இருக்கேன்... பயமுறுத்தறியே...?"

"ஆங்... சும்மா – பேச்சுக்கு... அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல!"

"இல்லடா, நீ..."

"நான் ராமன் – பயப்படாதே!"

தான் ராமன்தானென்பதை நிரூபித்தான் – கல்கத்தாவில் தன்னுடன் வேலை பார்க்கும் பெண்ணை மணந்து கொண்டதாகக் கடிதமெழுதி! ஒன்றரை வருடக் காதலாம்!

அப்பா தூக்கத்தில்கூடப் புலம்பினார்! என் கல்லூரிப் படிப்பைத் தடுத்து மளிகைக் கடைக்கு அனுப்பினார். பட்டப் படிப்பு அஞ்சலில் தொடர்ந்தது!

"சைதாப்பேட்டைதான கேட்டீங்க? இறங்குங்க...." நடத்துனரின் குரல் கேட்டு, அவசரமாக இறங்கினேன். ஆட்டோவில் அண்ணனின் அலுவலகம் போய்ச் சேர்ந்தேன்.

"நீங்க - ராஜசேகர் சாருடைய தம்பி..."



**"உங்க மகளைக் கண்டிச்சு வையுங்க!"**

**"ஏன்?"**

**"கல்லூரிக்கு அவள் அனுப்பின லீவு லெட்டர்ல நடிகர் விஜய்யோட திருமண அறிவிப்பு, மனநிலையை பாதிச்சுடுச்சுன்னு எழுதியிருக்கா!"**

**– அம்பை தேவா**

என இழுத்தார் வரவேற்பாளர்.

"ஆமாம்... மாடியிலதான அவரோட ரூம்...?" என்றேன் கடிதத்தைப் பார்த்து!

"இல்ல...! இன்னிக்கு அவர்க்கு இருந்த மீட்டிங் கேன்ஸலானதால வரலை... உங்களை உக்காரச் சொல்லிட்டு, வீட்டுக்கு போன் பண்ணச் சொன்னார் – வந்துடுவார்... இதோ ஃபோன் பண்றேன்!" என்றவர் தொலைபேசியை எடுத்தார்.

"வேண்டாம்... வீட்டு விலாசம் குடுங்க... ஃபோன் பண்ணாதீங்க!"

"இல்ல சார்... அவரு..."

"ப்ளீஸ்" நான் எழுந்தேன்.

அவர் பதில் பேசாது முகவரியைத் தந்தார்.

மைலாப்பூரின் பணக்காரத்தனமான அந்தத் தெருவுக்குள் நுழைந்து வீடு கண்டுபிடித்து அழைப்பு மணியடித்தேன்.

கதவைத் திறந்து ராஜண்ணா! அட, என்ன இது, காதோரத்தில் நரை... வட்டமான ப்ரேமில்லா கண்ணாடி... ஜிப்பா...

"சந்துரு... இங்க...? ஆபீஸ்ல போன் பண்ணச் சொன்னேன்...?"

"தெரியும்! நான்தான் போன் பண்ண வேண்டாம்னு சொல்லிட்டு வந்தேன்..." உள்ளே நுழைந்தேன்.

"ஹூ'ஸ் தேர் ராஜு?" உள்ளிருந்து வெளிப்பட்ட அப்பெண் – பளீர் வெள்ளை

நிறத்துக்காரி... படு ஒல்லியாக இருந்தாள்... பாவாடை இரண்டு இன்ச் தெரியும்படி நைட்டி அணிந்திருந்தாள்.... என்னைப் பார்த்ததும், அந்நிய ஆணைப் பார்ப்பதால் ஏற்படும் பெண்ணுக்கான இயல்பான துலங்கல்கள் ஏதுமின்றி ராஜண்ணாவைப் பார்த்தாள்...

"மம்தா... மீட் சந்திரசேகர், மை ப்ரதர்!" அண்ணா சன்னமாகப் பேசினான்.

"ஹ...ஹலோ..." நான் தடுமாறினேன் - அண்ணி!

"ஹலோ... ஹெள ஆர் யூ?" சடுபாடில்லாத ஒருவித அலுவலகத்தனம் தென்பட்டது.

"ஃபைன்..." புன்னகைத்தேன்.

ஹாஷே மாஷேயென ஏதோ பெங்காலியில் ராஜண்ணாவிடம் பேசிவிட்டு, கடைசியில், "ஐ'ம் டு டேக் ரெஸ்ட் ஃபர் டூ ஹாவர்ஸ்... டேக் கேர் ஆஃப் பாலு!" என்று எழுந்து விட்டாள்.

"பி டாக்கிங் வித் ஹிம்..." என்று என்னிடம் சொல்லிவிட்டு, உள்ளே போய் விட்டார்!

எனக்கு இந்தச் சூழ்நிலை முற்றிலும் அந்நியமாகப் பட்டது. சத்யஜித்ரே படம் போல் மௌனக் குழப்பம் ஏற்பட்டது.

"அண்ணா, குழந்தை எங்கே?" என்று நான் கேட்டதற்கு, ராஜண்ணா உள்ளறையைக் காட்டினான்.

குழந்தையைப் பார்த்தேன் - ஹிந்தி விளம்பரப் படத்துக் குழந்தையைப் போல், வங்காளி ஜாடையில், பெரிய மூக்குடன் பெரிய உதடுடன் தூங்கிக் கொண்டிருந்தது.

"பேரு - சித்தார்த்த பாஸு..."

அண்ணா பின்பக்கத்திலிருந்து சொன்னான். வாங்கி வந்திருந்த பொம்மைகளைக் குழந்தையிடம் கொடுத்தேன் - தூக்கத்திலேயே இறுகப் பிடித்தான் - கையில் கருப்பு மணி மாலை வேறு!

"ராஜண்ணா... பெங்காலிப் பொண்ணுன்னதும் சுவலட்சுமி மாதிரி, இல்ல சுஷ்மிதா சென் மாதிரின்னு நினைச்சேன்..."

தொடர்ந்து பேசாமல் நிறுத்தினேன். அண்ணாவின் ஆகிருதி என்ன? அவனுடைய விரிந்த தோள் எங்கே? இந்தக் குடைமிளகாய் மூக்குக்காரியான ஒல்லிப் பிச்சான் எங்கே?

"சந்துரு... வா, பக்கத்து ஹோட்டல்ல சாப்பிடலாம்..."

"இல்ல, அண்ணிதான் ரெண்டு மணி நேரத்துக்கப்பறம்..."

"ப்ச்... வாடான்னேன்!" ராஜண்ணா குரலில் எரிச்சல்!

"முதல்ல ரெண்டு சப்பாத்தி... அப்பறம் ரெண்டு மசால் தோசை கொண்டு வாங்க! சரியாண்ணா?"

"உம்..." அண்ணா தலையாட்டிய பின் பரிமாறுபவர் நகர்ந்தார்.

"சரி, நேரடியா விஷயத்துக்கு வர்றேன்... ஏன் இப்படிப் பண்ணினே?"

"பிடிச்சது, பண்ணிக்கிட்டேன்... பண்ணிக்கிட்டதால இப்பப் பிடிச்சாகணும்!"

"நான் உன்னை வீட்டுல பாக்கறதை, நீ விரும்பலைன்னு புரிஞ்சுக்கிட்டேன்... ஏன்... அண்ணிகூட என்கிட்ட பேசலை? என்னைப் புடிக்கலையா அவங்களுக்கு?"

அண்ணா என்னை ஆழமாகப் பார்த்தான். பின் பேசினான்.

"பல சமயத்துல என்னையே அவளுக்குப் பிடிக்கலைடா... அதுக்குத்தான் உன்னை ஆபீஸ்ல பாக்க..."

"இஷ்டப்பட்டு பண்ணிக்கிட்டு.. இப்ப

**"என்ன டிரைவர், பஸ் கிளம்பினதில் இருந்து மூக்கல் முனகல் பாடல் கேஸட் போட்டீங்க... இப்பப் போயி திடீர்னு பக்திப் பாடல் கேஸட் போட்டிருக்கீங்க?"**

**"பஸ்ஸில் பிரேக்கே பிடிக்கலைன்றது இப்பத்தான் தெரிஞ்சுது!"**

**— எம். அசோக்ராஜா**





**''எழுத்தாளரைக் கட்டிக்கிட்டதிலே ஒரு வசதி.''**

**''என்ன?''**

**''அவர் கதை சொல்லி விடுவாரேன்னு பயந்துகிட்டு 'பசங்க' சீக்கிரம் தூங்கிடறாங்க!''**

**- பி.ஆர். பார்த்தசாரதி**

என்ன புதுசா பிடிக்கலை?''

''ப்ச்... காதலிக்கறப்ப கண்ணும், இதயமும் தான்டா வேலை செய்யுது! உடுத்துற துணி, சிரிக்கற சிரிப்பு, வாசனையான கர்ச்சீஃப், மெத்துனு உள்ளங்கை... கண்ணுல படற தெல்லாம் நல்ல விஷயம்தான்! எல்லாமே ரசிக்கப் பிடிச்ச விஷயம்தான்... கல்யாணத் துக்கப்புறம்தான் அடுத்தவங்களோட முன் கோபம், ஆதிக்க குணம், சுய நலம், இடுப்பு வலி, மூணு நாள் வயித்து வலி, கார் வாங் காததுக்கு ஒரு வாரம் தனிப்படுக்கை... அத் தனையும் புரிபடுது! வாழ்க்கை அத்தனை சுலபமான விஷயமில்லைடா! அல்பமா இருந்த விஷயம் ஆளுயரம் வளருது! ஆராதித்த விஷயம் அழிஞ்சே போய்டுது! காதலிக்கறப்பவே பாக்கற கெட்ட விஷயங் களுக்கு மனசு மரியாதையே குடுக்கற தில்லை. அந்த வயசுக்காரங்க எல்லாருமே அந்த நேரத்துல தப்பாவே தேர்ந்தெடுக்கறதா சொன்னா சரியில்லை... என் விஷயத்துல நான் மட்டும்தான் பொறுப்பாளி! விட்டுக் கொடுக்கற பொண்டாட்டியும், நாகரீகமான மாமியார் வீடும் எல்லாருக்கும் கிடைக்கற தில்லை. மம்தா நல்லவதான்... ஆனா...''

''சமைக்கிறது, வீட்டு வேலையெல் லாம்...?'' சப்பாத்தியின் கடைசித் துண் டத்தை மென்றபடி கேட்டேன்.

''சுமாரா சமைப்பாள்... வேலைக்காரி நிரந்தரமா அமையலை! பிடிவாதமா வேலைக்குப் போறா! தடுத்தா, ''பொம் பளைங்க ஒண்ணும் பலஹீனமானவங்க கிடையாதுங்கறா... வாரத்துக்கு ஒருநாள் - ஞாயித்துக்கிழமை முழுக்கத் தூங்குறா...

''அவளுக்காக நிறைய விட்டுக் கொடுத் தேன். சட்டை, ஷூ, தலைமுடி, மூக்குக் கண்ணாடி, மோட்டார் பைக்கோட சைட் பாக்ஸ், கத்திரிக்காய் கொத்சு , புடலங்காய் கூட்டு, கடைசியா பாரதியார் கவிதை, இங்லீஷ் பத்திரிகை, இங்லீஷ் சினிமா இன்னும் நெறைய விஷயங்களை ஒதுக்கி வைச்சுட்டேன்...''

''ஆச்சரியமா இருக்குண்ணா... இங்லீஷ் பத்திரிகையும், இங்லீஷ் சினிமாவும் உன் மூலமாத்தான் எனக்கே அறிமுகம் ஆச்சு! போன மாசம் 'சென்ஸ் அண்ட் சென்ஸி பிலிடி' பாத்தேன்! முந்தாநேத்து 'அமிஸ்டாட்' பாத்தேன்... நீ பாத்தியா?''

ராஜண்ணா அமைதியாகக் கண்மூடி, பின்னங் கழுத்தில் கை கோர்த்து, நெஞ்சு நிமிர்த்தினான். நான் தொடர்ந்தேன்.

''அதிருக்கட்டும்... உனக்காக எடுத்துட்டு வந்தேன் - இதப்பாரு... 'லவ் அண்ட் மெடி டேஷன்'- ஓஷோவுது! இது, 'தி ப்ராஃப்ட்' - கலீல் ஜிப்ரான்து! என்னா எழுத்து நடை - என்னா தத்துவம்ண்ணா?''

ராஜண்ணாவிடமிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது.

''உன்னுடைய ஐ.ஸி.டபிள்யூ. என்னாச் சுண்ணா?''

''விட்டுட்டேன்... மம்தாவுக்கு நான் ஸி.எஸ். பண்ணணும்னு ஆசை!'' - நான் கொடுத்த புத்தகங்களை விருப்பமின்றிப் பார்த்தபடி சொன்னான்.

சாப்பிட்டதற்குப் பணம் கொடுப்பதற்கு அண்ணா சட்டைப் பையில் கைவிட்ட போது, லேசானதொரு தயக்கத்தை அவன் முகம் காட்டியது.

''சந்துரு... மம்தாவைக் கெட்டவள்னு நினைச்சுடாத! கொஞ்சம் பொஸஸிவ்... அவ்வளதான்! மத்தபடி, கல்யாணத்துக்கு அப்புறம் நான்தான் சோம்பேறியாயிட் டேன்!''

அவன் பேச்சில் அவஸ்தையான நியா யப்படுத்தல் தெரிந்தது. எனக்கு எல்லாம் புரிந்து விட்டது.


''நான் இப்படியே கிளம்பறேண்ணா! அடுத்தமுறை ஆபீஸ்ல பாக்கறேன்!''

''அப்பா கேட்டார்னா...'' அண்ணா இழுத்தான்.


''உண்மையைச் சொல்றேன்... ராஜண் ணாவைப் பார்க்க முடியலைன்னு! என் ராஜண்ணாதான் இங்க இல்லியே!''

கீழ்க் குரலில் சொல்லிவிட்டு, நடக்க ஆரம்பித்தேன். ●


# நடக்குமென்பார், நடக்கும்!




**மேஷம்:** வெளி நாட்டுலேர்ந்து இல்லேன்னாலும் வெளியூர்லேர்ந்தாவது உற்சாகப்படுத்தற மாதிரியான சேதிங்க வரும். பிரண்ட்ஸுங்க உதவுவாங்க. பண விஷயங்கள்லேயும் பிரச்னை இருக்காது. விருந்து, விசேஷம்னு வெளியூர் போயிட்டு வர்றதுக்கும் சான்ஸ் இருக்கு. புதுசு புதுசா எதாச்சும் பொருள் வாங்குவீங்க. இல்லேன்னாலும் அட்லீஸ்ட் டிரஸ்ஸாவது வாங்குவீங்க. கொடுக்கல் – வாங்கல் ஸ்பெகுலேஷன்லாம் இந்த வாரம் வேண்டாம். வியாபாரிங்களுக்குச் சுமாரான வாரம்தான். அம்மணிகளுக்கு ஓகோன்னு இருக்கும். ஆனா ஒண்ணு... அடிக்கடி வேலைக்காரிங்க மட்டம் போட்டு அம்மணிகளுக்கு ஆட்டம் காட்டுவாங்க!




**ரிஷபம்:** வாரத்தோட முன் பகுதி நல்லபடியா இருந்தாலும் பின் பகுதி அத்தனை பிரமாதமா இருக்காதுங்க. செலவு கட்டுக்கடங்காம போகும். வீண் அலைச்சலையும் தவிர்க்க முடியாது. நீங்க நினைக்காத விஷயங்கள்கூட நடக்கும். பிள்ளைங்களால பிரச்னைங்க வரலாம். வெளியூர்ப் பயணங்கள் இருக்கும்னாலும் அதால ஒரு சிலருக்குத்தான் ஆதாயம் கிடைக்கும். மத்தவங்களுக்கு வீண் செலவாத்தான் முடியும். கொடுக்கல் – வாங்கல், ஸ்பெகுலேஷன் சமாசாரங்களையும் இந்த வாரம் ஒத்திப் போட்டுடுங்க. எதிலும் உணர்ச்சி வசப்பட்டுடாதீங்க.



**மிதுனம்:** இந்த வாரம் நீங்க எடுக்கற எல்லா முடிவுமே கரெக்டா இருக்கும். அப்புறம் பாராட்டுக்குக் கேட்கணுமா? மத்தவங்களால முடியாத காரியங்களைக்கூட நீங்க இந்த வாரம் ஜமாய்ச்சிடுவீங்க. கூட்டுத் தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உறுதி. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். அதுக்கு வாய்ப்பில்லாதவங்களுக்குப் பாராட்டுக்களாவது கிடைக்கும். பெண்களுக்கும் இந்த வாரம் நினைச்சது நடக்கும். பிரயாணத்தாலயும் பிரயோஜனம்தான். திடீர்னு பணவரவு கிடைக்கறதுக்கும் நிறைய சான்ஸ் இருக்கு.



**கடகம்:** சுக்கிரன், சனி தவிர மத்த எதுவும் உங்களுக்கு உதவி பண்ற மாதிரி இல்லீங்க. அதால கஷ்டப்பட்டு வேலை பார்த்தாலும் பலன் முழுமையாகக் கிடைக்காது. மனக் குழப்பம், குடும்பத்துல சின்னச் சின்ன தொல்லைகள்னு வந்துக்கிட்டே இருக்கும். அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துடக் கூடாது. பயணத்தை – அதுவும் ராப் பயணத்தைக் கட்டாயம் தவிர்த்திடுங்க, கொடுக்கல் – வாங்கல் விஷயத்தில ரொம்பவே உஷாரா இருக்கணும். உத்தியோகஸ்தர்களுக்கு டிரான்ஸ்ஃபர் வரலாம். இத்தனைக்கு நடுவுலயும் பொருளாதார விஷயம் பிரச்னை தராதுங்கறது ஆறுதலான விஷயம்.




**சிம்மம்:** சில கிரகங்கள் உங்களுக்குச் சாதகமாக இல்லாததால் தடைகளைத் தவிர்க்க முடியாமல் போகும். நீங்க ஒண்ணை எதிர்பார்த்து ஒரு காரியத்தைச் செஞ்சீங்கன்னாலும் அது வேறொண்ணா முடியும். சில விஷயங்கள் தானாவே தள்ளிப் போகும். வீண் அலைச்சலையும் கட்டுக்கடங்காத செலவையும் நீங்க எதிர்கொண்டுதான் ஆகணும். இயந்திரங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் எச்சரிக்கையா இருக்க வேண்டியது அவசியம். இத்தனைக்கும் நடுவுல குரு வக்கிர கதில இருக்கறதால அவ்வப்போது சில நன்மைகளுக்கும் நிறைய சான்ஸ் இருக்கு. வாரக் கடைசில எல்லாமே பிரமாதமா நடக்கற சான்ஸும் நிறையவே இருக்கு.




**கன்னி:** எதிலும் தாமதம், வீண் அலைச்சல், செலவுகள்னு இந்த வாரம் உங்களுக்கு வர்றதைத் தவிர்க்க முடியாது. புது முயற்சிகள், முதலீடுகளுக்கு இது நேரமேயில்லை. பண விஷயமும் ஏற்ற இறக்கமா இருக்குமே தவிர, சீராக இருக்காது. எல்லார்கிட்டயும் பக்குவமா நடந்துக்கலைன்னா பிரச்னைதான் வரும். ரொம்பவே எச்சரிக்கையா இல்லேன்னா கொடுக்கல் – வாங்கல் நஷ்டம்தான் வரும். உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பாத இடத்துக்கு டிரான்ஸ்ஃபர் கிடைக்கலாம். கூடவே எதிர்ப்புகளையும் சமாளிக்க வேண்டியிருக்கும். இருந்தாலும் அம்மணிகளுக்கு இத்தனை சிரமம் இருக்காது. பொருள் சேர்க்கைகூட வரலாம்!


## அக்னி சர்மா பக்கம்




**துலாம்:** குடும்பத்துல சின்னச் சின்னத் தொல்லைகள், மனக் கவலை, குழப்பம் எல்லாமே இருந்தாலும் பண விஷயத்துல சிக்கலே இல்லீங்க. திருப்தியா இருக்கும். வர வேண்டிய பணமெல்லாம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். இது வரைக்கும் இருந்த கடன் தொல்லைகளுக்கு இந்த வாரம் ஒரு முழுக்குப் போட்டுடுவீங்க. சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதால அனுகூலமும் ஏற்படும். வேலை தேடிக்கிட்டிருக்கறவங்களுக்கு ஒரு நல்ல வேலை கிடைக்கறதுக்கு சான்ஸ் இருக்கு. உத்தியோகஸ்தர்களுக்கு புரமோஷன் சான்ஸும் இருக்கு. மருத்துவம், நிர்வாகம், விஞ்ஞானத்துறைகள்ல இருக்கறவங்களுக்கு இது ஏஒன் வாரம்!



**விருச்சிகம்:** சுக்கிரன், ராகு, சூரியனெல்லாம் உங்களை ஸ்ட்ராங்கா சப்போர்ட் பண்ணினாலும்கூட மத்த கிரகங்கள் முரண்டு பிடிக்கறதால வாஜ்பாய் நிலைதாங்க உங்களுக்கு. எதுவானாலும் ஓகோன்னு இருக்காது; ஓரளவுக்குத்தான் இருக்கும். அலைச்சல், வீண் விரயங்களுக்கு ஏகப்பட்ட சான்ஸ் இருக்கு. நினைச்சபடி எதுவும் நடக்காது. கூட இருக்கறவங்களே உங்களுக்கு எதிரா மாறுவாங்க. பிரண்ட்ஸுங்ககூட கண்டுக்காம இருந்துடுவாங்க. உங்களுக்கு இஷ்டமேயில்லா இடத்துக்கு டிரான்ஸ்ஃபர் கிடைக்கவும் சான்ஸ் இருக்கு. மருத்துவச் செலவுக்கும் பணம் ஒதுக்கிடறது நல்லது.




**தனுசு:** நீங்க எதிலுமே நிதானம் காட்டியாக வேண்டிய வாரம் இது. உங்களோட செயல்களுக்குத் தடைகளும் குறுக்கீடுகளுமா வந்தா மனசுல குழப்பமும் ஒரு வெறுப்பும் வரத்தானே செய்யும்! அலைச்சலிலிருந்தும் நீங்க தப்பிச்சிட முடியாது. பிள்ளைங்களாலகூட பிரச்னைதான் வரும்னா எச்சரிக்கையா இருக்கறதுதானே நல்லது? மின்சாரம், நெருப்பு, இயந்திரங்களோட வேலை செய்யறவங்க எச்சரிக்கையா இல்லேன்னா விபத்துல மாட்டிக்க வேண்டியிருக்கும். பயணத்துலயும் எச்சரிக்கையா இருங்க.




**மகரம்:** உங்க பக்கமிருக்கிற கிரகங்கள் உற்சாகமா இல்லாததால, விசேஷமா எதையும் நீங்க எதிர்பார்க்க முடியாது. குடும்பத்தில இருக்கறவங்களே உங்களுக்கு அனுசரணையா இல்லாதப்போ, மனசு சங்கடப்படத்தானுங்களே செய்யும்! இந்த நிலைல உழைப்புக்கேத்த ஊதியமும் கிடைக்காம போனா என்னங்க செய்ய முடியும்? பண விஷயமும் திருப்தியா இருக்காது. வீட்டுல ஒட்டடை அடிக்கலாம்னு புறப்பட்டாக்கூட இண்டு இடுக்குலேர்ந்து தேள் கொட்டறதுக்கும் சான்ஸ் இருக்கு. சுருக்கமாச் சொன்னா, வாக்கிங் போகும் போதுகூட நீங்க இந்த வாரம் தெரு நாய்ங்க கிட்ட உஷாரா இருக்கணுங்க.



**கும்பம்:** புதுசு புதுசான பொறுப்புகள் வந்து உங்க அந்தஸ்தையே உயர்த்தினாலும் ஆச்சரியப்படாதீங்க. செயற்கரிய காரியங்களை இலகுவா செஞ்சு முடிச்சுப் பாராட்டைப் பெறுவீங்க. எதிரிங்க பின்னங்கால் பிடறியில் பட ஓடி ஒளிஞ்சுக்குவாங்க. கோர்ட்டு, கேஸ்னு ஏதாவது இருந்தாலும் வெற்றி தேவதை உங்க பக்கம்தான். இளசுகள் இருக்கற வீட்டுல டும்டும் சத்தத்துக்கு அட்வான்ஸ் கொடுக்க நேரிடலாம். டும்டும் ஆனவங்களுக்கு – வீ டுவா இருந்தா வீ த்ரி ஆகற சான்ஸ் இருக்கு. புது ஆளுங்ககிட்ட மாத்திரம் உஷாரா இருங்க. மத்தபடி ஓகோ வாரம் உங்களுக்கு!



**மீனம்:** சூரியன் ஆட்சியில இருக்கறதால– அட, நான் அரசியல் பேசலீங்க – கவர்மெண்ட் சம்பந்தப்பட்ட விஷயங்கள்ல உங்களுக்குப் பிரச்னை இருக்காதுன்னாலும் மத்தபடி பிரச்னைதான். ஒவ்வொண்ணையும் ரொம்பவும் பிரயாசைப்பட்டுத்தான் அடைய வேண்டியிருக்கும். குடும்பத்துலயும் சின்னச் சின்ன தொல்லைகள் வரும். வழக்கமா ஓசிப் பேப்பர் வாங்க வர்ற பக்கத்து வீட்டுக்காரர்கூட உங்களுக்கு விரோதியா மாற சான்ஸ் இருக்கு. குடும்பத்தில செலவுகள் வரும். அதால நீங்க கடன் படவும் நேரிடலாம்.



**மகர ராசிக்காரரான எழுத்தாளர் சுப்ர.பாலன் இந்த வாரம் எல்லா விஷயத்திலும் ரொம்ப கவனமா இருக்கணுமாம்!**

# ஸ்ரீ கிருஷ்ணா கமிஷன் அறிக்கை கிருஷ்ணார்ப்பணம்தானா...?

● வி.பிரசன்ன கிருஷ்ணன், சென்னை – 17

*? 'குத்துச் சண்டையில் சரமாரியாக எதிரியைக் குத்துவதும், எதிரியைப் பின்னுக்குத் தள்ளியபடி முன்னேறுவதும் முதலில் நடக்கும்... கடைசியில்தான் நாக் அவுட்.' என்று தமது ஆதரவு வாபஸ் கண்ணாமூச்சிக்கு விளக்கம் சொல்லியிருக்கிறாரே ஜெ?*

! குத்துச் சண்டை என்பது ரோஷமான விளையாட்டு என்றாலும் அதற்கும் கட்டுப்பாடுகளும், விதிகளும் உண்டு. வரம்பு மீறும்போது கண்டிப்பதற்கு ரெஃப்ரீ இருப்பார். ஆனால், ஜெ – வாஜ்பாய் குத்துச் சண்டையில் சமபலம் உள்ளவர்கள் மோதவில்லை என்பதோடு ஜெயலலிதாவின் அழுகுணி ஆட்டத்தைத் தட்டிக் கேட்கவும் யாருமில்லை.

● கலை அரசு, கோவை – 42. ❑

*? பா.ஜ.க ஹிந்துத்வ கட்சி என்கிறார்களே... இதுவரை அது ஹிந்துக்களுக்குச் செய்த பிரத்யேகமான நன்மைகள் என்ன...?*

! ஒன்றுமில்லை! செய்த தீமைகள்தான் அதிகம். அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிறார்கள்.

● மேலை பழ நாகப்பன், சென்னை – 41.

*? கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்...?*

! ஆசிரியர் ஸ்டிரைக் என்பது அப்பா – அம்மா ஸ்டிரைக் செய்வது மாதிரி. காரணம் என்னவானாலும் மாணவரிடையே ஏற்படும் பாதிப்பு சொல்லில் அடங்காது. ஆசிரியர்களின் கோரிக்கைகளில் நியாயம் இருக்கலாம். ஆனால் அதை அடையும் மார்க்கத்தில் அவர்கள் பிறருக்கு முன்னு



• பிரதமர்....

தாரணமாகத் திகழ வேண்டும் என்றுதான் மக்கள் எதிர்பார்ப்பார்கள்.

● ஆர். சுப்பராவ், சென்னை – 61

*? ஸ்ரீ கிருஷ்ணா கமிஷன் அறிக்கை கிருஷ்ணார்ப்பணம்தானா...?*

! அப்படி ஆகிவிடக் கூடாது என்பது உண்மை. பால்தாக்கரேயும் அவரது சிவசேனாவையும் பகைத்துக் கொள்ளும் துணிவு யாருக்கும் இல்லை என்பதும் உண்மை. இன்று 'ஸ்ரீ கிருஷ்ணா அறிக்கையைக் கிடப்பில் போடக் கூடாது' என்று வாதாடும் காங்கிரஸ்கூட நாளை பதவிக்கு வருமானால் மழுப்பலாக நடந்து கொண்டால் ஆச்சர்யமில்லை.

● மல்லிகை மன்னன், மதுரை – 17.

*? 'தி.மு.க.வில் மீண்டும் என்னை இணைத்துக் கொள்ள நான் ஒன்றும் சோற்றாலான பிண்டம் அல்ல!" என நெற்றிக் கண்ணைத் திறந்திருக்கிறாரே வைகோ?*

! உணர்வு நியாயமானதாக இருக்கலாம்; என்றாலும் அரசியல் நாகரிகம் கருதி இன்னும் கொஞ்சம் அடக்கமாகப் பேசலாம்.


● வஸந்தா பார்த்தசாரதி, சென்னை – 88.

*? இந்தியாவில் அரசியல் வட்டாரத்தில் நடக்கும் 'காதல் விவகாரங்கள்' வெளி வராமல் பதுக்கி மறைக்கப்படுகின்றன. அப்படியிருக்க அமெரிக்க அதிபரின் பெயர் மட்டும் இதற்காக தினமும் செய்தியில் அடிபடுகிறதே...?*

! செல்வச் செழிப்பு, அமெரிக்காவைத் தடம் மாறச் செய்து ரொம்ப காலமாகி விட்டது. வயாக்ராவை பாட்டில் பாட்டிலாக விழுங்கித் தீர்க்கும் அமெரிக்கர்கள், கிளிண்டனின் லீலைகளைப் பொருட்படுத்தியே இருக்க மாட்டார்கள். அவர் பொய் சொன்னதால்தான் மாட்டிக் கொண்டிருக்கிறார். இப்போது மன்னிப்புக் கேட்டிருப்பதால் ஒருவேளை தப்பிப்



• ... யாரென்ற....




• ... போட்டி...!



• அழகுணி ஆட்டம்!



• பொய் சொன்னதால்...



• உணர்வும் சொல்லும்!



• எண்பத்தி மூன்று!

பிழைக்கலாம். இந்தியாவிலும் 'காதல் விவகாரங்கள் மூடி மறைக்கப்படக் கூடிய காலம் மலையேறி விட்டது. இன்று நேருவைக்கூட சந்திக்கு இழுத்து விட்டார்களே!

● **வைகை வளவன், மதுரை – 17.**

*? மசூதிகளும், மாதா கோயில்களும் அழகுடன் ஜொலிக்கும்போது, கோடிக் கணக்கில் வருமானம் பெறும் ஹிந்துக் கோயில்கள் மட்டும் பாழடைந்து போய்க் காட்சியளிப்பது ஏன்...?*

! மாதா கோயில்களில், மசூதிகளில் அரசின் நேரடித் தலையீடு கிடையாது என்பதுதான் அடிப்படைக் காரணம். ஊழலுக்கு இடமளிக்கும் எந்த ஒரு ஏற்பாட்டிலும் தூய்மையை எதிர்பார்க்க முடியாது. பொறுப்புணர்ச்சி இராது.

● **எல்.எம். அபிதா, திருவண்ணாமலை.**

*? சாவி சார் 83வது பிறந்தநாள் விழா எப்படி இருந்தது...?*

! அரங்கம் நிறையாவிட்டாலும் வந்த அனைவருக்கும் வயிறு நிரம்பியிருந்தது. (பொங்கல், வடை, காசி அல்வா, காப்பி) மேடைப் பேச்சுகளில் போலித்தனம் மிகக் குறைவாக இருந்தது. அதனால், கேட்டவர்கள் மனம் நிறைந்திருந்தது.

● **கே.எம். சுப்ரமணியன், பூனாம்பாளையம்.**

*? கருணாநிதி மீதான குற்றச்சாட்டுகளைக் கையேடாக அச்சிட்டு, அனைத்து கிராமங்களிலும் நகரங்களிலும் வீடு வீடாகவும், பஸ் நிறுத்தங்களிலும், ரயில் நிலையங்களிலும், கடை வீதிகளிலும் சென்று விநியோகிக்க வேண்டும் என ஜெயலலிதா கூறியிருப்பதைப் பற்றி...?*

! ஒவ்வொரு குற்றச்சாட்டின் பின்னாலும் குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுப்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்!

> ❑ ரூ 50 பரிசு பெறுபவர்:
> கலை அரசு,
> அருண் இல்லம்,
> 2, லட்சுமி நகர்,கோவைப்புதூர்,
> கோவை 641 042.

● **வை. வெங்கடேசன், விழுப்புரம்–2.**

*? வாழ்க்கை என்பது சுவையா அல்லது சுமையா...?*

! 'கறுப்பிலும் ஓர் அழகு, காந்தலிலும் ஒரு ருசி' என்பது போல சுமையிலும் ஒரு சுவை உண்டு.

● **ஜெ. கண்ணன், சென்னை – 101**

*? கர்நாடக மாநிலத்தில் தோட்டக் கலைத் துறை அமைச்சரை அம்மாநில மக்கள் மேடை ஏறித் தாக்கியிருக்கிறார்கள். அமைச்சர் தவறு செய்ததாகவே வைத்துக் கொள்வோம்... அதற்காக நாமே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்வது நியாயமா...?*

! மக்கள் ஆத்திரமடைந்து சட்டத்தைத் தாங்கள் கையில் எடுத்துக் கொள்ளும் அளவுக்கு அமைச்சர் தவறுகள் செய்வது நியாயமா...?

● **ஜி. ஜெயராமன், கூத்தனூர்.**

*? அனுபவம் – படிப்பினை – வேறுபாடு கூறவும்...*

! ஜெ யுடன் கூட்டுச் சேர்ந்தது பிஜேபி தலைவர்களுக்கு ஓர் அனுபவம். 'ஜெ'யின் மிரட்டல்கள் தற்போது அத் தலைவர்கள் பெற்று வரும் படிப்பினை!

● **கே. பெருமாள், கூளியூர்.**

*? போகிற போக்கைப் பார்த்தால் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமையும் போலிருக்கிறதே...?*

!. அமைவதற்கு இன்னும் வாய்ப்பு ஏற்படாத போதே பிரதமர் யார் என்பதில் போட்டி ஆரம்பமாகி விட்டதே! கட்சியும் ஆட்சியும் உருப்படவா செய்யும்!

● **சு. நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.**

*?ஆன்மீகம், ஒழுக்கத்தைக் கற்பிக்கத் தவறி விட்டதா என்ன...?*

! இல்லை; ஆன்மீகத்தை மறந்ததால் அல்லது கடைசிப்பட்சமாக்கியதால்தான் ஒழுக்கம் சிதறிப் போய் விட்டது!

● **எம். பிரபு, குமராட்சி.**


*? மத்திய ஆட்சியின் குழப்பம் தீரத் தாங்கள், சொல்லும் வழி என்ன...?*

! பல்வேறு கட்சிகளிலிருந்தும், குற்றச்சாட்டுக்கு உள்ளாகாத திறமையானவர்களைத் தேர்ந்தெடுத்து ஒரு தேசிய அரசு அமைக்குமாறு ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் கேட்டுக் கொள்ளலாம். அதற்கு மமதை கொண்ட தலைவர்கள் ஒப்புக் கொள்ளாத பட்சத்தில், தேர்தலைச் சந்திப்பதே சிறந்தது. ●

**நீங்கள் கேட்டவை – தராசு**




• ஆர். உமாதேவி



• என். கவிதா



• கோமதி ஷெட்டி



• ஐ. விக்டர்



• எஸ். கேப்ரியல்




• டி. மெட்டில்டா பாக்கியம்



• ஜெகேந்திர தாஸ்



• பெல்சன்



• கே. கல்யாண ஜானகிராமன்



• எஸ். இருதயராஜ்

'நீதிபதியாக நீங்கள் ஆனால் என்ன செய்வீர்கள்?' என்று நெல்லை தூய சவேரியார் கல்லூரி மாணவ மாணவிகளைக் கேட்டதற்கு, அவர்களின் சுவையான பதில்கள் இவை. இப்படியெல்லாம்கூட நீதிபதிகளால் செய்ய முடியுமா என்று யோசிக்க வேண்டாம்.

# கண்டிப்பாகக்



• எஸ். செல்வழகர்

இன்றைய இளைய தலைமுறையினர் எப்படியெல்லாம் சிந்திக்கிறார்கள் என்பதை மட்டுமே பாருங்கள்!)

*1. ஆர்.எஸ். க்ளாரா தேவக்ருபா (இரண்டாமாண்டு தமிழ், எம்.ஏ):*

'Justice delayed is justice denied' என்பார்கள். அதனால், உடனடியாக வழக்குகள் ஆராயப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட வழி செய்வேன். நீதிமன்றங்களைக் கேலிக்கூத்தாக்கும் அரசியல்வாதிகளையும் நான் தண்டிப்பேன்.

*2. ஆர். உமாதேவி (இரண்டாமாண்டு தமிழ், எம்.ஏ)*

நான் நீதிபதியானால் வாய்தா வழங்கும் முறையையே ரத்து செய்து விடுவேன். வாய்தா வாங்கி வாங்கி, பிறகு குற்றவாளிகள் ஜாமீனில் வெளிவந்து விடுகிறார்கள். அதனால் On the spot judgementக்காகப் பரிந்துரை செய்வேன்.

3.என். கவிதா (இரண்டாமாண்டு தமிழ், எம்.ஏ)

ஊழல் செய்துவிட்டு ஹாயாக வெளியே அலையும் அரசியல்வாதிகளை நம் தலைமுறை இனம் கண்டு விட்டது. அவர்களுக்கெல்லாம் உடனடி தண்டனை வழங்குவேன். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை நிரூபிப்பேன்.

4. டி. மெட்டில்டா பாக்கியம் (இரண்டாமாண்டு தமிழ், எம்.ஏ):

நான் நீதிபதியானால் அனாவசியமாகப் பேசுபவர்க்கு தண்டனை கொடுப்பேன். தவிர, வேறு சில நாடுகளில் உள்ளது மாதிரி கையை வெட்டினால் கையை எடுக்கச் சொல்லித் தீர்ப்பு சொல்வேன்.

5. கோமதி ஷெட்டி (எம்.ஏ):

பல ஆண்டுகளாகப் பதுங்கிக் கிடக்கும் வழக்குகளை முதலில் தீர்க்க வேண்டும்.

6. ஜெகேந்திர தாஸ் (மூன்றாமாண்டு தாவரவியல்):

பெண்களைக் கேலி செய்பவர்களை அதிகபட்சமாக தண்டிப்பேன். எந்தத் தப்பு செய்தாலும் சுட்டுக் கொல்லவே தீர்ப்பு சொல்வேன். அப்போதுதான் நம் சமூகம் மாறும்!

7. ஐ. விக்டர் (இரண்டாமாண்டு கணக்கு):

சட்டம் ஒரு இருட்டறைதான். ஆனால் வழக்கறிஞர்கள் மெழுகு வர்த்தி போன்றவர்கள். அவர்கள தாம் நிரபராதிகளுக்கு தண்டனை வழங்காமல் பார்க்க முடியும். எனவே, தவறு செய்தவர்களை ஜாமீனில் விடாமல் இருக்க முயற்சி செய்வேன்.

# காதல் திருமணம்தான்!

8. கே. கல்யாண ஜானகிராமன் (இரண்டாமாண்டு கணக்கு):

நான் நீதிபதியானால் எல்லா வழக்குகளையும் ஆறே மாதங்களுள் முடிக்க முயற்சிப்பேன். குழந்தைகளைக் கற்பழிக்கும் கயவர்களுக்கு உலகின் மிகக் கடுமையான தண்டனை வழங்குவேன்.

• பொன். இளவரசு




• ராமு

• ஆர். பேச்சிக் கண்ணன்




• எஸ். கிருஷ்ணன்

• ஹெச். வாஞ்சி கோபால கிருஷ்ணன்








செ. ஜெகஜீவன்

• கே. சுரேஷ்குமார்



• கணேஷ்குமார்






• ஆர்.எஸ். க்ளாரா தேவக்ருபா






• எஸ். மாசானமுத்து




• குருவைய்யா



• பி. முத்துமணி



• ஜெயகர்



• எஸ். விஜயகுமார்

**9. பெல்சன் (ஆங்கில இலக்கியம் இரண்டாமாண்டு)**

சந்தேகக் கேஸ் என்று கண்டவரையும் பிடித்துவிடும் போலீஸ் மீது நடவடிக்கை எடுப்பேன்.

**10. எஸ். இருதயராஜ் (மூன்றாமாண்டு இயற்பியல்)**

அம்புக்குத் தண்டனை கொடுப்பதை விட எய்தவனுக்கே நிறைய தண்டனை கொடுப்பேன். அரசியல் ப்ரஷர் மீறி நியாயத்துக்காகத் தீர்ப்பளிப்பேன்.

**11. எஸ். கேப்ரியல் (முதலாமாண்டு இலக்கியம்)**

குற்றவாளிகள் தப்பித்து விடக் கூடாது. சட்டத்தை, சுட்டெரிக்கும் சூரியனாய்ச் சுழற்றுவேன். தனி மனித உணர்வுகளுக்கு மரியாதை செய்வேன்.

**12. செ. ஜெகஜீவன் (முதலாமாண்டு நாட்டார் வழக்காற்றியல்):**

வன்முறையை ஒழிக்கவும், வரதட்சணையை ஒழிக்கவும், கள்ளச் சாராயத்தை அழிக்கவும், ஊழலை ஒழிக்கவும், உண்மையை வரவழைக்கவும் கொஞ்சம் கூடத் தயங்க மாட்டேன்.

**13. ஆர். பேச்சிக்கண்ணன் (முதலாமாண்டு கணிதம்):**

வரதட்சணை, லஞ்சம் வாங்குவோரைக் கடுமையாக தண்டிப்பேன். சாதி, மத பேதங்களைத் தூண்டுபவர்களையும் சிறையில் தள்ளுவேன்.

**14. கே. சுரேஷ்குமார்:- (முதலாமாண்டு வேதியியல்):**

தண்டனை நிருபணமாகும் குற்றவாளிகளுக்குப் பொதுமக்கள் முன்னாலேயே பொது மக்களைக் கொண்டே தண்டனை கொடுக்க ஏற்பாடு செய்வேன்.

**15. எஸ். கிருஷ்ணன் (முதலாமாண்டு எம்.எஸ்ஸி கம்ப்யூட்டர்):**

தரம் குறைவான விளம்பரங்கள் வருவதைத் தடை செய்வேன். அதற்காக, தகவல் தொடர்புத் துறையில் மாறுதல் கொணர்வேன். சென்சார் போர்டின் புதிய உறுப்பினர்களாக ரேகா, ஜெயா பச்சன் போன்றோர் இருந்தும் மாறுதல் ஏதுவுமில்லை. 'தர்மா' போன்ற திரைப்படங்களில் ரத்தமே கதையாகி விடுகின்றது. அதையெல்லாம் தடை செய்வேன்.

**16. கணேஷ்குமார் (முதலாமாண்டு வேதியியல்):**

லோக்கல் தாதாக்களை முற்றிலுமாக சட்டத்தின் துணையோடு ஒடுக்குவேன். கவர்மெண்ட் டாக்டர்கள் தனியாக ப்ராக்டிஸ் செய்வதை ஒழிப்பேன்.

**17. பொன். இளவரசு (முதலாமாண்டு கணிதம்):**

தண்டிக்கப்பட்டாலும் பிரேமானந்தா சிறையில் வசதியாக வாழ்கிறார் என்று பத்திரிகைகள் சொல்கின்றன. இதை எல்லாம் தடை செய்வேன். மேலும் சுயநிதிக் கல்லூரிகளின் பணம் தின்னும் போக்கினை அடக்கி விடுவேன். பஸ் எரிப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை!

**18. ராமு (மூன்றாமாண்டு ஆங்கில இலக்கியம்):**

முதியோர் இல்லத்தில் பெற்றோர்களைத் தள்ளும் பிள்ளைகளைத் தண்டிப்பேன். அவர்களைப் பராமரிக்குமாறு செய்வேன். மேல் கோர்ட்டில் அப்பீல் செய்து தப்பிக்கும் முறையை மாற்ற முயற்சி செய்வேன்.

**19. ஹெச். வாஞ்சி கோபால கிருஷ்ணன் (முதலாமாண்டு கணிதம்)**


குழந்தைத் தொழிலாளர்கள் வேலை பார்க்கும் தொழிற்சாலையை இழுத்து மூடச் செய்வேன். அரசியல்வாதிகள் கையில் சட்டப் புத்தகம் பந்தாடப்படுவதைத் தடுத்து நிறுத்துவேன்.

**20. எஸ். செல்வழகர் (முதலாமாண்டு கம்ப்யூட்டர்):**


நான் நேர்மையாக இருப்பேன். இதுவே அடிப்படையில் முக்கியமானது. பத்திரிகை சுதந்தரத்துக்கு அளவுகோல் அமைப்பேன்.




• கிஷோர்



• சில்வியா



• எம். சக்திவேல்



• செல்வபிரகாஷ்



• ஆண்டோ பிரசாந்த்

தவறு செய்யும் இளைஞர்களை தண்டிக்காமல், திருந்துவதற்கு ஒரு சான்ஸ் கொடுப்பேன்.

**21. எஸ். மாசானமுத்து:**

**(இரண்டாமாண்டு எம்.ஏ. தமிழ்):**

ஏகாதிபத்யத்துக்கு அடி பணிய மாட்டேன். சாமான்யர்களுக்கே சாமரம் வீசுவேன். உண்மையின் கற்புக்கு உத்தரவாதம் கொடுப்பேன். எத்தனை காந்தி இருந்தாலும் ஒரு பிரேமானந்தா இருந்தால் எங்கே நாடு உருப்படும்?

**22. குருவையா**

**(மூன்றாமாண்டு விலங்கியல்):**

மதக் கலவரத்தைத் தூண்டி விடும் மதவாதிகள் மீது நடவடிக்கை எடுப்பேன். சுற்றுப்புறச் சூழலை மாசுப்படுத்தும் கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பேன். என்னிடம் காவேரி பிரச்னை மாதிரி சிக்கலான ஏதாவது பிரச்னை வந்தால், உடனடியாகத் தீர்ப்பு வழங்குவேன்.

**23. ஜெயகர் (மூன்றாமாண்டு ஆங்கில இலக்கியம்):**

சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வர முயல்வேன். சிறைக்குள் மனோதத்துவ ஆலோசனை கொடுக்கச் செய்து குற்றவாளிகள் மனந் திருந்த வழி செய்வேன். சுதந்தரமாகச் செயல்பட விரும்புவேன். முடியவில்லை எனில், ராஜினாமாதான்.

**24. பி. முத்துமணி**

**(பி.காம், முதலாமாண்டு):**

பொய் சாட்சி சொல்பவர்களை வெளியே வர முடியாத சட்டப் பிரிவில் போடுவேன். விபத்துக்குள்ளாகி இருப்பவர்களை ஆஸ்பத்திரியில் சேர்ப்பவர்களுக்கு சன்மானமும் தரச் செய்வேன். வரி கட்டாத அரசியல்வாதிகளையும், சினிமாக்காரர்களையும் ஜப்தி செய்ய உத்தரவிடுவேன்.

**25. எஸ். விஜயகுமார் (மூன்றாமாண்டு தாவரவியல்):**

சமுதாயக் குற்றங்களுக்கு அரசியல்வாதிகள் தாம் காரணம். அதனால் அவர்களை தண்டிப்பேன்.

**26. கிஷோர் (மூன்றாமாண்டு கணிதம்):**

விவாகரத்து தவிர எல்லா வழக்குகளுக்கும் கொஞ்சமும் கால அவகாசம் கொடுக்காது முடிப்பேன். குற்றவாளிகளை கைது செய்தவுடனே நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும். காவல் நிலைய கற்பழிப்பு கேஸில் உடனடி பதவி நீக்கம் அமுல் செய்வேன்.

**27. செல்வபிரகாஷ், (பி.ஜி.டி.சி.ஏ):**

நீதிமன்றங்களை நிதி மன்றங்களாக ஆகாமல் தடுப்பேன். லஞ்சம் வாங்கும் நீதிபதிகள், வழக்கறிஞர்களை தண்டிப்பேன். தீவிரவாதிகளை சட்டத்தின் ஓட்டையின் மூலம் தப்பிக்க விட மாட்டேன்.

**28. சில்வியா (இரண்டாமாண்டு கணிதம்):**

நியாயம் ஒன்றையே குறிக்கோளாய், நீதி ஒன்றே இலக்காய் செயல்படுவேன். பெண்களின் தீர்ப்பில் தராசு முள் தெரியும் என்பதை நிரூபிப்பேன்.

**29. ஆண்டோ பிரசாந்த்**

**(இரண்டாமாண்டு இயற்பியல்):**

வி.ஐ.பிகளின் உறவைத் தக்க வைத்திருக்கும் வழக்கறிஞர்கள், சட்டத்தை விற்பதைத் தடுப்பேன். எல்லோரும் கண்டிப்பாகக் காதல் திருமணம் செய்ய வேண்டும் என்கிற சட்டம் வரப் பாடுபடுவேன்.

**30. எம். சக்திவேல்**

**(மூன்றாமாண்டு எகனாமிக்ஸ்):**

மிசா, தடா, பொடா என்று அப்பாவி மக்களையும் சேர்த்து தாதாக்களோடு தள்ளும் வழக்கத்தை எதிர்ப்பேன். காவிரிப் பிரச்னை மாதிரி விஷயத்தில் ஒரே சிட்டிங்கில் தீர்ப்பு சொல்வேன். கூடங்குளம் அணுமின் நிலையத்தை நிறுத்துவேன். ஏனெனில் தமிழன் அப்பாவித்தனத்தின் கூடாரமல்லவா? ரஷ்யாவின் தோற்றுப் போன முயற்சிகளைச் சுமந்து செல்லும் பழுதடைந்த தண்டவாளமல்லவே? ●

பேட்டி: **தமயந்தி**

படங்கள்: **ஆண்டனி ராஜ்**

# துடிக்குது மனம்!

✉ "ஜெயின் கமிஷன்..! உரித்த வெங்காயம்' எனும் தலையங்கத்தை வாசித்தேன். உரித்த வெங்காயத்திற்குரிய மணமும் குணமும்கூட இந்த அறிக்கைக்கு அறவே கிடையாது என்பதே உண்மை. தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் முழு அறிக்கையும் குப்பைக் கூடைக்குப் போக வேண்டியதுதான்.

பெங்களூர் – 72, ப. மூர்த்தி.

✉ கல்கியின் இலவச இணைப்புகள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று விஞ்சும் தரத்தில் தூள் கிளப்புகின்றன. கண்கள் பற்றிய இஇணைப்புக்கு கண்ணுப்பட்டிருக்கும்! திருஷ்டி விடுங்கள்!

மணக்காடு, சி.தெ. ரஜினி அருள்.




✉ "ரஜினியுடன் அருணாச்சலம் படத்தில் நடிக்க இருக்கிறேன்" என நடிகர் ஜெயராம் யதேச்சையாகப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளிக்க, அப்படத்தில் நடிக்கும் விவரத்தை முன்கூட்டியே சொல்லி விட்டார் என்று காரணம் கூறி அந்தப் படத்திலிருந்தே நீக்கப்பட்டார். தற்போது ரஜினிக்கு ஜோடியாக தேவயானி நடிக்கின்றார் என்கிற செய்தியைக் கல்கி வெளியிட்டிருக்கிறது; தேவயானிக்கு என்ன நிலை ஏற்படப் போகிறதோ?

போடிநாயக்கனூர், எஸ். சையது முகமது.

✉ ஆஹா.. என்ன ஒரு பாந்தம்! வரவர இதற்காகவே 'கல்கி' வாங்க வேண்டும் என்று கிடந்து மனசு துடிக்கிறதே! (அட்டைப் படத்தைத்தான் சொல்கிறேன்!)

அரசரடி, நெல்லை வி. சிவா.

✉ தூர்தர்ஷனை வேறு வழியின்றிப் பார்த்து துன்புற்றுத் துவளும் கோடிக்கணக்கான பார்வையாளர்களின் உள்ளக் குமுறலை 'எதிரொலி'ப்பதாக இருந்தது, இந்த வார கல்கியின் காலேஜ் கார்னர்.

சென்னை – 75, சிதம்பரம்.

✉ மதத்தைவிட மனிதம் முக்கியமானது. எல்லா மதமும் மனிதனை நல்வழிப் படுத்தவே ஏற்பட்டது என்பதை எல்லோரும் அறியச் சிறந்த உதாரணமாகத் திகழும் அப்துல் கரீமின் செயல்பாடு மெய் சிலிர்க்கச் செய்கிறது!

பாஸ்டின்நகர், வி.பி. மகராசி.

✉ "அன்னிய மனுசங்க நம்ம கையைப் புடிச்சா நமக்கு நடுங்காதுங்களா...?" என்று கேட்ட நம்ம கருப்பாயிப் பாட்டியை நினைத்துப் பெருமைப்படுகிறேன். தற்கால வாலிபர்களும் யுவதிகளும் இந்த வரிகளைப் படித்துப் பார்க்க வேண்டுமே!

வேலூர்–6, எல். கோபாலகிருஷ்ணன்.

✉ 'கரண்ட் பில்லைக் கட்டுப்படுத்தலாம்' எனும் தலைப்பில் வெளி வந்தவற்றைப் படித்தேன். மிகவும் முக்கியமானவையாக இருந்தன.

சிதம்பரம், ஜி. துளசி.

✉ 'தபு'வின் பேட்டி அவரைப் போலவே இனிமையாக இருந்தது. பாராட்டுகள்.

திருச்சி – 17, உஷா முத்துராமன்.

✉ மனிதர்களது எந்த ஒரு செயலிலும் நெகட்டிவ், பாஸிட்டிவ் என்ற இரு பக்கங்கள் இருக்கும். அவற்றுள் பாஸிட்டிவ் பக்கத்தையே பார்க்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியது ரவி பாலாஜியின் 'மனிதர்கள்' சிறுகதை!

நெய்வேலி–3, சு. ஸ்ரீகாந்த்

✉ திரைப்படத் தயாரிப்பைக் காட்டிலும், பத்திரிகைத் துறை மிகவும் கடினமானது – என்ற அனுபவத்தை அப்பட்டமாக ஒப்புக் கொண்ட டி.ராஜேந்தரின் பேட்டி மிகவும் பாராட்டுக்குரியது.

பெங்களூர் – 47, மு. புஷ்பராசன்.


✉ காதல் தோல்வியால் காதலர்கள் உயிரையே விட்டாலும்கூட, காதலின் சக்தி பற்றி அறியாத பல சுயநல அப்பாக்களுக்கு நெத்தியடி தரும் வகையில் 'அப்பாக்கள்' கதையைப் படைத்திருக்கிறார் படுதலம் சுகுமாரன்!

நெய்வேலி, ப. உத்தண்டராமன்.



# சர்க்கரை வியாதிக்கு சிறந்தது

# தெய்வீக மூலிகை மருத்துவம்!



## சர்க்கரை வியாதியின் அறிகுறிகள்

அடிக்கடி சிறுநீர் பிரிதல், பசி, தாகம், உடல்சோர்வு, உடல் எடை குறைதல், கால் குத்தல், ஆண்மைக் குறைவாதல், மயக்கம், கண்பார்வை மங்குதல், நாவறட்சி, புண் ஏற்பட்டால் ஆறாத நிலை போன்றன ஒருவருக்கு தெரிந்தால் சர்க்கரை வியாதி உள்ளதாக கொள்ளலாம். சர்க்கரை வியாதி உடலில் தோன்றுவதற்கு கீழ்க்கண்டவைகள் காரணமாக இருக்கலாம். 1) இன்சுலின் குறைவாக சுரத்தல், 2) பரம்பரை பரம்பரையாக தோன்றுவது, 3) உடலுழைப்பிற்கு தகுந்த உணவும், உணவுக்கு தகுந்த உடலுழைப்பும் இல்லாமை, 4) அடிக்கடி கவலை கொள்வதால் உடலில் உள்ள சுரப்பிகள் நன்கு செயல்படாது இருத்தல் போன்றன. சர்க்கரை வியாதி தோன்ற காரணமாக இருக்கலாம். சர்க்கரை வியாதிக்கு ஆங்கில வைத்திய முறையில் மாத்திரை களைக் கொண்டு நிவர்த்தி செய்ய முயலுதல் 2) உணவு கட்டுப்பாட்டில் இருத்தல் மற்றும் இன்சுலின் ஊசி மூலம் செலுத்துதல் போன்றன சிகிச்சை முறைகளாக உள்ளன. இவைகளில் பின் விளைவுகளும், பக்க விளைவுகளும் தோன்றலாம்.

## உணவு முறை

இந்நோயாளிகள் அவரவர் தேவைக்கு தக்க அளவு 3/4-வயிறு ஆகாரமாக ஒவ்வொரு வேளை உணவையும் உட்கொள்வது நல்லது. உணவில் ராகி, கோதுமை, கம்பு, மக்காச்சோளம் போன்ற தானியங்களை ரொட்டியாகவும், கஞ்சி, கூழ், களி போன்றவையாகவும் அடிக்கடி உபயோகிப்பது மிகவும் நல்லது. தவிர இந்நோயாளிகள் பழங்களில் இனிப்பு இருப்பதால் பழங்களை சாப்பிடக்கூடாது என்ற கருத்து நிலவி உள்ளது. இது தவறாகும். சர்க்கரை வியாதி உடையவர்கள் பச்சையாக சாப்பிடும், பழங்கள், காய்கள், பழ ஜூஸ்கள், Salads போன்றவைகள் தினம் ஏதேனும் ஒருவேளை உணவாக தேவையான அளவு பயன்படுத்தலாம். பழங்களில் 80 சதவீதம் அளவு தண்ணீர் உள்ளதாலும், இதில் உள்ள சக்திகளை முழுமையாக உடல் எளிதில் எடுத்துக் கொள்வதாலும் உடல் சோர்வு, தாகம், கண்பார்வை மங்குதல், நரம்புத் தளர்ச்சி, நாவறட்சி போன்றவைகள் முற்றிலும் மாற்றும் வல்லமை படைத்தவை. கொய்யா, பப்பாளி, சப்போட்டா, வெள்ளரி, இளநீர், மாதுளை, மா, ஆரஞ்சு, தக்காளி, நாவல், தர்பூசணி, வெள்ளரிக்காய், முட்டைக்கோஸ், வெங்காயம், கொத்தமல்லி தழை போன்றவற்றில் இருந்து ஏதேனும் இரண்டு அல்லது மூன்று வகைகளை தேவையான அளவு உட்கொள்ளலாம்.

## உடற்பயிற்சி

தினம் காலை, மாலை 15 நிமிட நேரம் எளிய உடற்பயிற்சிகள் செய்யவும். நடத்தல், குனிந்து நிமிர்தல், உட்கார்ந்து எழுதல், நின்ற இடத்தில் ஓடுதல், குதித்தல், கைகால் விரல்களை நீட்டி மடக்குதல், சைக்கிள் ஓட்டுதல் முதலியன செய்யலாம். இவ்வாறு செய்யும்போது உடல் கழிவுகள் எளிதில் வெளியேறும், உடல் சக்தி பெறும், ரத்த ஓட்டம் அதிகரிக்கும், உடலின் எல்லா சுரப்பிகளும் நன்கு இயங்கும். மேலும் காலை எழுந்தவுடன் இரண்டு டம்ளர் சாதாரண தண்ணீர் குடிக்கவும். கிடைக்கும்போது மழைநீர் உபயோகிக்கலாம். இது மிகவும் நல்லது. இதில் எல்லாவிதமான தாது உப்புகளும் உள்ளன. இன்சுலின் உபயோகித்துக் கொண்டிருக்கும் நிலைமையில் உள்ள சர்க்கரை நோயாளிகள்கூட மேற்கூறிய தெய்வீக மூலிகைகளையும், இயற்கை உணவுகளையும், உடற்பயிற்சிகளையும் பின்பற்றினால் மீண்டும் சீரான உடலியக்கத்தினை பெற முடியும். இன்சுலின் உபயோகிப்பதையும் தவிர்க்க முடியும்.

## தெய்வீக மூலிகை முறை

சர்க்கரை வியாதியினை போக்க தெய்வீக மூலிகை முறையில் சக்திக்குரிய வேப்பிலை, சிவனுக்குரிய வில்வம், விஷ்ணுக்குரிய துளசி, விநாயகருக்குரிய அருகம்புல், வெற்றிலை, கங்கைக்குரிய மாவிலை ஆகியவைகளை பறித்து வந்து வெயிலில் உலர்த்தி பொடி செய்து சலித்த பின் எல்லாவற்றையும் ஒன்றாக சம அளவுகளில் கலந்து வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து இரண்டு டீஸ்பூன் அளவு எடுத்து சாதாரண தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினம் காலை, இரவு ஆகிய இரண்டு வேளையும் உட்கொள்ளவும். இவ்வாறு சுமார் ஆறு மாதம் தொடர்ந்து உபயோகித்தால் பூரண குணம் பெறலாம். இதில் பின் விளைவுகளும், பக்க விளைவுகள் எதுவும் கிடையாது. மேற்கூறிய மூலிகைகள் எல்லாம் கற்பக விருட்சம் என்று சொல்லத்தக்கவையாகும். ஒவ்வொன்றும் அவ்வளவு சிறப்புகள் வாய்ந்தது. இவைகள் ரத்தம் சுத்தம் செய்யும், நரம்புகளுக்கு சக்தியை கொடுக்கும், சுரப்பிகளை நன்கு இயங்க வைக்கும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்யும்.

இந்நோயாளிகள் எந்தரகமான மாமிச உணவுகளையும் தவிர்க்க வேண்டும். தவிர ரசாயனம் கலந்த பானங்கள், (Soft Drinks) போன்றன, சர்க்கரை கலந்த உணவுகள், Sweets (Halwa, Cake,) போன்றவையும், புகைத்தல், மது வகைகள் போன்றன தவிர்க்க வேண்டும். அவசரத் தொந்தரவுகளுக்கு மட்டும் இத்துடன் ஆங்கில வைத்தியம் செய்து கொள்ளலாம். நீரிழிவு நோயாளிகள் இதை சரியாக கவனிக்காமல் இருந்து விட்டால் நாளடைவில் இருதயக் கோளாறு, சிறுநீரகக் கோளாறு, இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி கண்பார்வை குறைதல் போன்றவைகள் ஏற்படலாம். *மேலும் ஆலோசனைக்கு -*



*தெய்வீக மூலிகை வைத்தியர்கள்*

தலைமை முகவரி : **Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o.Dr.C.K. மாணிக்கவாசகர்**

P.B. No: 30. No: 3, திருநாத முதலி நகர், காலேஜ் எதிரில், திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8 | ✆ 6424285, 6427638

**Singapore Enquiry : Mrs. Renuka, Blk 101, #04, -176, Jurong East Street-13, Singapore - 600 101. ✆ : 0065 - 5621218**

**குறிப்பு:** சென்னை, வேலூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர் ஒசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம்-விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்

**தகவல்:** டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 23 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு **D.D.** அல்லது **M.O.** அனுப்பவும்.

**7-ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589**

Ruchi

# ருசி ஊறுகாய்கள் வீட்டில் செய்த சுவை போல




**RUCHI AGRO PRODUCTS PRIVATE LIMITED**

50, GIRIAPPA ROAD, CHENNAI - 600 017. PH. 8269290, 8269438, 8241348



இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பொக்கிஷம்

## சோ எழுதிய மஹாபாரதம் பேசுகிறது

வியாச பாரத மூலத்தை ஆழ்ந்து படித்து, அதிலுள்ள பல விஷயங்களை மிகவும் துல்லியமாக எழுதியுள்ளார். மஹாபாரத கதாபாத்திரங்களையும், நிகழ்ச்சிகளையும்–இன்றைய நிகழ்வுகளோடு ஒப்பிட்டு எழுதியிருப்பது மிகவும் அபாரம். இதுவரை பலரும் கேட்டிராத–பல செய்திகளை இதில் காணலாம். உயர்ந்த காகிதத்தில், தரமான பைண்டிங்கில், ஏராளமான படங்களுடன் – ஒரு நேர்த்தியான அட்டைப் பெட்டியில் என்றென்றும் பாதுகாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**இரண்டு பாகங்கள் – விலை ரூ. 500/-**

முதற் பதிப்பு வெளிவந்த நாற்பதே நாட்களில் தீர்ந்து போகும் நிலையில் இருக்கிறது. மறுபதிப்பு வெகு விரைவில் வெளிவர இருக்கிறது.



## அல்லயன்ஸ் கம்பெனி

நூற்றாண்டை நெருங்கும் முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்
244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்,
சென்னை – 600 004. போன்: 4941314

தமிழகத்திலுள்ள அனைத்து ஹிக்கின்பாதம்ஸ் கடைகளிலும் மற்றும் கோவை - ராஜவீதியில் விஜயா பதிப்பகத்திலும் கிடைக்கும்.

**காதில் விழுந்தவை**

# லோக்கலுக்கு நாலு! ரைடு பார்ட்டிக்கு நாலு!

● சமீபத்தில் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து ஒயின் ஷாப் உரிமையாளர்களின் கூட்டம் சென்னையில் நடந்தது. கூட்டத்தில் ஒரே புலம்பலாம். "லட்ச லட்சமாகக் கொட்டி, கடை எடுத்திருக்கிறோம். அவனவன் வந்து ஐந்து, ஆறு (5000, 6000) என்று பிடுங்கிக் கொண்டு போகிறான். கடைக்குப் பக்கத்தில் சாப்பிட (குடிக்க!) வுட மாட்டேங்கறாங்க... அப்புறம் எப்படித்தான் போட்ட பணத்தை எடுப்பது?" என்று கோரஸ். "நாங்க மேல வரையும் போக மாட்டோம். லோக்கலுக்கு (போலீஸ்) நாலும், ரைடு பார்ட்டிக்கு நாலும் மாதம் ஒரு முறை கொடுத்தா போதும். லோக்கலுக்கு பவரே கிடையாது. ஆனா பழக்க தோஷம், கொடுத்துடுங்க" என்று நிர்வாகிகள் ஆறுதல் சொல்லியிருக்கிறார்கள். இது தவிர போலி சரக்கு விற்பதைக் கண்டு கொள்ளாமல் இருக்க தாசில்தாருக்கு ஆயிரமும், அவர் பியூனுக்கு நூறு ரூபாயும் கொடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்ச நாட்களில் 'மாமூல்' விதிகளை அச்சடித்தே கொடுத்து விடுவார்கள் போலிருக்கிறது.

● "பொன் விழா நிறைவின்போது தமது அலுவலகத்தில் சுதந்தரக் கொடி ஏற்றாமல் பா.ஜ.க அரசை எப்படிக் கவிழ்ப்பது என்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார் ஜெயலலிதா. சாதி பேதமின்றி எல்லா அலுவலகங்களிலும் தேசியக் கொடி ஏற்றியிருக்கிறார்கள். முன்னாள் முதல்வர் மட்டும் ஏன் கொடி ஏற்றவில்லை? சுதந்தரத் திருநாள் ஜெ.வுக்கு இல்லையா? ஜெ.விடம் இன்னும் பல தவறுகள் இருக்கின்றன. இதைக் சொன்னால் திருந்துவாரா?" இப்படிக் கேட்டிருக்கிறது, "தமிழ்நாடு செய்திகள்" என்ற பத்திரிகை. இதில் என்ன விசேஷம் என்கிறீர்களா? இந்தப் பத்திரிகையை நடத்துவது வளர்ப்பு மகன் சுதாகரன் ரசிகர் மன்றம்!

● சென்னை மேற்கு மாம்பலத்தில் ஈஸ்வரன் கோவில் தெருவில் கோதண்ட ராமர் கோயிலுக்குச் சொந்தமான பெரிய குளம் இருக்கிறது (இருந்தது!) சாலையை விரிவு படுத்துகிறோம் என்ற பேரில் குளத்தைச் சுருக்கி மதில் சுவர் எடுத்து விட்டார்கள். மண்ணை நிரப்பி கடைகள் கட்டி விற்று விட ஏற்பாடு நடக்கிறதாம்! இதற்குப் பின்னாலும் அந்தச் சைதைப் பிரமுகர்தான் இருக்கிறார். எல்லா சுட்டு விரல்களும் அவரைத்தான் காண்பிக்கின்றன. சிங்காரச் சென்னையின் தந்தை இந்த விவகாரத்தை விசாரித்து ஆவன செய்வாரா?

● தமிழக அரசின் டைப்பிஸ்ட், உதவியாளர் போன்ற கீழ்நிலைப் பதவிகளில் டிரான்ஸ்பர் செய்வதற்கான அதிகாரம் இலாகா தலைவர்களுக்கு உண்டு. ஆனால் இப்போது அந்த அதிகாரத்தையும் அமைச்சர்கள் எடுத்துக் கொள்கிறார்களாம்! சமீபத்தில் போக்குவரத்து மற்றும் கூட்டுறவுத் துறைகளில் செய்யப்பட்ட டிரான்ஸ்பர்கள் அமைச்சர்களின் நேரடித் தலையீட்டின் கீழ் செய்யப்பட்டன என்று சொல்கிறார் ஊழியர் சங்கத் தலைவர் ஒருவர். அதுவும் பண நடமாட்டம் அதிகமுள்ள ஆர்.டி.ஓ அலுவலகங்களில் உள்ள ஊழியர்கள் தங்களை வேறு ஏதேனும் 'டம்மி' அலுவலகங்களுக்குத் தூக்கி அடிக்காமல் இருக்க மேலிடத்திற்கு 'அழ' வேண்டுமாம்! லஞ்சம் சம்பாதிக்க லஞ்சம்!

— தில்லப்பா



தமிழக அரசு, தனது லாட்டரிச் சீட்டு விற்பனையை அதிகப்படுத்த பல வழிகளில் இறங்கியுள்ளது. இதோ நம் பங்குக்குச் சில ஆலோசனைகள்!







ஒவ்வொரு பரிசுச் சீட்டுடனும் ஒரு வெள்ளி நாணயம் இனாம். நூறு சீட்டுகள் வாங்கினால் வைர மோதிரம்! அரசுக்கு ஸ்பான்சர் கிடைப்பதிலா பஞ்சம்?



# தொலைக்காட்சி லாட்டரி




ஒரு சீரியலுக்கு ஒரு கதை. ஒவ்வொரு சீட்டிலும் கதையின் ஒரு வரி. முழுக் கதையையும் அறிய மொத்த சீரியலையும் வாங்க வேண்டி இருக்கும்.

பி.கு: ஏதாவது நடிகையின் கதை என்றால் அதிகம் விற்பனை.






– குல்லூ

# கூப்பனை அனுப்பிட்டீங்களா?




கல்கி 2-8-98 இதழுடன் விவேகானந்தா இன்ஸ்டிட்யூட் இணைந்து வழங்கியிருந்த இலவச இணைப்பைப் படித்தீர்களா?

இலவச இணைப்பைப் படித்து முடித்த வாசகர்கள் பலர் அத்துடன் இடம் பெற்றிருந்த கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பி விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேர்ந்து பயிற்சி பெறத் துவங்கி விட்டனர்.

**நீங்கள்**
**கூப்பனை**
**அனுப்பிவிட்டீர்களா?**

இதுவரை நீங்கள் அனுப்பவில்லையெனில் 15-9-98க்குள் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பி பாடங்களுடன் பயனுள்ள பரிசினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மறவாதீர்:
பரிசுச் சலுகை 15-9-98 வரை மட்டுமே!


உங்களது வெற்றியின் விலாசம்

**VIVEKANANDA INSTITUTE**

9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை-600017.

உயர் ரக மதுரை சுங்குடி புடவைகள்

**RAMACHANDRA SAREES**



37-B, Arya Gowder Road,
Postal Colony 3rd Street corner,
West Mambalam,
Chennai - 33.
Ph : 4896532

வேலை நேரம் : காலை 10 மணி முதல் இரவு 8.30 மணி வரை.

உணவு இடைவேளை இல்லை.

எங்களிடம்: பெங்கால் காட்டன், வெங்கடகிரி மற்றும் பத்திக் காட்டன் கிடைக்கும்.

வழங்குபவர்:
ராமச்சந்திரா சாரீஸ்,
20/B. பழையகுயவர்பாளையம் ரோடு,
மதுரை -9

## கொசுக்களின் எதிரி; ஆரோக்கியத்தின் நண்பன்!

இனிமேல் இல்லை கொசு தொல்லை
உங்கள் வீட்டு ஜன்னல் மற்றும் பாத்ரும் வென்டிலேஷன்களுக்கு NETLON கொசுவலையைப் பொருத்துங்கள்.

MURUGAPPA GROUP

**NETLON**
**INSECT SCREEN**

இது NETLON INDIA-வின்
(A Division of Parrys Co, Ltd)
தரமான தயாரிப்பு

உத்திரவாதம் உண்டு

**B.B. Marketing,**
28, Mahatma Gandhi Salai,
Kumaran Nagar, Padi,
Chennai - 600 050.
Phone : 624 8273 (24 Hours)

Authorised Service Centre of Netlon India



• இஷா

● மானேஜர்களுக்கு கல்தா கொடுக்கும் காலம் இது! இந்த வாரம் தம் மானேஜருக்கு 'கல்தா' கொடுத்தவர் கார்த்திக். பிரச்னை என்ன? என்று விசாரித்தால் "பிராப்ளமே இல்லை. அதான்" என்கிறார்கள் இரண்டு பேரும் தமாஷாக. எது எப்படியோ? இப்போது கார்த்திக்குக்கு போறாத காலம் என்று பேசிக் கொள்கிறார்கள் கோலிவுட் ஜோஸியக் காரர்கள். பழைய குருடி கதவைத் திறடி கதையாக மீண்டும் கால்ஷீட் குளறுபடியில் இறங்கியிருக்கிறார் கார்த்திக். வாரத்தில் இரண்டு நாட்கள் உடல் நிலை சரியில்லை என்று ஷூட்டிங்கை கேன்சல் பண்ணி விடுகிறாராம்! ஹூம்!



• பவதாரிணி

# வருகிறது 'சுதந்தரம்'!

● பாராளுமன்றத்தில் காலடி வைத்தாலும் வைத்தார், தன்னை வளர்த்துவிட்ட கோடம்பாக்கத்தின் பக்கம் எட்டிக்கூடப் பார்க்க மாட்டேன் என்கிறார் ராமராஜன். அவர் நடித்து, பாதியில் நிற்கும் 'அண்ணன்', 'பூ மனமே வா' இரண்டு படங்களும் அண்ணன் ராமராஜனின் கால்ஷீட்டிற்காகக் காத்திருக்கின்றன. அதற்காக, உடன் நடித்த நடிகையும், வேறு படத்தில் நடிக்காமல் தன் வாழ் நாளை இந்தப் படங்களுக்காகத் தியாகம் செய்ய முடியுமா என்ன? "பூ மனமே வா" படத்தில் ராமராஜனுக்கு ஜோடியாக நடிக்கும் கன்னடத்திலிருந்து வந்த லட்சுமி பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். ஒரு தகவலும் இல்லை. சொந்த ஊருக்கு மூட்டை முடிச்சைக் கட்ட ஆரம்பித்தார். அந்த மூட்டை முடிச்சை வைத்துவிட்டு அம்பாசமுத்திரத்திற்கு வா என்று அழைப்பு வந்தது. போனார். அதியமானுக்கு ஜோடியாக 'தலைமுறை' படத்தில் நடித்து விட்டு சந்தோஷமாகத் திரும்பி வந்தார். துவாரகிஷ் டைரக்ஷனில் மூன்று கன்னடப் படங்களில் நடித்திருக்கும் லட்சுமி, இனி சென்னையை விட்டு நகர்வதாக இல்லையாம்.

● இந்திய சுதந்தரப் பொன்விழா ஆரம்பித்த போது 'வந்தே மாதரம்' என்ற பெயரில் ஆல்பம் வெளியிட்டு இசையுலகிற்குப் பெருமை சேர்த்தார் ஏ.ஆர். ரஹ்மான். பொன்விழா முடியும் தருவாயில் 'சுதந்தரம்' என்கிற பெயரில் ஆல்பம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார் இளையராஜாவின் வாரிசு பவதாரிணி. ஏழு பாடல்கள் அடங்கிய இந்த ஆல்பத்தின் இசையமைக்கும் பணியை பவதாரிணியே செய்திருக்கிறார்! வெறும் ஆடியோவாக மட்டுமில்லாமல் விஷுவலாகவும் படம் பிடித்திருக்கிறார்கள், 'சுதந்தரம்' ஆல்பத்திற்காக. இதுவரை தனியார் ஆல்பங்களுக்குப் பாடல்கள் எழுதாத வாலி முதன் முறையாக 'சுதந்தரம்' ஆல்பத்தின் ஏழு பாடல்களையும் எழுதியிருக்கிறார்!

● சிம்ரனின் மார்க்கெட்டை ஒரு குலுக்கு குலுக்கிப் பார்ப்பார் என்கிறார்கள் இஷாகோபிகரைப் பற்றிப் பேசுபவர்கள். 'என் சுவாசக் காற்றே'வில் அரவிந்த சாமியுடன் நடித்துக் கொண்டிருப்பவர், இரண்டு நாட்கள் ஜாலியாக சென்னையை வலம் வந்திருக்கிறார்-ஷாப்பிங்! "ஏன் மேடம், ஷூட்டிங் கேன்சலா?" என்றால், "அரவிந்த சாமிக்கு ஜலதோஷம்" என்று பதில். அதனால் ஷூட்டிங் கேன்சலாம். இரண்டு நாள் ஷாப்பிங்கில், ஒரு ஸ்பென்சர் பிளாசா அளவுக்குப் பொருட்களை வாங்கிக் குவித்து விட்டாராம்!

— மஹரந்த்

'கிட்டத்தட்ட முப்பது வருஷமா தொடர்ந்து நடிச்சுக்கிட்டு வரேன். மரியாதை, நல்ல பேனர், படம் ஓடும்கிற நம்பிக்கை - இவைதான் முக்கியமாகப் படுது. சம்பளத்திலேயெல்லாம் நான் கறாராக இருப்பதில்லை. சில சமயம் என் கேரக்டர் பற்றிப் பெரிசா சொல்லிட்டு, கடைசியில் டம்மியாக்கி விடுவதும் உண்டு. கண்டுக்கிறதில்லை. தனி வாழ்க்கையிலேதான் எதிர்நீச்சல் போட்டுக்கிட்டிருக்கேன். திரையுலகிலும் அப்படிப் போடத் தெம்பில்லே! ரொம்ப வடிகட்டியும் பாத்திரங்களைத் தேர்ந்தெடுப்பதில்லை. அவ்வளவு பொருளாதாரத் தேவை இருக்கு'' என்ற ஸ்ரீவித்யாவைக் கொஞ்சம் ஆச்சரியமாகப் பார்த்தோம். புரிந்து கொண்டார்.

"என்ன ஒரு massive levelல் வழக்கை நடத்திக்கிட்டிருந்தேன்றது எனக்குத்தானே தெரியும்? யானைக்குத் தீனி போடுவது போல் செலவாச்சு'' என்ற பெருமூச்சைத் தொடர்ந்து இரண்டு சந்தோஷங்களும் வெளிப்படுகின்றன.

இவர் உழைப்பில் கட்டிய மகாலிங்கபுரம் வீட்டிலிருந்து இவரை வெளியேற்றிய கணவர், வேறொரு பெண்ணுடன் அங்கு வசிப்பதுடன், பங்களாவைப் படப்பிடிப்பிற்கும் விட்டு சம்பாதிக்கத் தொடங்க, அவர் மீது வழக்குத் தொடர்ந்தார் ஸ்ரீவித்யா. 'அத்துமீறிய ஆக்கிரமிப்பு' என்று ஜார்ஜின் செயலைக் கண்டித்திருக்கும் நீதிமன்றம், அவர் ஸ்ரீவித்யாவுக்கு நஷ்டஈடு தர வேண்டும் என்றும் தீர்ப்பளித்திருக்கிறது.

கணவரே தாம் இன்னொரு பெண்ணுடன் வசிப்பதை நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டதால் (ஒரு வழியாக) விவாகரத்தும் கிடைத்து விடும் என்று நம்புகிறார்.

**"விவாகரத்து கிடைத்ததும் மறுமணம் செய்து கொள்ளும் ஐடியா உண்டா?"**

"மறுமணம் என்ற சாப்ஸை இன்னும் ஒதுக்கிடலேன்னாலும், வாழ்க்கையில இந்த கட்டத்தில் அது அவசியமான்னும் சில சமயம் தோணுது. நான் அதிகம் திட்டமிடுவதில்லை சார். ஏன்னா அப்படி நான் திட்டமிட்ட எதுவுமே ஒர்க் அவுட் ஆகிறதில்லை. இரண்டு வருடங்கள் நடித்துவிட்டு பிறகு சினிமாவிலிருந்து ஒதுங்கிடணும், கல்யாண வாழ்க்கையிலே செட்டில் ஆகணும்னு கணக்குப் போட்டிருந்தேன். ஏறுமாறாப் போச்சு. எங்கம்மா (எம்.எல்.வி) பெரும் விபத்தில் சிக்கி ஒன்றரை வருடங்கள் படுக்கையில் இருக்கும்படி ஆகிப் போக, என் சம்பாத்தியம் வீட்டுக்கு அவசியம்னு ஆயிடுச்சு.''




**''பல வருடங்களுக்கு, கமலைத் திருமணம் செய்து கொள்ளவிருந்ததாக வந்த வதந்தி குறித்து?''**

"பெயரை வெளிப்படையா சொல்லலேன்னாலும் நிறைய நியூஸ் இது பத்தி வந்தாச்சு. என் வாழ்க்கையில் முடிஞ்சு போன காதல் தோல்விக் கதை இது. புத்துயிர் தர விருப்பமில்லை, ப்ளீஸ்."

**"இத்தனை வருடத் தனி வாழ்வில் யாராவது மறுமணம் செய்து கொள்ள**

முன் வந்ததுண்டா?''

''துணையாயிருப்பதாகச் சொன்னதுண்டு. ஆனா I have not made myself available"

தனி வாழ்க்கை பழகிடுச்சு. ஒரு டிரைவர் (காரோட்டணும், நீச்சல் கத்துக்கணும் என்ற இரண்டும் என் தீவிர லட்சியங்கள். ஆனா ஒரு பயம் வந்து தொலைச்சு இரண்டையுமே உருப்படியா கத்துக்க முடியாமப் போச்சு) ஒரு குக், இவங்க போதும். சின்ன வயசிலிருந்தே எனக்கு சிநேகிதிகள் அதிகம் கிடையாது. அப்படி வளர்த்துட்டாங்க. தவிர என் சம்பந்தப்பட்ட முடிவுகளை எப்பவும் நானே எடுத்துப் பழக்கம். மற்றவங்க என்னைப் புரிஞ்சுப்பதைவிட, தன் எண்ணங்களைக் கொட்ட மட்டுமே தயாரா இருக்காங்கன்ற எண்ணம் ஆழமா மனசிலே பதிஞ்சிடுச்சு.''

**''வருங்கால ஆசை?''**

''டான்ஸ் ஸ்கூல் ஆரம்பிக்கணும்னுதான். போர்டிலே என் பெயரைப் போட்டுக்கிட்டு மற்றவங்களை விட்டு சொல்லித் தரச் சொல்ல மாட்டேன். அது ஒரு இருபத்து நாலு மணி நேர வேலைன்னு நினைக்கிறேன். இதற்கு முதல் கட்டமா நான் நடிக்கிற படங்களைக் குறைத்துக் கொண்டு வரேன்.''

''இந்தக் கால நடிகர்கள்?''

''கரண், பிரசாந்த், விவேக் இப்படி எல்லாருக்குமே நிறைய விஷய ஞானம் இருக்கு. நாங்கனெல்லாம் மூணு ஷிஃப்டெல்லாம் நடித்ததுண்டு. விஜய், ''சாரி சார். ஒன்பது மணிக்கு மேலே நோ ஷூட்டிங். என் உடம்பையும் கவனிச்சுக்கணுல்லையா?''ன்னு கிளம்பும்போது, எவ்வளவு அழகா இவங்க வாழ்க்கையை திட்டமிடறாங்கன்னு ஆச்சர்யமா இருக்குது'' என்கிறார்.

# வாழ்க்கை பழகி விட்டது!

ஸ்ரீவித்யாவின் இதுவரை நிறைவேறாத ஆசை: தாயாவதுதான்! கணவன் எப்படியோ, தனக்கு ஒரு வாரிசு பிறந்திருக்கலாமே என்ற ஆதங்கம் இன்னமும் உண்டாம்.

**— ஜி.எஸ்.எஸ்.**



''நமக்குக் கல்யாணம் நடப்பதாகக் கனவு கண்டேன்!''

''கனவுகளை நினைக்கக் கவலைப்படற வழக்கத்தை விட்டொழின்னா, கேட்டாத்தானே!''

— எஸ். மோகன்

# சேலை கட்டிய சதாம் உசேன்

படுக்கையில் சாய்ந்தபடி விட்டம் பார்த்துக் கொண்டிருந்தேன். கைக்கெட்டும் தூரத்தில் அந்தக் கடிதம் படபடத்துக் கொண்டிருந்தது. நூறு முறை படித்திருப்பேனா? அவன் எழுதியது. பாவம், வருந்தி வருந்தி எழுதியிருக்கிறான், என்னவோ பெரிய பாவம் செய்து விட்டது போல் மன்னிப்பு வேண்டி.

பள்ளி நாட்களில் கூட இம்போஸிஷன் எழுதியதில்லை நான். சர்வீஸில் ஒருமுறை கூட மெமோ, எக்ஸ்ப்ளனேஷன் என்று ஆனதில்லை. உனக்கு எழுதுகிறேன் என்றால் நான் செய்தது தப்பு என்று உணர்வதால். மன்னித்துக் கொள். சத்தியமாக என்னுள் கள்ள நினைப்புகள் இல்லை. திட்டமிட்டு எதுவும் செய்யவில்லை. தம்மிடையேயான புனிதமான காதல் என்கிற கண்ணாடியில் அழுக்குப் பட்டது போன்றதுதான் அந்தச் செயல் என்று இன்னும் நம்புகிறேன். நெஞ்சார்ந்த மன்னிப்பு மூலம் துடைத்துக் கொள்ளலாம் என்கிற எண்ணத்தில் எழுதுகிறேன். அந்தக் கண்ணாடியே உடைந்து விட்டதாக நீ முடிவு செய்து விடாதே. நீ என் ஆன்மாவில் எவ்வளவு தூரம் ஐக்கியமாகி விட்டாய் என்று உணர்வதால் இவ்வளவு பதறுகிறேன். மூன்று முறை போனில் பிடிக்க முயன்றேன். நான்கு முறை சந்திக்க வந்தேன். நீதான் பிடியே தரமாட்டேன் என்கிறாய். நான் அயோக்கியன் என்றோ இனிமேல் வேண்டாம் என்றோ முடிவே செய்து விட்டாயா? இனிமேல் கண்ணியம் காப்பேன் என்று உறுதி தருகிறேன்...

படிக்கப் படிக்க கண்களில் நீர் முட்டுவதும், உள்ளுக்குள் எல்லாவித உணர்வுகளும் கிளர்வதும் நெகிழ்வதுமான போராட்டம் இன்று கொஞ்சம் மட்டுப்பட்டிருந்தது. நிச்சயமாய் அவனிடம் அப்படிப்பட்ட நோக்கம் திட்டமிடப்பட்டிருக்க வாய்ப்பு இல்லை. தற்செயலாக அமைந்த ஒரு கணம். உட்கார்ந்த நிலையில் இருந்து எழுந்திருக்கையில் நான் தடுமாறி விழப்போனபோது தடுப்பதற்காகத்தான் பிடித்தான். அவன் கைகள் என் மேல் பட்டிருந்த இடங்கள், நான் சுதாரிப்பதற்கு ஆன சில விநாடிகள், அந்த மாலைக் கறுக்கல், நாங்கள் அதுவரை பேசிக் கொண்டிருந்த கல்யாண விஷயம், (அன்று நான் புது உடையில் அதிகப்படி அழகாய் இருப்பதாகச் சற்று முன்பு வரை மூன்று நான்கு முறை சொல்லியிருந்தான்) எல்லாவற்றின் அவசரக் கலவை அவனுள் ஏதோ ரசாயன மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அந்த மாற்றம், திடீரென்று இறுகத் தொடங்கிய அவன் கைகள் மூலம் என்னுள் பரவ, நான் திடுக்கிட்டு நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தபோது நான் இதுவரை பார்த்திராத ஒரு நோக்கு, கொஞ்சல், கெஞ்சல், அழைப்பு என்று பலப்பல! ஒரே உதறலாக உதறி விட்டு "ச்சீ" என்கிற ஓரெழுத்தை மட்டும் வெறுப்புடன் உச்சரித்து விட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்து வந்து விட்டேன்.

மறுநாள் இரண்டு முறை போன் செய்தான். "ரொம்ப சாரி. நான் வேண்டுமென்றே..." என்று அவன் பேச ஆரம்பிக்கும் போதெல்லாம் நான் சட்டென்று போனை வைத்து விட்டேன். எனக்குக் குற்ற உணர்வின் உறுத்தல் இருந்தது. அப்படி என்ன செய்து விட்டான் என்று நான் பெரிய 'இவன்' மாதிரி நடந்து கொண்டேன்? ச்சீ என்று எவ்வளவு வெறுப்பு காட்டிச் சொன்னேன். பாவம் துடித்துப் போயிருப்பான்.



சொல்லப் போனால் நான்தான் அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவன் எவ்வளவு பெரிய ஆள். அது நம்ம ஆளு என்று ஆன பிறகுதான் நான் கண்ணாடியில் அழகாகத் தெரியவே ஆரம்பித்தேன். என்னிடம் என்னத்தைக் கண்டு இப்படிச் சுத்திச் சுத்தி வர்றீங்க என்று ஆரம்பக் காலங்களில் கேட்ட போது, 'சும்மா அலட்டிக்காதே' என்றான் போலித்தனமில்லாமல்.

உண்மையில் அவனுக்கு நான் ஈடே கிடையாது. என்ன உயரம்! கொஞ்சம் நிறம் கம்மி என்றாலும் கூட சதை போடாத ஆம்பளைத்தனமான தோற்றம். கம்ப்யூட்டர் இன்ஜினியர். சதா சிந்தனையில் இருப்பது மாதிரியான கண்கள். ஒழுங்காக சீவப்படாமல் எப்போதும் முன் நெற்றியில் கிடப்பதால் ஒரு குழந்தைத்தனத்தை முகத்துக்குத் தரும் முடி. என் பிரண்ட்ஸ் அவனை மெகா சைஸ் அமுல் பேபி என்றுதான் சொல்வார்கள்.

அவனிடம் எனக்குப் பிடித்த பல விஷயங்களில் ஒன்று தெளிவான கள்ளத்தனமில்லாத கபட நோக்கமற்ற பார்வை. நான் படுத்துகிற பாட்டுக்கெல்லாம் வளைந்து கொடுக்கும் போது கூட ஒரு சின்சியாரிட்டி. ''ஏம்ப்பா இப்படி விறைப்பாகவே இருக்கறே? • கொஞ்சம் ரிலாக்ஸ்டா சிரியேன்'' என்று சீண்டினால் கூட உன் பக்கத்துல இருக்கும் போதுதான் நான் அதிக டென்ஷனாகவே ஃபீல் பண்ணுகிறேன் என்பான். ஏன் என்று முறைத்தால் ஒரு பயம்தான் என்று சொல்லும் போது நிஜமாகவே கொஞ்சம் பயக்குறி தெரியும்.

எனக்கு ஈகோ பிய்த்துக் கொண்டு சிறகடிக்கும். அந்தத் திமிரில்தான் என் அனுமதி கோராமல் எப்படி என்னைத் தொடலாம் என்று கோபம் கிளர்ந்து கொண்டதோ?

ஆனால் காதலில் தொடுதல் என்பதை ஒரு பகுதியாக அனுமதிக்கலாமா? அனுமதிக்கலாம் என்றால் எவ்வளவு தூரம்? இப்படிக் கேள்விகள் எழுவதே வரம்பு மீறலின் முதல்படி என்றாகி விடாதா? வரம்பு என்பதை யார் தீர்மானிப்பது? முழுதாய் ஒப்படைத்தல் என்பதெல்லாம் நம்பிக்கையின்பாலா, கல்

டெ. நாயகி

யாணம் என்கிற அங்கீகாரத்தின் அடிப் படையிலா? அப்படிப் பார்த்தால் காதல் என்பதே ஒரு சார்பு உணர்வுதானா? அங்கீ காரத் தேடல்தானா? தனித்தன்மை அற் றதா?

படுக்கையில் புரண்டு படுத்தேன். ஏன் இப்படி எல்லாம் எல்லையில்லாமல் கற் பனை செய்கிறேன் என்று தலையில் தட்டிக் கொண்டேன். ஒருவேளை அந்த மாதிரி யான அதீத கற்பனை உள்ளூர நன்றாக இருக்கிறதோ என்கிற எண்ணம் வந்தபோது உடல் முழுதும் ஓர் உஷ்ண அலை பரவி அடங்கியது.

அப்படிப் பார்த்தால் நான் எத்தனை முறை அவன் மீது தற்செயலாகப்பட்டி ருக்கிறேன். தற்செயலாகப் படுவது போல் வேண்டுமென்றே கூடச் சில சமயம். ஒரு முறை அவனுடைய புஜம் எவ்வளவுதான் கடினமாக இருக்கிறது என்று பார்க்கும் மூடு வந்தது. வேண்டுமென்றே வம்பு வளர்ப்பது போல் பேசி, முஷ்டி மடக்கி சட்டென்று ஒருமுறை குத்திப் பார்த்து, 'அம்மா' என்று கை சிவந்து 'அப்பா! எருமை மாடு மாதிரி

''கணவனும் மனைவியும் ஒரே ஆபீசுல வேலை செய்யறது பெரிய இடைஞ்சல்!''

''ஏன்?''

''வீட்டுக்குப் போனதும் ஆபீசுல இன்னிக்கு ஒரே வேலைன்னு சொல்லிட் டுப் படுத்துக்க முடியாது பாருங்க!''

– அம்பை தேவா



இறுகிப் போயிருக்கீங்க' என்று சமாளித்தது ஞாபகம் வந்தது. அப்போது கூட அவன் என் கையினைத் தடவித் தர முயன்ற தில்லை. பிரியமான தாத்தா செத்துப் போன துக்கத்தை அவனிடம் பகிர்ந்து கொண்டிருக்கும் போது கட்டுப்பாடு மீறிக் கதறி அழுத போது கொஞ்சம் ஆறுதலாக என் கைகளை அழுத்திக் கொள்ள மாட் டானா, குறைந்தபட்சம் தலையையாவது கோதி விட மாட்டானா என்று எவ்வளவு எதிர்பார்ப்பும் ஏக்கமும் இருந்தது!

என்னிடம் இவ்வளவு கள்ளத்தனங் களை வைத்துக் கொண்டு அவனைப் போய்க் கஷ்டப்படுத்தி விட்டேனே என்ற எண்ணமே அவன் குரல் கேட்ட மாத்திரத் தில் கண்களில் நீர் பெருக வைத்து, தொண் டையை அடைத்து விட்டது. அதுவே ஒவ் வொரு முறை அவனைப் பார்த்த கணத்தி லும் அந்த இடத்திலிருந்தே ஓட வைத்தது. அது வேறுவிதமாய் எடுத்திருக்கிறது.

யோசித்துப் பார்த்தால் சிரிப்பு வந்தது. அவன் அன்று என்னதான் செய்திருக்க முடியும் என்ற தைரியத்தில் நான் அலட்டிக் கொண்டேன். கிட்டத்தட்ட பொது இடம். வெகு அருகில் இல்லாவிட்டாலும் கொஞ் சம் தள்ளி நிறையப் பேர் ஆங்காங்கு இருந் தார்கள். என்னைப் பிடித்த கைகள் இறுகிய மாத்திரத்தில் அவன் முகத்தில் கொஞ்சம் காமம் விரிய ஆரம்பித்தது உண்மைதான் என்றாலும் கூட அதற்கு மேல் என்ன செய் திருக்க முடியும்? நான் 'ச்சீ' என்று உதறி விடும் அளவு என்ன எல்லை மீறியது?

காதலுக்கு யாராவது இலக்கணம் எழுதி விதிமுறைகள் வகைப்படுத்தியிருக்கிறார் களா, என்ன? கல்யாணத்திற்குத்தான் இருந் தது. அதிலும் இப்போதெல்லாம் ஏகக் குழப் பங்கள், திருத்தங்கள் என்று ஆகிவிட்டது. கல்யாணத்துக்கு முதல் நாளே ரிசப்ஷன் என்று ஜோடியாய் நிற்க வைத்து விடுகிறார் கள். மரபுக் கவிதை மாதிரியான கல்யாணத் துக்கே இத்தனை விதி தளர்த்தல்கள் வந் தாச்சு. காதல் புதுக் கவிதை மாதிரிதானே? எந்தக் கட்டுக்கும் அடங்காமலும் அழகு நோக்கி அடங்கியும் உணர்வு வெளிப்பாட் டுக்கு முதலிடமும் மற்ற அங்கீகாரங்களுக்கு இரண்டாமிடமும் தரும் விஷயம்தானே காதலும் புதுக்கவிதையும். அதில் விதிகளும் எல்லையும் எங்கே வருகின்றன?

பிறகு ஏன் அவன் தொட்டதை அப்படி

# கல்கி

13.9.98 இதழ்...

அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ்

இலவச இணைப்பாக ஒரு பொக்கிஷம் உண்டு!

ஒரு வெறுப்புடன் நிராகரித்தேன்? வெறுப்பு என்று சொல்ல முடியாது. பயமா, திடீரென்று ஏற்பட்ட ஆனந்தக் கிளர்ச்சியா, நீயுமா என்கிற அதிர்ச்சியா, எல்லாவற்றின் கலவையா?

என் முகத்தில் வெளிப்பட்ட உணர்வு எப்படி இருந்ததோ, அவன் மிரண்டு போனது மட்டும் தெரிந்தது. அந்த மட்டோடு நான் ஓடி வந்து விட்டதில் அவன் என்னபாடு பட்டிருப்பான் என்று நினைக்க அடிவயிற்றில் ஏதோ உணர்வு கவ்விப் பிடித்தது.

தலையணையை இறுக்கிக் கொண்டேன்.

காதல் ஒன்றில்தான் பெண்ணின் முழு ராஜ்யம். ஆம்பளையை இஷ்டத்துக்கு ஆட்டி வைக்க முடிகிறது. சொன்னதெல்லாம் கேட்டான். குச்சி ஐஸ் கேட்டாலும் வாங்கித் தந்தான். நீயும் தின்னணும் என்ற போது பெரிய கம்பெனியின் கம்ப்யூட்டர் இன்ஜினீயர் என்பது மறந்து குச்சி ஐஸ் சாப்பிட்டான்.

ஒரு சமயம் அவன் தன்னுடைய ஆபீஸுக்குக் கூட்டிச் சென்றான். அவனுடைய கம்ப்யூட்டர் செண்ட்டரில் நான்கு பெண்கள். மூன்று பேர் என்னை விட அழகு. நுனி நாக்கு ஆங்கிலம். நாசூக்கான அசைவுகள். அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவர்களின் கண்கள் விரிவதும் அவன்தான் கூச்சமாக விலகியதும் நிமிஷத்தில் அளக்க முடிந்தது. என்னைத் தன்னுடைய வுட்பீ என்று அறிமுகம் செய்து வைத்தான். அவர்கள் பொறாமையில் கருங்குவது தெரிந்தது. யு ஆர் வெரி லக்கி என்ற பாராட்டு கூடக் கொஞ்சம் ஏக்கப் பெருமூச்சில் கருகித்தான் வெளிப்பட்டது.

நான் இப்படி அதிகமாய் அலட்டிக் கொண்டு ஒதுங்கிப் போக, அவர்களில் யாராவது...

எண்ணமே பகீரென்றது. எழுந்து உட்கார்ந்தேன்.

நாளை அவனைச் சந்தித்தே ஆக வேண்டும்.

'நீ நிஜமாகவே சேலை கட்டியபடி சதாம் உசேன்தான். எதுக்கும் ஜாக்ரதையா தள்ளியே உட்கார்ந்துக்கறேன் தாயே!' என்று அவன் மனம் லேசாகிச் சிரித்தபடியே சொன்ன போது அதைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

என்னப்பா பண்ண? இந்த நாலு நாளில் உன்னைப் பார்க்க வந்திருந்தா, நான் இருந்த நிலையில் கட்டுப்பாடு இழந்து நானே உன்னைக் கட்டி அழுது மன்னிப்புக் கேட்டிருப்பேன். நம்ம ரெண்டு பேர் நிலையுமே எக்கச்சக்கமாகியிருக்கும். அதான் ஒதுங்கி ஒதுங்கி ஓடினேன் என்று சொல்ல முடியுமா, என்ன?

''ம்... அது அப்படித்தான்'' என்றேன் கண்ணீரை மறைத்துக் கொண்டு.



கண்ணம்மாவின் மரண ஓலமும், மாமா என்ற அழைப்பும் அவனை ஆஸ்பத்திரி நோக்கி ஈர்த்தது.

புத்திக்கும் மனதுக்கும் நடக்கும் போட்டியில் வழக்கம் போலவே புத்தி தோற்றது.

சேது தன் மேக்கப் பெட்டியைத் திறந்தான். கூடவே சூட்கேஸையும்.

எதிரிகளை ஏமாற்ற மட்டும்தான் வேஷம் போட வேண்டுமா? நண்பர்களை ஏமாற்றவும் போடலாமே!

என்னவாக மாறலாம்?

# கிண்டு

ஐயர் வேஷம்? குடுமி இருக்கிறது. வேட்டி இருக்கிறது. பூணூல் இருக்கிறது. பட்டை, பட்டையாய் நெற்றி நிறைக்க நீரில் குழைத்த விபூதியும், உச்சிக் குடுமியுமாய் தெருவில் போனால்.... பலரின் கவனிப்பு தன் மேல் படும். வேண்டாம்.

முசல்மான் வேடம்? கைலி, ஒட்டுத்தாடி, தலையில் வெள்ளைக் குல்லா, சந்தன நிற பைஜாமா, சலாம் அலைக்கும்?

இந்தத் தெருவில் முஸ்லீம் குடும்பம் ஒன்று கூட இல்லை. தெருவுக்குப் புதியவராய் யார் இவர் என்ற கேள்விப் பார்வைகள் விழலாம். நோ!

வருகிறேன் என்று கிழவியிடம் சொல்லிவிட்ட பின்பும், சேதுவின் மனசு முழுக்கத் தயக்கம்.

'தேவையற்ற வம்பில் சிக்கிக் கொள்ளாதே.'

புத்தி எச்சரித்தது. கூடவே மனசு வம்புக்கிழுத்தது.

சூட்கேசிலிருந்த புடைவை கண்ணில் பட்டது. மனசுக்குள் பட்சி சடசடத்தது.

அதுதான் சரி! சேது இப்போது சேது மணி ஆகப் போகிறான்.

மெல்லிய சீட்டி ஒலியுடன் காரியத்தில்

இறங்கினான். மீசை, தாடியில்லாமல் மழமழ வென மழித்தான். கண்களில் மெல்லிய மைத்தீற்றல், உதட்டில் உறுத்தாத லிப்ஸ்டிக், ஸ்டிக்கர் பொட்டு, கைகளில் பிளாஸ்டிக் வளையல், காலில் மெட்டி, இப்போது உடம்பில் சேலை, வெயிலை மறைக்கும்விதமாய் சேலையை முக்காடிட்டபடி சென்றால்... ஒரு பயலுக்கும் அடையாளம் தெரியாது.

கண்ணாடியில் தெரிந்த பெண்மணியைக் கண்டு கண்ணடித்தான். பரவாயில்லை அழகாயிருக்கிறாள்.

வேஷம் ஓகே! எப்படிப் போவது? வாசல் வழி கூடாது. கழுகுகளின் பார்வை அங்கேயே அடைகாக்கும்.

# ஒண்ணு வெச்சிருக்கேன் 3

பின்புறம் அடுத்த வீட்டு காம்பவுண்ட் சுவர் ஏறினால், அவர்கள் வீட்டு மொட்டை மாடி வரும். அடுத்த மூன்று வீடுகளை அப்படியே தாண்டிப் போய் விடலாம். மூன்றாவது வீட்டின் பின்புறம் பொட்டல் வெளி. அடுத்த தெரு வந்துவிடும்.

வாசல் கதவைப் பூட்டினான். உள்ளிருந்தும் திறக்கலாம். வெளியிலிருந்தும் திறந்து பூட்டலாம். கொல்லைப்புறம் பார்வையை அலைய விட்டான்.

வாழ்க டீவி மோகம்! சுவர் ஏறிக் குதித்தான். மொட்டை மாடியில் குரங்கு சேட்டை. இதோ மெயின் ரோடு. பஸ் பிடித்தான். பெண்கள் இருக்கையிலேயே மறக்காமல் அமர்ந்தான்.

அரசாங்க ஆஸ்பத்திரி வாசலில் வழக்கமான திருவிழாக் கூட்டம். அனைவர் முகங்களிலுமே ஏழைமை படிந்திருந்தது. காசிருந்தால் ஏன் இங்கு வருகிறார்கள்?

கிருஷ்ணா

பெண்கள் வார்டுப் பக்கம் போனான். 'உயிருக்கு ஒன்றும் பயமில்லை' என்று கிழவி சொன்னாளே, அப்படியானால், ஜெனரல் வார்டில்தான் இருப்பாள்.

இப்படியேவா போவது? சந்தேகப்பட மாட்டாளா?

டாய்லெட்டினுள் நுழைந்தான். ஞாபகமாய் ஆண்கள் டாய்லெட். பத்து நிமிடத்தில் சேதுவாய் வெளியே வந்தான். பிளாஸ்டிக் பைக்குள் பெண்மை சமாசாரங்களை அடக்கியிருந்தான்.

இதோ பெண்கள் பகுதி! அதோ கட்டிலில் கண்ணம்மா.

ஆறாவது கட்டிலில் படுத்துக் கிடந்த கண்ணம்மாவின் பார்வையும் இவனைக் கண்டு விட்டது. முகத்தில் மத்தாப்பு மலர்ச்சி.

அது பெரிய ஹாலாய் இருந்தது. பக்கத்துக்குப் பத்து கட்டில்கள். நடுவில் நடைவழி. கட்டில்கள் அருகே சிறிய டேபிள். சாப்பாடு, பழம், ப்ளாஸ்டிக் சமாசாரங்கள் அதன் மேல். பரவாயில்லை, அரசாங்க ஆஸ்பத்திரி கூட சுத்தமாயிருக்கிறதே? யாராவது மந்திரி இன்று விசிட் அடிக்கிறாரோ?

கண்ணம்மாவை நெருங்கி, கட்டிலின் அருகே போய் நின்றான்.

" வருவேன்னு நிச்சயம் தெரியும் மாமா."

பலஹீனமான குரலிலும் சந்தோஷத் துள்ளல் தெரிந்தது.

"இப்படி உட்காருங்க."

கட்டிலைக் காண்பித்தாள். அவன் உட்காரவில்லை.

''பாட்டி, டீ குடிச்சுட்டு வரேன்னு போச்சு. அதுக்குப் புகையிலையும், டீயும் தான் உசிரே.''

கண்ணம்மாவின் கை நீண்டு, அவன் கையைப் பற்றி, இழுத்து, உட்கார்த்தி வைத்தது.

''இதோ பாரு எனக்கு நேரமில்லே, எதுக்கு வரச் சொன்னே?''

வறட்சியான குரலில் கேட்டான். கண்ணம்மாவின் கண்களில் 'முணுக்'கென கண்ணீர்.

''எப்படி இருக்கே கண்ணம்மா? 'அடி

பலமா? வலிக்குதான்னு கூடக் கேட்கத் தோணலியா உங்களுக்கு?''

சேது திணறிப் போனான்.

''ஏதோ தலைக்கு வந்தது தலைப் பாகையோட போன மாதிரி ஆயிடுச்சுன்னு சந்தோஷப்பட்டேன். விட்டேற்றித்தனத்தைப் பார்க்கறப்ப, பேசாம குண்டு நெஞ்சிலேயே பாய்ஞ்சிருக்கலாம்னு தோணுது.''

குரல் மெலிந்து ஒலித்தாலும், வார்த்தை வலுவில், சேதுவுக்கு வலித்தது.

வயிற்றைச் சுற்றிப் போடப்பட்டிருந்த வெள்ளை நிற பேண்டேஜைப் பார்த்தான்.

"எதுவுமே பேச மாட்டீங்களா?"

கண்ணம்மாவை நேருக்கு நேராய்ப் பார்க்க முடியாமல் கூசினான்.

"நான் போகணும்!"

"எங்கே? குண்டு வைக்கவா?"

கண்ணம்மா கேட்டதும் துடித்துப் போய் எழுந்தான். அதிர்ச்சியில் உறைந்து போய் அவளைப் பார்த்தான்.

"எ... என்ன உளர்றே?"

கண்ணம்மா ஒரு நொடி கண்ணை மூடிக் கிடந்தாள். முகத்தில் வேதனை ரேகைகளின் ஓட்டம்.

"ஏய், என்னமோ சொன்னியே, கனவு ஏதும் கண்டியா?"

சேது அடிக்குரலில் சீறவும், கண் திறந்து பார்த்தாள்.

''கனவு இல்லை. என் கண்ணாலும் பார்த்தேன். காதாலும் கேட்டேன்.''

"என்ன கேட்டே? எப்ப கேட்டே?"

சேது அவசரமாய் வினவினான்.

"ஸ்! மெல்லப் பேசுங்க. விஷயம் விபரீதமானது இல்லையா?"

கண்ணம்மா எச்சரிக்கையைக் காதில் வாங்கியபடி, கண்களால் முறைத்தான்.

"நீயும், அந்த தாடிக்காரனும் பேசிக்கிட்டதை ஒட்டுக் கேட்டேன் மாமா. அவன் உசரமும், வில்லத்தனமான மூஞ்சியும், நரிக் கண்ணும், ப்ச! வேண்டாம் மாமா இது.''

சேது அதிர்ந்து போனான் ஒரு நிமிடம். இவளுக்கு விஷயம் கசிந்து விட்டது தெரிந்தால் இருவருமே தீர்ந்தோம். மனசில் பயம் இருளாய்!

"செத்துப் போன என் மாமன் உயிரை விட்டது நம்ம நாட்டைக் காப்பாத்தத்தான். காஷ்மீர் எல்லையிலே, பாகிஸ்தான்காரனோடு வந்த மோதலிலே உயிரை விட்டுட்டாரு அவரு. அவரோட இடத்தை உங்களுக்குக் கொடுத்திருக்கேன் என் மனசுலே. அந்த உரிமையிலே சொல்றேன், வேண்டாம் இது. விட்டுடுங்க.''

ஏற்கெனவே மெலிந்து கிடந்த குரல், அவளின் கெஞ்சலில் மேலும் இறங்கி ஒலித்தது.

''கண்ணம்மா, நீ ஏதேதோ கற்பனை பண்ணிக்கறே? அதாவது...''

கண்ணம்மா சைகையால் தடுத்தாள்.

"பொய் வேண்டாம் மாமா! மசூதியிலும், கோவிலிலும் குண்டு வெடிக்கணும். அதுதானே உங்க திட்டம்?"

சேது சுற்றுமுற்றும் பார்த்தான். நல்ல வேளை, யாரும் அவர்களை கவனிக்கவில்லை. அவரவர் சோகம் அவரவர்க்கு.

''நான் படிக்காதவதான். கொஞ்சம் வெகுளிதான். ஆனாலும் புரிஞ்சுக்க முடியுது மாமா. அமைதியாய் இருக்கற ஊர், ரெண்டு படணும். ரோட்டிலே பிணமாய் கிடக்கணும். வீட்டுக்குள்ளேயே ஜனங்க கிடந்து அவதிப்படணும். கணவனை இழந்த நிறைய பெண்கள், அநாதையாய் அலையணும். இது தானே உங்க அரக்கத்தனமான திட்டம்?"

"கண்ணம்மா, ப்ளீஸ்...''

''மாமா இது ரொம்பக் கொடுமை! ஜாதித் தகராறிலேதான் எங்கப்பா செத்துப் போச்சாம். பாட்டி சொல்லும். அதனாலே எங்க குடும்பம் பட்ட கஷ்டம் மாதிரி வேறு யாரும் பட வேண்டாம். தேசத்துக்காக உயிரை விட்ட என் மாமா மேலே சத்தியமாய்க் கேட்கறேன், இந்த நாசமான வேலை வேண்டாம்.''

மூச்சிறைக்கப் பேசுபவளை பயத்துடன் நோக்கினான்.

''பெத்த அம்மாவையே கற்பழிக்கற மாதிரியான காரியத்தை கைவிட்டுடுங்க.''

கடைசி வரிகளை ஆவேசமாய்ச் சொன்னவளின் தலை தடாலென சாய்ந்தது.

ஐயோ, என்ன இது? செத்துத் தொலைத்து விட்டாளா? "நர்ஸ்."

அலறினான் சேது. டூட்டி நர்ஸ் ஓடி வந்தாள். நாடி பிடித்துப் பார்த்தாள். ஓடிப் போய் டாக்டரை அழைத்து வந்தாள்.

ஸ்டெதாஸ்கோப் வைத்துப் பார்த்தார் டாக்டர்.

"டோண்ட் ஒர்ரி. களைப்புதான். அதிகம் பேசக் கூடாதுன்னு சொன்னா யார் கேட்கறாங்க? நீங்க இந்தப் பொண்ணுக்கு என்ன உறவு? புருஷனா?"

''இல்லை டாக்டர், சொந்தக்காரன்.''

''அநாவசியமாய்க் கூட்டம் போடாதீங்க.

அதிகமாய்ப் பேச்சுக் கொடுத்து எனர்ஜியை வேஸ்ட் பண்ண வைக்காதிங்க. பார்த்தாச்சுன்னா, போய்க்கிட்டே இருங்க. சிஸ்டர், இந்தப் பொண்ணோட யார் தங்கியிருக்காங்க?"

புகையிலையை வாயில் அடக்கியபடி கிழவி எங்கிருந்தோ முளைத்தாள்.

இதுதான் சமயம்! சேது நழுவினான் அங்கிருந்து.

"நீங்க இவ புருஷனா?"

டாக்டரின் கேள்வி அவனுக்குள் ரீங்கரித்தது. சாலைக்கு வந்தான். பஸ் நிறுத்தத்தில் புது மண ஜோடி ஒன்று உலகை மறந்து



**"ஆசையா இருக்குங்க... படகுச் சவாரி செய்துட்டு வரட்டுமா?"**

**"வேண்டாம் ராணி! ஆற்றிலே உள்ள முதலைகள் பயந்துக்கும்!"**

**— உ. ராஜாஜி**

பேசிக் கொண்டிருந்தது, நெருக்கமாய் நின்றபடி.

ஒரு நொடி, சேதுவின் மனத்திலும் ஏக்கம். தனக்கும் மனைவி, குடும்பம், குழந்தை...

ப்ச, என்ன இது அநாவசியக் கற்பனை? தலையைச் சிலுப்பிக் கொண்டான். அடம் பிடிக்கும் ஆசையை அடக்கினான்.

நாளை சீக்கிரம் விடிந்தால் பரவாயில்லை!

சீக்கிரமே குண்டு வைத்து விட்டு, சீக்கிரமே கண்ணம்மாவிடமிருந்து நகர்ந்து விடலாம்.

ஆசாபாசங்கள் எல்லாம் தன்னைப் போன்றவனுக்கு ஒத்து வராது.

**வீ**ட்டுப் படி ஏறும் போதே மனசுக்குள் குறக்களி சத்தம். ஏதோ ஆபத்து!

மெல்ல நிதானித்துப் படி ஏறினான். கதவைத் தொட்டான்.

ஐயோ, என்ன இது! கதவு தொட்டதுமே திறந்து கொண்டது கண்டு அதிர்ந்தான்.

நன்றாய் ஞாபகமிருக்கிறதே! பூட்டிய கதவு எப்படித் திறந்திருக்கிறது? தன்னிடம் ஒரு சாவியும், மற்றொரு சாவி மாஸ்டரிடமும் அல்லவா உள்ளது?

அப்படியானால்... அப்படியானால்?

இதயத்தில் கடலலையின் ஆர்ப்பரித்த சப்தம், புயலின் சீற்ற சப்தம்.

தடதடவென வீட்டுக்குள் ஓடினான். உள் அறைக்குள் நுழைந்தான்.

காணவில்லை! வெடிகுண்டுப் பார்சல்களைக் காணவில்லை.

அவன் சந்தேகப்பட்டது சரிதான்! பெண் வேடமணிந்து, சுவர் ஏறிக் குதித்து இவன் எத்தனை சாமர்த்தியமாய் நடந்து கொண்ட போதிலும், மாஸ்டரின் கண்களும், காதுகளும் அதைவிட அதிக சாமர்த்தியமாய் இருந்திருக்கிறது.

ஆஸ்பத்திரிக்குத் தான் போனது மாஸ்டருக்குத் தெரிந்து விட்டிருக்கும்.

பெண் மோகத்தில் சிக்கி விட்டான் என்ற தப்பான கணக்கில் இவன் மாட்டிக் கொண்டு விட்டான்.

வெடிகுண்டுகளை அப்புறப்படுத்தியதுமே புரிந்து விட்டது. அடுத்து அப்புறப்படுத்தப்போவது இவன் உயிரைத்தான்.

மாஸ்டரின் நம்பிக்கையை இழந்தாகி விட்டது. இனி வாழும் மணி நேரங்கள் எண்ணப்பட்டு விடும்.

தர்பாருக்கு அழைப்பு வரும். விசாரணை ஏதுமின்றி தண்டனை வழங்கப்படும்.

உயிர் போகப் போவது நிச்சயமாகி விட்டது. உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் விட மாட்டார்கள். துரோகிகளுக்கு மாஸ்டரின் சாம்ராஜ்யத்தில் மன்னிப்பே கிடையாது.

மாஸ்டருக்கு துரோகியாகி விட்டான்! கண்ணம்மாவுக்கு?

"பெத்த தாயைக் கற்பழிக்கப் போறீங்களா?"

நோ! கண்ணம்மா மேல சத்தியம். நாளைக்கு குண்டு வெடிக்கக் கூடாது! அவன் பைத்தியம் போலப் பெரிதாய் அலறினான்.

(தொடரும்)

## பிரபலங்களின் மறுபாதி : ஜெயம் லேனாதமிழ்வாணன்

“பத்திரிகை, டீ.வீக்கெல்லாம் பேட்டி கொடுத்து எனக்குப் பழக்கமில்லை. 'இவ்வளவு மீடியா ஷை' ஆக இருக்காதே என்று என் கணவர் கூட அடிக்கடி சொல்லுவார். ஒரு தடவை, ஒரு தனியார் டீ.வி.யில், வி.ஐ.பி.யுடன் ஒருநாள் என்ற நிகழ்ச்சிக்காக அணுகினார்கள். இவருக்கு அதில் இஷ்டம் தான். ஆனால் நானும் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் மறுத்து விட்டேன். அதனால், இவரும் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாமல் போய்விட்டது” என்றார் ஜெயம். லேனா தமிழ்வாணனின் மறுபாதி.

“சொந்த ஊர் காரைக்குடி. அப்பாவுக்கு பிசினஸ் மாயவரத்தில். எனவே பள்ளிப் படிப்பு மாயவரத்திலும், அதன்பின் காரைக்குடியிலுமாக முடிந்து, ஒரு வருடம் வீட்டில் சும்மா இருந்தபின் கல்யாணத்துக்குப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

“இரண்டு குடும்பத்துக்கும் பொதுவான ஓர் உறவினர் மூலம் எங்கள் திருமணம் முடிவானது. என்னைப் பெண் பார்க்க வந்த போது, இவர் என்னுடன் தனியாகப் பேச வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார். ஆனால் வீட்டுப் பெரியவர்கள், அதற்கு அனுமதி தரவில்லை. அதே போல, இன்னொரு மறக்க முடியாத விஷயம். என் கணவரின் வீட்டைச் சேர்ந்தவர்கள் அன்றைய தினம் வந்த போது தமிழ்வாணன் யார் என்று என்னால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. காரணம், தமிழ்வாணன் தமக்கேயுரிய பிரத்யேக ஐட்டங்களான தொப்பி, கறுப்புக் கண்ணாடி இல்லாமல் வந்திருந்ததுதான்!

“இன்னொரு விஷயம் தெரியுமா? என்னைப் பெண் பார்க்க இவர் வந்த சமயத்தில், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ. இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்தார். என் மாமனார், ஏப்ரல் மாதம் எம்.ஏ. பரீட்சை இருக்கிறது. அது முடிந்ததும், திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்றார். ஆனால், என் அப்பா நிச்சயம் பண்ணின பிறகு, அத்தனை

# ஹனிமூனுக்குப் போனோம்... துரத்தி வந்தார் மாமனார்!



நாள் திருமணத்தைத் தள்ளிப் போட வேண்டாம் என்று சொன்னார். ஆகவே, அவர் படித்துக் கொண்டிருந்த போதே எங்கள் திருமணம் நடந்தது.

“கல்லூரிக்கு ரொம்ப நாள் லீவு போட முடியாது என்று சொல்லி, எங்கள் தேன்நிலவு கூட ரத்தானது! இவர் பரீட்சைக்குப் படிப்பார். நான் அவ்வப்போது டீ போட்டுக் கொடுத்துக் கொண்டு, படிப்புக்கு எந்தவித தொந்தரவுமின்றி நடந்து கொள்ளுவேன். 'பரீட்சை சரியாக எழுத முடியாமல் போய் விட்டால், இவள் வந்த நேரம் சரியில்லை' என்று யாராவது சொல்லி விடுவார்களோ என்ற பயம்தான் காரணம்!

“ஒருவழியாய்ப் பரீட்சை முடிந்தது. தேன் நிலவுக்காக, மகாபலிபுரம் போனோம்.

“சிறியவர்கள் இரண்டு பேரும் தனியாய்ப் போயிருக்கிறார்களே! நல்லபடியாய்த் திரும்பி வர வேண்டுமே என்ற கவலை என் மாமனார், மாமியாருக்கு. சென்னையிலிருந்து எங்களுடன் டெலிபோனில் பேச முயற்சி செய்திருக்கிறார்கள். முடியவில்லை. ரொம்

பக் கவலைப்பட்டுப் போய், காரை எடுத்துக் கொண்டு, இரண்டு பேரும், எங்களைத் தேடிக் கொண்டு, மகாபலிபுரத்துக்கே வந்து விட்டார்கள்! மறக்க முடியாத ஹனிமூன் அனுபவம்!

“எங்கள் திருமணம் நடந்த வருடம், தலைதீபாவளி சமயத்தில் என் மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை. ஆனாலும், என்னை தீபாவளிக்கு சில நாட்கள் முன்னரே ஊருக்கு அனுப்பி வைத்து விட்டார். 'அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்பதால், ஒரு வேளை, நான் தலை தீபாவளிக்கு வர முடியாமலும் போகக் கூடும்' என்று இவர் என்னிடம்



கூறியபோது, "எனக்கு எல்லாம் சரியாகி விடும். தலை தீபாவளிக்கு, மாப்பிள்ளை வராவிட்டால், அவர்கள் வீட்டில் ரொம்ப வருத்தப்படுவார்கள். நீ கண்டிப்பாகப் போய் வரத்தான் வேண்டும்" என்றார்.

தீபாவளிக்கு முதல் நாள் என் கணவரும் ஊருக்கு வந்தார். தீபாவளி கோலாகலமாய் முடிந்து, அன்று இரவே சென்னைக்குப் புறப்பட்டு விட்டோம். சென்னை வந்து சேர்ந்த போது, மாமனாரின் மரணச் செய்தி எங்களுக்குக் காத்திருந்தது!

“இப்போதும் எங்களுடையது கூட்டுக் குடும்பம்தான். லேனாவின் தம்பி ரவியின் மனைவி வள்ளி. நாங்கள் இரண்டு பேரும் சகோதரிகள் போலத்தான் வாழ்கிறோம். ஷாப்பிங் என்றால், இரண்டு பேரும் ஒன்றாகத்தான் போவோம். ஒரே கலரில், டிசைனில், இரண்டு பேருக்கும் பிடித்த மாதிரியாய், இரண்டு புடைவைகளாக இருந்தால் மட்டுமே வாங்குவோம். இரண்டு புடைவைகள் இல்லாத காரணத்தால், நல்ல டிசைன் புடைவைகள் பலவற்றை நாங்கள் மிஸ் பண்ணியிருக்கிறோம்!

"திருமணத்தின்போது, தமிழ்வாணன், 'இந்தப் பெண்ணால, நம்ம வீட்டுல ஒரு பிரச்னையும் வராது' என்று கூறினார். அதை இன்றளவும் நான் காப்பாற்றி வருகிறேன். எனக்கும், வள்ளிக்கும் இடையே சண்டை வந்தது கிடையாது.

"என்னுடைய ஒரிஜினல் பெயர் நாச்சம்மை. திருமணத்துக்குப் பின், மாமனார் தான் ஜெயம் என்று பெயரை மாற்றினார். எங்கள் திருமணம் முடிவாக முக்கியக் காரணமாக இருந்த உறவுக்காரப் பெண்மணியின் பெயரும் அதுதான்."

லேனா தம்பதிக்கு இரண்டு பையன்கள். பெரியவன் அரசு ராமனாதன் (இரண்டு தாத்தாக்களின் பெயரும் ராமனாதன்தான். ஒருவருக்குப் புனை பெயர்தான் தமிழ்வாணன்) அண்ணாமலைப் பல்கலையில் நாலாம் வருடம் இஞ்ஜினியரிங் மாணவன். கவிதைகள் எழுதுவதுண்டு. அடுத்தவன் ஆனந்த் சுப்ரமணியன். பிளஸ் ஒன் படிக்கிறான்.

சந்திப்பு : **பாரதி மௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**

# ஒரு கோடி என்பது பகல் கனவல்ல..!

"இது மக்கள் பணம்'மா. நீங்க கேட்கிற மாதிரி தூக்கிக் கொடுத்துவிட முடியாதே!" என்று ஒருவரிடம், கனிவாக-

"மாசாமாசம் வட்டித் தொகையைக் கட்டிடணும் பெரியவரே! ஆர்.டி.யையும் மறக்காம கட்டணும்!" என்று இன்னொருவரிடம், பணிவாக-

"கடிதம் சரியாகத்தான் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள்- ஆனால் தேதி போடக் காணமே?" என்று மற்றொருவரிடம், புன்சிரிப்பாக-

"இவரைக் கொஞ்சம் சீக்கிரமாகக் கவனித்து அனுப்புங்களேன்... ரொம்ப நேரமாகக் காத்திருக்கிறார் இல்லே?" என்று உதவியாளரிடம், மெதுவாக-

வி.ஐ.பி.கள், சினிமா-கலைத் துறை அன்பர்களிடம், பரிவுடன் விசாரிப்புகள். டஜன் கணக்கில், கையெழுத்துக்காக நீட்டப்படும் பத்திரங்களிலும், ரசீதுகளிலும் கூர்மையான பார்வை; பிறகு கையெழுத்து.

சென்னை பார்க் டவுன் பகுதியைப் போலவே, அங்கே இயங்கி வரும் பார்க் டவுன் பெனிஃபிட் பண்டு உள்ளேயும் நெரிசலாக வாடிக்கையாளர்கள். யாரையும் அதிக நேரம் நிற்க வைக்காமல், ஓசைப்படாமல் இயங்கும் கம்ப்யூட்டர்களின் உதவியோடு, அவர்களை மளமளவென்று கவனித்து அனுப்பும் ஊழியர்களிடம் அவ்வப்போது சில கேள்விகள்—

இந்த 'அஷ்டாவதானி'யின் பெயர் பி. பாலசுப்பிரமணியம்.

"நகரில் அடைமானம் வைக்கும் சொத்துகளின் பத்திரங்களை வழக்கறிஞர்கள் பரிசீலனை செய்த பிறகு, நேரிடையாகப் போய் இன்ஸ்பெக்ஷன் முடித்து, கடன் தொகையை வழங்குவதற்கு அதிகபட்சம் நான்கு நாட்கள்தான் எடுத்துக் கொள்கிறோம்!" என்று பாலசுப்பிரமணியம் நம்மிடம் சொன்னபோது, எதிரே இருந்த நபர் குறுக்கிட்டு, "இல்லே சார், எனக்கு மூணாவது நாளே செக் கைக்கு வந்திட்டுது!" என்றார்.

"கார்ப்பரேஷன் வரி ரசீது, வில்லங்க சர்ட்டிஃபிகேட், பத்திரம் எல்லாம் முழுமையாக இருந்து விட்டால் மூன்றே நாளில் தொகையைக் கொடுப்பது சாத்தியம்தான்!" என்கிறார் பாலசுப்பிரமணியம்.

**பா**லசுப்பிரமணியம் இத்தனைக்கும் நிதித்துறையிலிருந்து வந்தவர் அல்ல. வானொலியிலும், தொலைக் காட்சியிலும் பொறியாளராக இருந்து, ரிடையராகிற தேதிக்கு முன்பே ஓய்வு பெற்று வந்து, பார்க் டவுன் பெனிஃபிட் பண்டு நிறுவனத்தின் கௌரவ ஆலோசகராகப் பணியாற்றத் தொடங்கியவர்.

"நான் இந்தப் பகுதியிலேயே பிறந்து, வளர்ந்து, படித்தவன். என் பெற்றோர் வழி வழியாக நடத்தி வந்த இரும்புக் கடையையும் பார்த்துக் கொள்ளுகிறேன். இந்தப் பகுதி மக்கள் என்னை நன்கு தெரிந்தவர்கள். நகையையும், சொத்துகளையும் அதிக வட்டிக்கு அடகு வைத்து விட்டு, அவற்றை மீட்க முடியாமல் இழந்த பல குடும்பங்களை எனக்குத் தெரியும். பல வருஷங்களாக, இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று யோசனை செய்து கொண்டே இருந்தேன். அதில் உரு



• பாலசுப்ரமணியம்

வானதுதான் இந்த நிறுவனம். சேமிப்பு, வாழ்க்கையில் அவசியம் என்று எல்லாரிடமும் சொல்லுவேன். அவர்களின் சேமிப்புக்கு உதவ வேண்டும் என்றுதான் ரிக்கரிங் டெபாசிட், வெகுமதி டெபாசிட், கனகதாரா டெபாசிட் என்று பல திட்டங்களை வகுத்தேன்.

"இப்போது ஒரு கோடி ரூபாய் என்பது நமது பேச்சில், வழக்கத்தில் அடிபட

ஆரம்பித்திருக்கிறது. உங்கள் சேமிப்பின் மூலம் நீங்களும் அல்லது உங்கள் பேரன்-பேத்திகளும்கூட, கோடீசுவரர் ஆக முடியும்!'' என்கிறார் பாலசுப்பிரமணியம், அழுத்தமாக.

''எப்படி?''

''50,000 ரூபாயை இன்று முதலீடு செய்யுங்கள்.



• பார்க் டவுன் பெனிஃபிட் பண்டு அலுவலகத்தின் உள்ளே...

பத்து வருடம் கழித்து, இந்த 50,000 ரூபாயை நீங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இதன் வட்டித் தொகை குட்டி போட்டு, 20 வருஷங்களுக்குப் பிறகு ஒரு கோடி ரூபாயாக உங்களுக்கோ, உங்கள் வாரிசுதாரருக்கோ கிடைக்கும். நம்புவதற்குக் கஷ்டமாக இருக்கிறது இல்லையா? கையில் ஒரு கால்குலேட்டர் இருந்தால், கணக்குப் போட்டுப் பாருங்கள். 18.3868% சதவிகிதம் வட்டி!''

பென்ஷனர் நலத்திட்டத்தில் 19½ சதவிகித வட்டி. ''ஆயுசு முழுக்க, சம்பாதித்த மொத்த தொகையையும் நம்மை நம்பி இங்கே முதலீடு செய்கிறார்கள் என்றால், அதற்கு அவர்கள் நம் மீது வைத்திருக்கும் நம்பிக்கைதான் காரணம்!''

''நானே ஓய்வு பெற்றபோது, இருபத்துநாலு வருட உத்தியோகத்துக்கு, இரண்டு லட்ச ரூபாய்கூட முழுசாகக் கிடைக்கவில்லை. அப்போது யோசித்தேன்: நிரந்தரமான வேலை உள்ள ஒருவர், மாதம் நூறு ரூபாய் வீதம், 25 வருடங்கள் தொடர்ந்து சேமித்தால் மூன்று லட்சம் கிடைக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினேன்!''

1991ல், கம்பெனி லா போர்டின் 620-A அனுமதி பெற்ற நிதி கம்பெனியாக அங்கீகாரம் பெற்ற பிறகே அதீத வளர்ச்சி.

இது தவிர, சிந்தாதிரிப்பேட்டை கந்தசாமி பெனிஃபிட் ஃபண்டு, புரசைவாக்கம் ஸ்ரீ முத்துக்குமாரசாமி பர்மனன்ட் ஃபண்டு நிறுவனரும் இவர்தான்.

''அந்தந்தப் பகுதி மக்களின் நிதித் தேவையை அந்தந்தப் பகுதி நிறுவனங்களே பூர்த்தி செய்ய வேண்டும் என்பதுதான் என் குறிக்கோள்!'' என்கிறார் பாலசுப்பிரமணியம்.

கந்தகோட்டம் என்று புகழ்பெற்ற அருள்மிகு முத்துக்குமாரசாமி கோயிலின் முதன்மை அறங்காவலர் என்ற முறையில், காலையில் முருகனை வணங்க வந்துவிடுகிறார் பாலசுப்பிரமணியம்.

உள்ளே போனால் பிரம்மாண்டமாக இருக்கிறது கோயில். உள்ளே திருக்குளம்கூட! சிதம்பரத்தில் இருக்கிற 108 கரணங்களையும் இரண்டு பெரிய மரக் கதவுகளில் வெகு நுணுக்கமாகச் சிற்பி செதுக்கியிருப்பதையும், ஒவ்வொரு கரணத்தின் பெயரையும் சுட்டிக் காட்டினார்.

யாத்திரிகர்கள் இலவசமாக உண்ணும் மண்டபமும் மடைப்பள்ளியும் வசந்த மண்டபமும் வசதியான இருக்கைகள் கொண்ட ஆடிடோரியமும் எல்லாமே பளிச்சென்று படு சுத்தமாக இருக்கின்றன.

திருக்குளத்தில் மேலாக மிதந்து கொண்டிருக்கும் எண்ணெயை உடனே எடுக்கச் சொல்லுகிறார். கூண்டில் இருக்கும் மயில்களுக்குத் தீனி போட்டாயிற்றா என்று விசாரிக்கிறார்.

''இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் நடத்துகிறோம். சமுதாயத்தின் மிகப் பின் தங்கிய மக்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளிகள். இரண்டிலுமே நூறு பர்சென்ட் ரிசல்ட்! ஒரு ஆரம்பப்பள்ளியும் நடத்துகிறோம். இரண்டு டிஸ்பென்சரி நடத்துகிறோம். அப்பாயின்ட்மென்ட் வாங்கி, காக்க வைக்க வேண்டிய நிலையில் உள்ள நிபுணர்கள் இங்கே வெகு எளிமையாக வந்து இலவச மருத்துவ உதவி செய்கிறார்கள். பெனிஃபிட் பண்டு மூலம் கடன் கொடுக்கும்போது, ஒரு சதவிகிதம் ஸ்ரீ முத்துக்குமாரசாமி கல்வி அறக்கட்டளைக்கு என்று வசூலிக்கிறோம். அதுவே இங்கு கல்விப் பணிக்கு வெகுவாக உதவுகிறது!'' என்கிறார் பாலசுப்பிரமணியம்.

— எஸ்.வி.என்.



• எஸ்.பி.பி & சரண்

# பாடும் நிலா; பிறை நிலா!

தேனாம்பேட்டை காமராஜர் அரங்கம். நிற்கவும் இடமில்லாமல் ரசிகர் கூட்டம். பண்பலையில் பிரியாவிஷனின் பிரியமான நேரம் நிகழ்ச்சியில் 225 வாரங்களாக 'பாடும் நிலா பாலு' நிகழ்ச்சி ஒளிபரப்பாவதைச் சிறப்பிக்கும் வகையில் எஸ்.பி.பி.க்கு ஒரு பாராட்டு விழா + அவரது இசை நிகழ்ச்சி.

தமது மகன் எஸ்.பி.பி. சரண், பாட வந்தபோது, எஸ்.பி.பி.யின் அறிமுகம்: "என் இசை வாரிசு என்று சரணைக் குறிப்பிட்டார் கங்கை அமரன். அப்படியெல்லாம் இல்லை. சரண் சாதாரணமானவன். அவனைவிடத் திறமையாகப் பாடக் கூடியவர்கள் எல்லாம் நிறையப் பேர் இருக்கிறார்கள். இவனும், அவர்கள் அளவுக்கு உயர வேண்டும் என்பதுதான் என் ஆசை. இது போன்ற மேடை நிகழ்ச்சிகள் அவனுக்குப் பயிற்சி போல. எனவே, அவன் பாடும்போது, ஏதாவது தவறு இருக்குமானால், தயவு செய்து அதை மன்னித்து, அவனை வாழ்த்துங்கள். அவன் வளர அது ரொம்ப உதவியாக இருக்கும்!"

அடுத்து, சரண் 'நீல வான ஓடையில்' பாடலைப் பாடினார்.

ஏவி.எம். சரவணன், டி. ராஜேந்தர் உட்படப் பலரும் எஸ்.பி.பி.யைப் பாராட்டிப் பேசினார்கள். எஸ்.பி.பி. பேசும்போது சொன்னார்:

"நான் முறைப்படி சங்கீதம் கற்றுக் கொண்டு பாட வந்தவன் இல்லை. கேள்வி ஞானம்தான்.

முறைப்படி கர்நாடக சங்கீதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை எனக்கு இன்னமும் இருக்கிறது. எதிரே உட்கார்ந்திருக்கும் உன்னி கிருஷ்ணன் போன்ற இளைய தலைமுறையினரைப் பார்க்கிறபோது, எத்தனை அற்புதமாய்ப் பாடுகிறார்கள் என்று சந்தோஷமாக இருக்கிறது. அதே சமயம் அவர்கள் கர்நாடக சங்கீதக் கச்சேரிகள் பண்ணுவதைப் பார்க்கிறபோது கொஞ்சம் பொறாமையாகக் கூட இருக்கிறது.

"எத்தனையோ பேர், இசைக்காக எவ்வளவோ தியாகங்கள் செய்திருக்கிறார்கள். ஆனால் நானோ, ஐஸ் வாட்டர், ஐஸ் கிரீம் போன்ற சின்ன விஷயங்களைக் கூடத் தியாகம் செய்வது கிடையாது. இவற்றையும் மீறி நீங்கள் எல்லாம் ரசித்துப் பாராட்டும்படியாய் எனக்குக் குரல் வளம் அமைந்திருக்கிறது' என்றால் அது ஆண்டவன் அளித்த வரப் பிரசாதம்தான்!"

தொகுப்பு : மானஸா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623;
Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)


ஒரு டஜன் கார்கள்
3200 பேருக்கு வெற்றிவாய்ப்பு ரூ. 1 கோடி பரிசு
ஒரு கிலோ தங்கம்
சிங்கப்பூர் - பாங்காக் டூர்
எல்லாம் நிறைந்த இல்லம்
20 கிலோ வெள்ளி
10 மோட்டார் பைக்
18 மொபட்
இன்னும் எக்கச்சக்க பரிசுகள்
விலை ரூ. 65
தினமலர்
3 புத்தகம்
8 சுவாமி படம்
தரமான இலவச பொருட்கள்
தீபாவளி மலர் '98
தினமலர் ஏஜண்ட் அல்லது புத்தக கடையில்
இன்றே உங்கள் பிரதிக்கு முன்பதிவு செய்து கூப்பனை பத்திரப்படுத்துங்கள்.
கூப்பன் அதிவேகமாக தீர்ந்து கொண்டிருக்கிறது.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

